# கதை மலர்கள்

டாக்டர் பொன். சௌரிராசன், M.A., Ph.D

# கதை மலர்கள்

டாக்டர் பொன். செளரிராசன் எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறைப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்,
திருப்பதி.

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-600108

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1977
இரண்டாம் பதிப்பு : ஜூலை, 1980
மூன்றாம் பதிப்பு : ஜனவரி, 1983
நான்காம் பதிப்பு : ஆகஸ்ட், 1984
ஐந்தாம் பதிப்பு : செப்டம்பர், 1986
ஆறாம் பதிப்பு : ஜூலை, 1989
ஏழாம் பதிப்பு : ஆகஸ்ட்டு, 1989
எட்டாம் பதிப்பு : ஆகஸ்ட்டு, 1996

**விலை : ரூ. 20-00**

வெளியீடு :

**தேனக வெளியீடு**
5/47, எஸ். வி. நகர்.
திருப்பதி—517 502.

அச்சிட்டோர் :

ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்.
7/40, கிழக்குச் செட்டி தெரு,
பரங்கிமலை, சென்னை-16.

# அணிந்துரை

**டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,**
எம். ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
**தமிழ்ப் பேராசிரியர்—தமிழ்த்துறைத் தலைவர்**
**சென்னைப் பல்கலைக் கழகம்**

சிறுகதை எழுதுவதென்பது ஓர் அரிய கலை; பெரிய கலையுங்கூட. சொல்லவந்த கருத்தினை வடிவமும் கற்பனையும் புலப்படச் சொல்லில் உணர்வைக் குழைத்து வடித்துத் தரும வனப்பு வாய்ந்த அச்சிறுகதையின் செவ்வியில், சிலரே அதன் தலைப்பட்டு நிற்பர். அத்தகு சிலரில் டாக்டர் பொன். சௌரிராசன் அவர்களும் ஒருவராய் விளங்குகின்றார் என்பது இச் சிறுகதைத் தொகுதியில் விளக்கமுறுகின்றது.

'அம்மா' முதல் 'ஐயோ மகனே' வரையில் அமைந்த பதினொரு சிறுகதைகள் இத் தொகுதியில் அடங்கியுள்ளன. முதற்கதை 'அம்மா' ஒரு சிறந்த கருத்தினை விளக்கும் சீரிய கதையாக அமைந்துள்ளது. இச் சிறுகதையின் தொடக்கமும் முடிவும் கு. பா. ராவின் கதைபோல் அமைந்து கவின்காட்சியினை வழங்குகின்றது. இசைத் தமிழின் ஏற்றமும், இக்கதையின் ஊடே நின்று, பின் இசைத்துறை வழுக்களுக்கு வழிவகுத்துவிடக் கலங்கித் தியங்கிய பெண்ணின் வாழ்வு அதல பாதாளத்தில் விழ விருந்து, சேயின் 'அம்மா' என்னும் அலறல்கேட்டு, மீண்டும் நனவுலகத்திறகு—நல்ல இல்லறவுலகத்திற்கு மீண்ட தாயின் உணர்வுச் சித்திரம், உள்ளவாறே உணர்ந்தவாறே தரப்பட்டிருக்கின்றது. 'காவிரிக் கரையில் பாட்டும் கோதாவரிக் கரையில் இலக்கியமும் இயல்பாகவே வளரும்' என்ற சீரிய உண்மையினைப் பாங்காகப் பின்னணியிற்கொண்டு கதை பின்னப்பட்டுள்ளது.

'பொங்கல் வாழ்த்து' என்னும் இரண்டாவது கதை பெருந்தகைமைசான்ற பேராசிரியர் ஒருவரின் நினைவைச் சுற்றிச் சுழல்கின்றது. பொங்கல் வாழ்த்தினைத் தவறாது தம் மாணவர்க்கு அனுப்பிவரும் பேராசிரியர் உயர் உள்ளப் பாங்கினை நனவோட்டமாக மாணவர் ஒருவர் எண்ணிப் பார்க்கும் திறனில் மிளிர்கின்றது இவ் இரண்டாவது கதை.

'சுமை கரைந்தது' என்று கதை அன்பின் ஆழத்தினை, பாசத்தின் உயிர்த்துடிப்பினை உணர்ச்சித் தெறிப்போடு உணர்த்தி நிற்கின்றது. 'கேட்காமல் வந்தார்கள் : சொல்லாமல் போனார்கள்' என்ற கதை நெருக்கடி மிகுந்த சென்னை, மாநகரில், கேட்காமல் வந்து ஒரு மாணவருடன் அருகே உறைந்து, சொல்லிக்கொள்ளாமல் பிரிந்து போய்விட்ட ஒரு குருவிக் குடும்பத்தின் அன்பு வாழ்வினைப் படம் பிடித்துகாட்டுகின்றது.

'மதகு' என்ற கதை நினைவுப் போராட்டத்தை நிலைக்களமாகக் கொண்டுள்ளது. ஏழை ஆசிரியர் ஒருவரின் இளமை வாழ்வில் குறுக்கிட்ட 'அருந்ததி' என்ற பெண்ணின் மனவுணர்ச்சிகளின் பின்னலாக இக்கதை முகிழ்ந்துள்ளது. அன்பான ஒரு பெண்ணுள்ளத்தின் வளர்ச்சியை அறியத் தவறிவிட்ட ஆசிரியர் மனச்சுமையோடு மதகைவிட்டுப் புறப்படுவதாகக் கதை முடிகிறது. ஆனால் கதை படிக்கும் நம் சிந்தனையோட்டம் அங்கிருந்துதான் தொடங்குகின்றது. 'தங்கை' என்ற கதை, ஏமாற்றமடைந்த ஏழைக் குடும்பத்தின் நடப்பு வாழ்வினை நன்கு சித்திரிக்கின்றது.

'மனங்கழுவ யாதுண்டு?' என்ற கதை 'திரும்பிக் காணல்' (Flash back) உத்தியிற் அமைந்துள்ளது. தவறுதலாகத் 'திருடி'ப் பட்டம் சூட்டப்பட்டு தண்டிக்கப்பட்ட பெண் ஒருத்தி அப்பழியினைத் தாளாது புலம்பி உயிர் விட்ட சோகக் கதையினைச் சொல்லால் உணர்வாக வடித்து நிற்கின்றது. 'பலி' என்ற கதை கற்பின் வெற்றியைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. 'திரிவேணி சங்கமம், எனும் கதை பல்வேறு கதைப் பாத்திரங்களின் உணர்வுச் சங்கமம் ஆக அமைந்திருக்கக் காணலாம். 'நாகரிகம்' எனும் கதை உண்மை நாகரிகர் யார். என்பதன் அங்கதத் தோடு எடுத்துரைத்துச் செல்கின்றது. 'ஐயோ மகனே' என்ற நூலின் இறுதிச் சிறுகதை, ஏமாற்றத்தின் எல்லையை எட்டும் ஏழைச் சிறுவனின் இதயத்துடிப்பை இயற்கையாக எடுத்துக் காட்டுகின்றது.

கதைகளெல்லாம் கருத்தோட்டம் நிறைந்தவை, கற்பனையாற்றல் சிறந்தவை; உணர்வலைகள் கொண்டவை.

காதற்சுவையைக் கணக்காகக் கையாள்கிறார் இச் சிறுகதை ஆசிரியர்.

''அவள் இளமை ததும்பும் அழகும் என்ன வியப்போடு பார்த்த பார்வையும் என் கனவுக்கு நெய்யிட்டன.'' (ப:11)

'மின்னல் தோன்றி மறைந்ததுபோல் இருந்தது, என்னுள் ஒரு பேரலை எழுந்து அடங்கியது.'' (ப : 21)

''ஒட்டி உலர்ந்த அந்த முகத்தில் விளங்கிய இரண்டு கண்களிலும் ஏக்கமும் நம்பிக்கையும் மாறி மாறி ஒளிர்ந்ததைக் கண்டேன்.''

என அமைந்துள்ள பகுதியில் எங்களைளெல்லாம் உருவாக்கி இன்று எங்கள் இதயத்தில் வாழும் பேராசான் மு. வ. அவர்களின் எழுத்தாற்றல் பாங்கினைக் கண்டு உருக, உவக்கத் தோன்றுகின்றது.

இயற்கைமாட்டு எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர், எங்கள் பேராசிரியப் பெருந்தகை மு.வ. அவர்கள், அவர்கள் டாக்டர் பட்ட ஆய்வேடே 'பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை' என்னும் பொருளாகும். அந்தப் பாங்கு மாணவர், நண்பர் சௌரிக்கும் கைவந்திருக்கின்றது என்பது பின்வரும் நூற்பகுதியால் விளக்கமுறும்.

''கடற்கரையில் கிடந்த கிளிஞ்சல்கள் பளிச்பளிச் சென்று மின்னின. அலைகள் ஆத்திரத்தோடு கரையில் மோதின. சில்லென்று காற்று வீசியது. நிலவு மட்டும் அமைதியாக ஒளிவிட்டுக்கொண்டு இருந்தது.'' (ப : 20, 21)

'மாலை வெயில், தென்றல் காற்று, ஆற்று ஓசை, பச்சை வண்ணம், வானவெளி இவை எல்லாவற்றோடும் அந்தக் குரலும் ஒன்றித்துப்போய் என்னையும் ஈர்த்து அவற்றோடு இசைப்பதுபோல் இருந்தது.' (ப : 58)

அரிதில் அமையும் நகைச்சுவையுணர்ச்சியும் ஆசிரியர் எழுத்தில் எளிதாக அமைந்திருக்கக் காணலாம்.

''அந்த நல்ல நாளில் சுபமுகூர்த்தத்தில் தான் எங்கள் மௌனவிரதம் விடைபெற்றுச் சென்றது.''

''நான் மாயவரத்தான்'' என்றேன்.

''எனக்கு வாழ வரம்தான் வேண்டும்'' என்று சொல்லிக் குறும்புச் சிரிப்பொன்றை உதிர்த்தாள். (ப : 12)

ஆசிரியர் செம்மலர், பொன்னி, வள்ளி, ஆண்டாள், அருந்ததி என்று தம் பாத்திரங்களுக்குத் தண்டமிழ்ப் பெயர்களையே சூட்டியிருப்பது அவர் தம் தண்டாத் தமிழ்ப் பற்றினை விளக்கும்.

'தோற்கடிப்பதைவிடத் தோற்பதே மேல் என்று நினைக்கிறேன்.', (ப : 67)

''நான் நிற்கிறேன். நின்று கொண்டேயிருப்பேன்.'' (ப : 84)

முதலான பகுதிகள் ஆசிரியர் தம் இலக்கியப் பெற்றியினையும், சிந்தனைச் செறிவினையும் செப்பவல்லன.

இவ்வாறு ஆசிரியர் டாக்டர் பொன். சௌரிராசன் எம். ஏ., பிஎச். டி., அவர்கள் இச்சிறுகதைத் தொகுப்பின் வழி தாம் ஒரு சிறந்த சிறுகதையாசிரியர் என்பதனைத் தமிழுலகிற்கு அடக்கத்தோடு அறிவித்துக்கொள்கிறார். நெஞ்சையளளும் கற்பனை. விழுமிய உணர்ச்சி, தெளிந்த நடை, சீரிய கருத்து, வனப்பமைந்த வடிவம் முதலியன சிறந்தமைந்த சிறுகதைகளைப் படைத்துத் தந்திருக்கும் பண்பாளரும் நண்பருமான சௌரியின் சிறுகதைகளைத் தமிழ்கூறு நல்லுலகு ஏற்றுப் போற்றுவதாக! அவர்தம் முயற்சி வாழ்க, வெல்க என வாழ்த்துவோம்.

தமிழகம், சென்னை-29.
19-2-77

**சி. பாலசுப்பிரமணியன்**

# நன்றியுரை

இந்தக் 'கதை மலர்கள்' ஏறக்குறைய ஆண்டுக்கு ஒன்றாக மலர்ந்தன. அவை மலர நீராகவும் நிலமாகவும் அமைந்த நண்பர்களுக்கும், இந்த நாட்டுக்கும் நான் நன்றியுடையேன்.

அவ்வப்போது என்னை எழுதத் தூண்டிய திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார், எம். ஏ., பிஎச். டி அவர்களுக்கும், கதை அனைத்தையும் படித்து நல்ல திருத்தங்கள், கூறி ஊக்கிய 'மேம்பாலம்' ஆசிரியர், வழக்குரைஞர் திரு பி. இராமமூர்த்தி, பி. காம்., பி. எல். அவர்களுக்கும், கதைகளைப் படி எடுத்து உதவிய ஆராய்ச்சி மாணவர் திரு. D. செல்லையாவுக்கும், யானும் என் நூல்களும் பொலிவோடும் புகழோடும் வாழவும் வளரவும் துணைசெய்யும் பாரி திரு. K.A. செல்லப்பா அவர்களுக்கும், நூலை விரைவில் நன்கு உருவாக்கித் தந்த அச்சகத்தாருக்கும் என் நன்றி உரியது.

நண்பராய்த் தோன்றி, பின் நல்லாசிரியராய் விளங்கி, என்றும் அண்ணனாய் அமைந்து, இன்று இந் நூலுக்கு அணிந்துரை வழங்கியருளிய, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் டாக்டர் திரு. சி பாலசுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி. அவர்களுக்கு என்றும் கடப்பாடுடையேன்.

இந்த நூல் வெளியிட அனுமதி வழங்கிய திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றி.

**பொன். சௌரிராஜன்**

# பொருளடக்கம்


பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | 'அம்மா! | 9 |
| 2. | பொங்கல் வாழ்த்து | 23 |
| 3. | சுமை கரைந்தது | 31 |
| 4. | கேட்காமல் வந்தார்கள்,<br>சொல்லாமல் போனார்கள்! | 39 |
| 5. | 'மதகு' | 45 |
| 6. | தங்கை | 68 |
| 7. | மனங்கழுவ யாதுண்டு? | 78 |
| 8. | பலி | 87 |
| 9. | 'திரிவேணி சங்கமம்' | 94 |
| 10. | நாகரிகம்? | 100 |
| 11. | ஐயோ! மகனே! | 107 |

# 'அம்மா!'

பாட்டுக் கேட்டுக்கொண்டே இருக்கும். இரவு பத்து மணிக்கும் கேட்கும்; காலை ஐந்து மணிக்கும் கேட்கும். கோடம்பாக்கம் மின்சார ரயில் நிலையப் பணி முடிந்து என் அறைக்குப் போகும்போதெல்லாம், நான் தவறாமல் அந்த இசை வெள்ளத்தில் மூழ்கி மூழ்கி உள்ளம் குளிர் வதுண்டு. சில நாட்கள் இரவுப் பணியிருக்கும். அப் பொழுது வைகறைப் பொழுதில் போவேன். பூபாள ராகத்தில் 'கதிரவன் குணதிசை' என்ற பாடல் மென்மை யாகக் காலைக்காற்றில் உலாவரும். சிற்சில சமயம் பகல் பணி முடித்துவிட்டுப் புறப்படுவேன் காற்றுத் தேவன் பைரவிப் பண்ணில் 'கற்பக வள்ளி' என்ற பாடலை இரு கைகளிலும் ஏந்தியவாறு என்னை வரவேற்பான்.

மாயவரத்திலிருந்து மாற்றலான நாளிலிருந்து இது என் வாழ்நாளில் இன்றியமையாத நிகழ்ச்சியாகப் போய் விட்டது. காவிரிக் கரையில் பாட்டும் கோதாவரிக் கரையில் இலக்கியமும் இயல்பாகவே வளரும் என்று எங்கள் பேராசிரியர் அடிக்கடி கூறுவார். அதுதானோ என்னவோ எனக்கு இசையில் ஈடுபாடு இயல்பாக அமைந்து விட்டது.

சில நாட்கள் இப்படிக் 'கற்பகவள்ளியையும்,' கைவிட மாட்டான். கனகசபேசனையும்,' 'பொழுது புலர்ந்

தையும் கேட்டுக் கேட்டு மயங்கிக்கொண்டிருந்தேன். ஒருநாள் என்னைப்போல் இப்படி யாராவது மெல்ல மெல்ல நடந்து அல்லது ஏதோ எங்கோ பார்ப்பதுபோலச் சாக்கு போக்குக் காட்டிக்கொண்டு பாட்டை நின்று கேட்டு அனுபவிக்கிறார்களோ, அல்லது என்னைக் கவனிக்கிறார்களோ என்று சுற்றும் பார்த்தேன். நல்ல காலமாக என்னைத் தவிர அந்தச் சின்னவழியில் வேறு யாரும் நிற்கவில்லை. மின்சார வண்டியைவிட வேகமாக ஓடும் சென்னை வாழ்க்கையில் நின்று கேட்க எங்கே நேரம் இருக்கப்போகிறது. பாவம்! மனிதனே ஓடுகின்ற வாகனமாகி விட்டான்: நான் ஒருவன் மட்டும் அந்த வேக வெள்ளத்திலிருந்து கரையில் ஒதுக்கித் தள்ளப்பட்டவன் போல இருப்பதை உணந்தேன்.

'எங்கு இருந்து வருகிறது' என்று ஒரு பாடல் அன்று என்னை நாடி வந்தது. என் உள்ளத்தில் அதுவே ஒரு வினாவையும் எழுப்பிவிட்டது. ஆம்! எங்கிருந்து இந்தப் பாட்டு வருகிறது! இப்படி இனிமையாக யார் பாடு கிறார்கள்? இப்படிப் பற்பல வினா எழுந்து என்னை வாட்டின.

எங்கிருந்து வருகிறது? அதோ அந்தக் குடிசையி லிருந்துதான் வருகிறது. கிழிந்து மடிந்துப்போன கீற்றுகள் காற்றில் மோதி உதிர்ந்து பறந்துபோகாமல் கரைக்கொடி படர்ந்து மலர்ந்துள்ள அந்தக் குடிசையிலிருந்துதான் ஏதோ ஒரு குயில் கூவுகிறது என்பது மட்டும் நிச்சயமாகி விட்டது. ஆனால், அந்தக் குடிசை தனியாக இல்லை. வேறு குடிசைகளோடு இணைந்தும் இல்லை. அப்படி இருந்திருந்தால் துணிந்து நானே போய், குடிசை முன் நின்று விசாரித்திருப்பேன். ஆனால் நான்கு புறம் கம்பி வேலிப்பாட்டு நன்றாகக் காவல் செய்யப்பட்ட பெரிய பங்களாவின் ஒரு மூலையில் அந்தக் குடிசை அமைந் திருந்தது. பங்களாவிற்கு முன்பகுதியிலிருந்த இரும்பு கேட்டில் 'நாய்கள் ஜாக்கிரதை' என்றே அறிவிப்புப் பலகை வேறு இருந்தது.

அன்றொரு நாள் ஞாயிற்றுக்கிழமை. ரயில் நிலையத்தில் பணி ஒன்றும் இல்லை என்றாலும், என் கால்கள் என்றும் போல் அன்றும் சென்று வேலிக்கருகில் நின்றன. புகை பிடித்துப் பழகாத நான் ஏதோ புகை பிடிப்பது போல் அந்த ஒற்றையடிப் பாதையின் ஓரமாக நின்று கொண்டு, 'கற்பகவள்ளி உன் பொற்பதங்கள் பணிந்தேன் காத்தருள் செய்வாயம்மா' என்ற பாடலை முணு முணுத்துக் கொண்டிருந்தேன். கண்கள் அடிக்கடி எங்கோ பார்ப்பதுபோல் அந்தக் குடிசைப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தன. நான் எதிர்பார்த்தபடியே அவளும் வந்தாள். அவள் இளமை ததும்பும் அழகும் என்னை வியப்போடு பார்த்த பார்வையும் என் கனவுக்கு நெய்யிட்டன.

ஆனால் நான் ஏறிட்டுப் பார்ப்பதற்குள் விருட்டென அந்தக் குடிசையில்போய் மறைந்துவிட்டாள். மின்னல் தோன்றி மறைந்ததுபோல் இருந்தது. என்னுள் ஒரு பேரலை எழுந்து அடங்கியது.

அதிலிருந்து நான் இந்த உத்தியைத் தவறாமல் கையாண்டுகொண்டு வந்தேன். அவளும் பாராதவள் போல் பார்த்துப் போய்க்கொண்டு இருந்தாள். ஒருநாள் 'அம்மா மனங்கனிந்து' என்று அவள் இதுவரை பாடாத ஒரு பாட்டை மாலை மயக்கத்தில் உளம் உருகிப் பாடிக் கொண்டிருந்தேன். அவள் எவ்வளவு நேரம் வேலி ஓரம் நின்று கேட்டுக்கொண்டிருந்தாளோ, தெரியாது. நான் திரும்புவதற்குள், 'ஏ கோகிலம்! இருட்டிடிச்சி. அங்கே வேலி ஓரம் என்ன செய்றே' என்ற அதட்டல் வருவதற்கும் சரியாக இருந்தது. அவள் போய்விட்டாள். போகும்போது கழுத்தைத் திருப்பி என்றும் இல்லாத முறையில் என்னை நோக்கிப் புன்னகை செய்துவிட்டுப் போனாள். அதன்பின் கண்கள் சில நாள் பேசின; கடிதங்கள் சில நாள் பேசின; கவிதைகள் சில நாள் பேசின.

அன்று ஏதோ விடுமுறை நாள். அந்தப் பங்களாவில் வசித்த குழந்தைகள் எங்கோ பிக்னிக்போய் இருந்தார்கள். அவர்களுக்குத் துணையாக அந்த பாட்டியம்மாவும் போய் விட்டார். அந்த நல்ல நாளில், சுப முகூர்த்தத்தில்தான், எங்கள் மௌனவிரதம் விடைபெற்றுச் சென்றது.

''நான் மாயவரத்தான்'' என்றேன்.

''எனக்கு வாழ வரம்தான் வேண்டும்'' என்று சொல்லிக் குறும்புச் சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

அவள் தொடர்ந்தாள். ''நான் பட்டீச்சுவரத்தாள், எங்க அப்பா ஒரு பண்ணைக்காரரிடம் கணக்குப் பிள்ளை யாக வேலை பார்த்தார். நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது இறந்து போய்விட்டார். அப்போதிலிருந்து அந்தப் பண்ணைக்காரர் எங்க அம்மாவையும் என்னையும் இங்கே அழைத்துக்கொண்டு வந்து, இங்கே படிக்கும் அவருடைய குழந்தைகளைப் பாதுகாக்கவும், சமைத்துப் போடவும் துணையாக்கி விட்டார். அதிலிருந்து நாங்கள் இங்கே இருக்கிறோம்'' என்று தன் கடந்தகால வரலாற்றை ஒருவாறு கூறினாள்.

''நான் ஒரு தனி ஆள். அப்பாவும் அம்மாவும் இறந்து போய்விட்டனர். எனக்கு அங்கே இருப்பதெல்லாம் நலிந்துகொண்டிருக்கும் ஒரு ஓட்டு வீடுதான். என் தாத்தா ஒருவர் சீகாழியில் இருக்கிறார். இங்கே வந்த பிறகு அவரோடு பெரும்பாலும் தொடர்பு இல்லை. இங்கே மின்சார ரயில் நிலையத்தில் வேலை பார்க்கிறேன்'' என்று சொன்னேன் அவள் இதழ்கள் மெல்ல அசைந்தன; என்னையும் நிலைதடுமாறச் செய்தன. ''மாயவரம் பிடில் வித்துவான் கனகசபைப் பிள்ளையைத் தெரியுமா? அவர் எங்களுக்கு உறவு என்று அம்மா அடிக்கடி சொல்லுவாங்க. அதனால்தானோ என்னவோ நானும் கொஞ்சம் சங்கீதம் கேட்கத் தெரிந்துகிட்டேன்'' என்று சொல்லி நிறுத் தினேன்.

''கேட்கத்தான் தெரியுமா?'' என்று ஒரு கேள்வி கேட்டு என்னை துளைத்து விடுவதுபோலப் பார்த்தாள்.

''இல்லை, பார்க்கவும் தெரியும்'' என்று கொஞ்சலாகச் சொன்னேன்.

'உம் உம்' என்று சிணுங்கிக்கொண்டே, ''அதைச் சொல்லவில்லை. பாடவும் தெரியும்னு, சொல்ல வந்தேன்'' என்றாள்.

''ஆமாம் ஆமாம். அதெல்லாம் இந்தக் கோகிலா இட்ட பிச்சைதான்'' என்று சொல்லி, அவள் பதிலை நோக்கினேன். முகம் சிவந்தது. நாணம் அவள் தலையைக் குனிய வைத்தது.

எவ்வளவு நேரம் இப்படி அவள் நின்றாளோ, அந்தச் செம்மை அழகை எவ்வளவு நேரம் என் கண்களால் நான் விழுங்கிக்கொண்டிருந்தேனோ தெரியாது. என் பின்புறத்தில் ஏதோ ஒன்று இடித்து என்னை ஒதுக்கித் தள்ளியது. திரும்பிப் பார்த்தேன், 'ஏனைய்யா கண் இருக்குதா உனக்கு?' என்று திட்டியபடி கூலிக்காரன் ஒருவன் மூட்டை தூக்கிக் கொண்டு போய்க்கொண்டிருந்தான். அவன் என்னைத் திட்டியதைக் கேட்டு அவள் கண்கலங்கினாள். இப்படி வேலிப்புறத்தில் வளர்ந்த எங்கள் இசை நட்பு, காதல் நல்ல வகையில் திருமணத்தில் முடிந்தது. அதன் பிறகு என் அறையைக் காலி செய்துவிட்டு. கோடம்பாக்கத்திலேயே ஒரு தனிக் குடித்தனம் வைத்து வாழத் தொடங்கினோம். அவளுடைய தாயாரும் எங்களோடு வந்து தங்கிவிட்டாள்.

ஊரிலிருந்த ஓட்டு வீட்டையும் விற்று ஒரு சிறிய வீடு கட்டிக்கொண்டோம். சிட்டுப்போல் பறந்து பறந்து அவள் வேலை செய்வதைப் பார்த்து எனக்கு ஓரொரு சமயம் எங்கேனும் பறந்து போய்விடுவாளோ என்று பயங்கூடத் தோன்றும். நான் வேலைக்குப் போனபிறகு

அவள் என்னென்னவோ பின்னல் வேலைகளையெல்லாம் செய்வாள். சிலவற்றை என் அனுமதியோடு விற்று எனக்குத் துணையாகச் சம்பாதிக்கவும் தொடங்கினாள். சின்னஞ்சிறு குழந்தைகள் சிலர் அவளிடம் பின்னல் வேலை கற்றுக் கொள்ள வந்தனர்.

அன்று பௌர்ணமி. 'வெண்ணிலாவும் வானும் போல' என்ற பாரதிதாசன் பாடலை மிக அழகாகப் பாடினாள். அற்புதமாக இருந்தது.

''இது எங்கே கற்றுக்கொண்டாய்'' என்றுகேட்டேன்.

''பின்னல் கற்றுக்கொள்ள வரும் உஷா பாடினாள். கத்துக்கொண்டேன். அவள் யாரோ ஒரு அம்மாவிடம் சங்கீதம் கத்துக்கிறாளாம்'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள். அவள் உள்ளக் கிடக்கையை ஒருவாறு புரிந்து கொண்டேன்.

''ஏன்? நீயும் கற்றுக்கொள்ளேன். நாம் மூன்று பேர் தானே, என்ன செலவாகப் போகிறது?'' என்றேன்.

''உம் இல்லை...இப்போ நாம் நான்கு பேர்'' என்று சொல்லி, தலை கவிழ்ந்துகொண்டாள்.

''ஓ ஓ! அப்படியா! சரி அப்போ கட்டாயம் கத்துக்கோ, உனக்கு இப்போ கவலையே இருக்கக்கூடாது என்று சொல்வார்கள்'' என்று சொல்லி அவளைக் கனிவோடு பார்த்தேன். அந்த முழுமதி நாளிலிருந்து எங்கள் வாழ்வு தேயத் தொடங்கிற்று.

வெகு விரைவாக அவள் சங்கீதத்தில் முன்னேறினாள். வீட்டு வேலையைப் பெரியம்மா கவனித்துக்கொண்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பாட்டு வாத்தியாரம்மா வீட்டுக்கே வந்து சொல்லிக்கொடுத்தார்கள். பீறிட்டுவரும் ஊற்று நீர்போல அவள் உள்ளத்தில் அடங்கிக்கிடந்த இசை வெறி விரைந்து வளர்ந்ததைக் கண்டு நான் பிரமித்து விட்டேன். ஆறேழ் மாதத்தில்

''இவ்வளவுதான் எனக்குத் தெரிந்தது. நல்ல சங்கீத ஞானமிருக்கு. அழியாமல் வளர்த்துக்கணும்!'' என்று வாழ்த்திவிட்டு அந்த வாத்தியாரம்மா போய்விட்டாள். நாங்கள் வற்புறுத்தி ஒரு நூறு ரூபாய் கொடுக்க முயன்றோம். ''இந்த ஞானத்தைத் தொடந்து வளர்த்துக் கொண்டு என்னை மறவாமல் இருந்தால் போதும்'' என்று சொல்லி அந்தப் பணத்தை வாங்க மறுத்துவிட்டார்கள். சங்கீதத்தோடு கருவில் வளர்ந்துவந்த குழந்தையும் கைக்கு வந்து சேர்ந்தது. எங்களைக் கூட்டுவித்த 'கற்பகவல்லி' என்ற பெயராலேயே நாங்கள் அக் குழந்தையைக் கூப்பிட்டு மகிழ்ந்தோம். இப்படிக் குழந்தை மழலையிலும் குறுகுறு நடையிலும் மகிழும்போதுதான் அந்த வாத்தி யாரம்மா மறுபடியும் ஒரு ஞாயிற்றுக்கிழமை திரும்பிவந் தார். வந்தவர்கள் ஒன்றும் பேசாது தயங்கி நின்றார்கள்.

''உட்காருங்கள் அம்மா'' என்றேன். அவள் நாற்கா லியை இழுத்து, அந்த அம்மாவுக்கு அருகே போட்டு, காப்பி கொண்டுவர உள்ளே சென்றாள். ''நான் ஒன்று உங்களை வேண்டிக்கொள்கிறேன். நீங்கள் தடை சொல்லாமே ஒப்புக்கோணும். மொதல்லே இது நல்லா அமைஞ்சிட்டா முழுதும் நல்லா அமைஞ்சிடும். நீங்கள் தடை சொல்லப் படாது'' என்று எதற்கோ திட்டமிட்டுக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

நான் ஒன்றும் பதில் கூறாமல் அந்த அம்மா முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒட்டி உலர்ந்த அந்த முகத்தில் விளங்கிய இரண்டு கண்களிலும் ஏக்கமும் நம்பிக்கையும் மாறி மாறி ஒளிர்ந்ததைக் கண்டேன். மெல்ல எழுந்து போய்க் குழந்தை தூங்கிக் கொண்டிருந்த தொட்டில் கயிற்றைப் பிடித்துக்கொண்டே தயங்கித் தயங்கிச் சொன்னார்.

''ஒண்ணுமில்லே, அடுத்தவாரம் கைத்தறி விழா தேனாம்பேட்டையிலே நடக்குது. அதற்கு ஒரு இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருக்காங்க. அந்த அதிகாரி

வீட்டுப் பொண்ணுக்கு நான் பாட்டுச் சொல்லி வைக்கிறேன். இந்த இசை நிகழ்ச்சிக்கு நான் ஏற்பாடு செய்யறேன்னு நம்ம கோகிலத்தை மனசிலே வைச்சிக்கிட்டு உறுதி சொல்லிட்டேன். என் வாக்கை நீங்கதான் காப்பாத்தணும். அத்தோடு, இது அவளுக்கு ஒரு அரங்கேற்றமாகவும் ஆயிடுங்க'' என்று தழுதழுத்துக் கூறினாள். எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அப்போது உள்ளேயிருந்து காப்பி கொண்டுவந்த கோகிலத்திடம் அச்சடித்த ஒரு நோட்டீசைக் கொடுத்தார் அந்த அம்மா.

''ஏம்மா! அவரிடம் ஒரு வார்த்தை கேட்டீங்களா? இப்படி ஏம்மா என்னை...!'' என்று பயந்து அவள் கத்துவதற்குள், இன்னும் தவறாக ஏதாவது பேசிவிடுவாளென்று அவள் வாயைப் பொத்தினேன்.

''சரி. என்னவோ ஆகிவிட்டது. அச்சும் அடித்துவிட்டார்கள். மாட்டேன் என்பதும் சரியில்லை. ஆண்டவன் இருக்கிறான். ஒப்புக்கொண்டுவிடுவோம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஏதோ கனவு கண்டு, 'அம்மா...அம்மா' என்று குழந்தை அலறியது. குழந்தையை ஓடிப் போய்த் தூக்கிக்கொண்டே ''சரியம்மா, எப்போ வரணும்னு வந்து சொல்லுங்க. நாங்க வந்துடறோம்!'' என்று சொன்னாள் அவள்.

அன்று கச்சேரி மிக அற்புதமாக இருந்தது. கற்பக வள்ளி கண்கொட்டாமல் அம்மாவைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். மூணு மணி நேரம் போனது மூணு நிமிடமாகவே இருந்தது. விழாவை நிகழ்த்திய அதிகாரி மேடைக்கு வந்து கோகிலவையும் பாட்டு வாத்தியாரம்மாவையும் பாராட்டிவிட்டுக் கோகிலாவிடம் ஒரு பணப்பையைக் கொடுத்தார். கோகிலா என்னைப் பார்த்துத் தயங்கினாள். ''போ. வாங்கிக்கோ. முதல் விழா. கடைசி வரை நன்றாக இருக்கும்'' என்று வாத்தியாரம்மா தூண்டி

னாள். ஏதோ ஒரு வேகத்தில் அவள் மேடைக்குப்போய்' அதிகாரியிடம் கைநீட்டிப் பெற்றுக்கொண்ட பணப் பையை வாத்தியாரம்மாவிடம் கொடுத்து வணங்கினாள். ''முதன் முறை நீ பெற்றதை நீயே வைத்துக்கொள்'' என்று வாழ்த்தி, ''இது என் கற்பகவள்ளிக்கு நான் கொடுக்கும் பரிசு'' என்று திரும்பி என்னிடம் எழுந்து வந்து அந்தம்மா கொடுத்துவிட்டார். மெல்லவும் முடியா மல் விழுங்கவும் முடியாமல் ஏற்றுக்கொண்டேன். நாங்கள் புறப்பட்டு டாக்சியில் ஏறும்போது, ''அம்மா! வணக்கம். ரொம்ப அற்புதமாக இருந்தது. உங்களுக்கு நல்ல எதிர்காலமிருக்கு. என்னை மறந்துடாதிங்கோ'' என்று ஐம்பது ஐம்பத்தைந்து வயதுள்ள ஒருவன், பின்னே ஓடிவந்து 'ஹி ஹி' என்று மழுப்பினான்.

அவன், ''அற்புதமாய் இருந்தது! நல்ல எதிர்காலம் இருக்கு'' என்று சொல்லும்போது கோகிலத்தின் கண் களின் ஒரு பிரகாசம் தோன்றி மறைந்தது. அவன் மேடை யில் பிடில் வாசித்த நினைவு எனக்கு வந்தது. வேண்டா வெறுப்போடு அவனுக்கு ஒரு வணக்கம் சொல்லிவிட்டு டாக்சியில் அவளோடு வீட்டிற்கு வந்தேன்.

அன்றிலிருந்து அடிக்கடி கச்சேரிகளுக்கு அவள் போய் வருவது வழக்கமாகிவிட்டது. வீடும் பங்களாவாக மாறிக் கொண்டு வந்தது. பிடில் வித்துவான் முக்கியஸ்தராகி விட்டார். பணம் பறிப்பது தவிர வேறு கெட்ட குணம் ஒன்றும் அவரிடம் இல்லை. 'சரி' என்று விட்டுவிட்டேன். கற்பகவள்ளிக்கு வயது நான்காகிவிட்டது. கான்வெண்ட் பள்ளியில் சேர்த்துவிட்டோம். அவள் கச்சேரிக்குப் போய் வருவாள். குழந்தை பிக்னிக் போய்விடும். அந்த அம்மா ஏதாவது சினிமாவுக்குப் போய்விடுவார். ஞாயிற்றுக் கிழமை வெறிச்சென்று இருக்கும். வெறுப்பு நிறைந்த ஒரு நாள் மாலை கச்சேரிக்குப் போன அவள் இரவு பத்து மணியாகியும் வரவில்லை. முழுநிலா எங்கும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வாழ்க்கை தொடங்கிய

நாளில் இன்பந்தந்த பண்டைய நிலவை எண்ணி நெஞ்சம் ஏங்கியது. கோபத்திலும் தாபத்திலும் அது மாறி மாறித் தவித்துக் கொண்டிருந்தது. அப்போது அந்தப் பிடில் வித்துவான் வந்தான்.

''அம்மா மகாபலிபுரத்திற்குப் போயிட்டாங்க. 'மாட்டேன்; குழந்தை இரவில் விழித்து அழுவாள்'' என்று எவ்வளவோ சொன்னாங்க; நானும்கூட அந்த அதிகாரியை எவ்வளவோ கேட்டுகிட்டேன். 'மகாபலிபுரக் கடற்கரையில் ஒரு அரைமணி நேரம் பாட்டுக் கேட்டு அனுப்பிடறேன்'னு சொன்னாங்க. விஷயம் தெரியாமே நீங்கள் கவலைப் படுவீங்க என்று உங்களிடம் சொல்ல வந்தேன்'' என்று ஏதோ சொன்னான், அவன் சொன்னதை நான் முழுதும் நம்பவில்லை.

''மஹாபலிபுரமா? அங்கே எங்கே பாட்டுக் கச்சேரி?'' என்று கோபத்தோடு கேட்டேன்.

''ஏதோ ஒரு ஓட்டலாம், கடற்கரை ஓரமாய் இருக்காம்'' என்று சொல்லியபடியே ஆள் மெல்ல நழுவி விட்டான். எப்போதும் துணைக்கு நிற்கின்ற பிடில் வித்துவான் இப்போது தனியே அவளை இந்த அதிகாரியுடன் அனுப்பிவிட்டதை எண்ணி எனக்கு வெறுப்பாக இருந்தது. அவனை என்னால் நம்பமுடியவில்லை. இன்னது செய்வது என்று அறியாமல் மிருகக் காட்டில் உள்ள புலி போல அங்கும் இங்கும் வீட்டிற்குள் உலாவினேன். கற்பகவள்ளி ஏதோ கனவு கண்டு வெருண்டு 'அம்மா அம்மா', என்று கத்தினாள். தூக்கிக்கொண்டு வாசற்படிக்கு வந்தேன். எதிர் வீட்டுக்காரரர் ஒருவர் டாக்சியிலிருந்து இறங்கிச் சில்லறை கொடுத்துக் கொண்டிருந்தார் சில்லறையை வாங்கிக் கொண்டு திரும்பிய டாக்சி டிரைவர், என்னையும் குழந்தையையும் பார்த்துவிட்டு ''குழந்தைக்கு உடம்புக்குங்களா? எங்காவது போகணுமா?' என்று கேட்டான்.

''ஆமாம் போகணும். இதோ வந்துடறேன்'' என்று வாசலிலிருந்தபடியே அந்த அம்மாவிடம் சொல்லிவிட்டுக் குழந்தையுடன் டாக்சியில் உட்கார்ந்தேன். தெரு முனை வந்ததும் ''எந்த மருத்துவ நிலையத்துக்குங்க'' என்று கேட்டான். ''நேரா மகாபலிபுரம் போ'' என்றேன்.

''மகாபலிபுரமா, இப்பவா, இன்னிக்கா?', என்று என்னையும் குழந்தையையும் தனித்துத் தனித்துக் கண்களை ஓட்டிப் பார்த்தான்.

''ஏம்பா'' என்று கேட்டேன். ''முன்னே ஒரு தரம் நான் முழுமதி நாள்லே ரெண்டு பேரே இட்டுக்கிட்டுப் போனேன். அந்த ஜோடி அங்கே ராத்திரியெல்லாம் கூத்தாடிவிட்டுக் காலையிலே புறப்பட்டு ஓடி வந்துடுச்சி... நீங்க என்னென்னா சின்னக் குழந்தையோடு இப்போ மகாபலிபுரம் போறீங்களே'' என்று இழுத்தான்.

எனக்கு என்னவோ போலிருந்தது. அந்த டாக்சி டிரைவர், பிடில் வித்துவான், வாத்தியாரம்மா, கோகிலம் எல்லாரையும் கைகளால் நசுக்கிப் பிழிந்திடலாம்போல ஒரு வேகம் வந்தது. அவனை முறைத்துப் பார்த்தேன். அவன் பயந்தபடியே திரும்பிப் பார்க்காமல் டாக்சியை ஓட்டிக்கொண்டு சென்றான். மகாபலிபுரத்தை டாக்சி நெருங்கிக்கொண்டிருந்தது. ''எந்த ஓட்டலுக்குங்க?'' என்று கேட்டான்.

''அந்த ஓட்டலுக்குத்தான்.'' அவனும் புரிந்துகொண்டு அங்கே நிறுத்தினான். தடிக் கம்போடு காவல்காரன் ஒருவன் ஓடிவந்து என்னையும் குழந்தையையும் பார்த்து, ''வேறுயாரும் இல்லை?'' என்று டாக்சிக்காரனைக் கேட்டுக் கொண்டே என்னைப் பார்த்து, ''ஓட்டல்லே இடம் இல்லைய்யா! வேறு எங்காவது போங்க'' என்றான். டாக்சி டிரைவர், ஸ்டார்ட் செய்தான். காவல்காரன் போய்விட்டான். சிறிது தூரம் போய் இருக்கும். ''நிறுத்துப்பா டிரைவர் நிறுத்து. நான் அங்கு என்னதான்

நடக்குது என்று பார்த்துவிட்டு வந்துடுறேன்'' என்று டாக்சி டிரைவர் கையில் 20 ரூபாயைக் கொடுத்துவிட்டுக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஒரு சவுக்குத் தோப்புக்குள் நுழைந்து அந்த ஒட்டலை நோக்கிப் போனேன்.

நிலவு நன்றாக எரிந்தது. சவுக்கு மர ஊசி நிழல் கோடு கோடாகக் குறுக்கிட்டாலும் வழி தெளிவாகத் தெரிந்தது. ஒட்டல் மட்டும் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆப்பிரிக்கா காட்டில் காட்டுமிராண்டிகள் பூஜை செய்யும் போது எழுப்பும் பயங்கர மெல்லிய ஓசைபோல் ஒரு ஓசை கேட்டுக்கொண்டு இருந்தது. அந்த ஓசையை பின்பற்றி முன்னேறினேன்.

சவுக்குக்காய்கள் கால்களில் சுருக் சுருக்கென்று குத்தின. முறிந்து இருந்த மரக்கிளைகள் கைகளையும் கால்களையும் கிழித்தன. வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கும் போர்க்கால இறுதி முன்னேற்றம்போல் இருந்தது. இறுதியில் ஒட்டல் அருகே நெருங்கிவிட்டேன்.

பால்போன்ற நிலவொளி உள்ளே விழாமல் அமைக்கப்பட்ட ஒரு கூடாரம். அதனுள்ளே மங்கிய சிவப்பு ஒளி சில ஜோடிகள் நடனம். மேடையில் மதுப் புட்டிகள். அங்கே ஒரு சோபாவின் மூலையில் அவள் கண் மூடிய நிலையில் இருந்தாள்! அவளுக்கு அருகில் எவனோ ஒருவன்! ஆம்! எவனோ ஒருவன்! அவளைப்பற்றி இனி எனக்கு என்ன கவலை.

ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நான் சவுக்கு மரத்திற்குப் பின்னே பதுங்கியிருப்பதை மறந்து கைகளை நெறித்தேன். ''அம்மா அம்மா'' என்று குழந்தை அலறியது. மயங்கிக் கிடந்த அவள் மெல்ல அசைந்தாள்; கண் விழித்தாள்.

''பிச்சைக்கார நாய்கள், அடித்து விரட்டு'' என்று ஒரு கூச்சல் கேட்டது. குழந்தையின் ''அம்மா அம்மா'' என்ற அலறல் நிற்கவில்லை. தடிக் கம்புகளுடன் இரு

முரடர்கள் எங்களை நோக்கி ஓடி வந்தனர். சிறிது தயங்கினாலும் குழந்தையின் மண்டை உடைந்துவிடும் என்று கடற்கரை நோக்கிச் சவுக்குத் தோப்பு வழியே ஓடினேன். வெகு தூரம் ஓடினேன், ஒரு ஆள் மட்டும் தொடர்ந்து வரும் சத்தம் எனக்குப் பின்னால் கேட்டது. கடற்கரைக் கோயில் அருகே வந்து திரும்பிப் பார்த்தேன். தலைவிரி கோலமாக அவள், ஓடிவந்து தடாலென்று என் காலடியில் விழுந்துவிட்டாள். குழந்தை ''அம்மா அம்மா' என்று அப்போதும் அலறிக் கொண்டிருந்ததை உணர்ந்தேன். குழந்தையை அவள் அருகில் உட்கார வைத்துவிட்டு தொடர்ந்து யாராவது வருகிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்தேன். யாரும் வரவில்லை. கடற்கரையில் கிடந்த கிளிஞ்சல்கள் பளிச் பளிச்சென்று மின்னின. அலைகள் ஆத்திரத்தோடு கரையில் மோதின. சில்லென்று காற்று வீசியது. நிலவு மட்டும் அமைதியாக ஒளிவிட்டுக் கொண்டு இருந்தது. கீழே விழுந்த அவள் இன்னும் எழுந்திருக்கவில்லை. அவள் முகத்தைப் புரட்டிப் பார்த்தேன். இரு கைகளிலும் கடல்நீரைக் கொண்டுவந்து முகத்தில் தெளித்துப் புடைவை முந்தானையால் அவள் முகத்தைத் துடைத்தேன். ஏதோ வேறொரு உலகத்திலிருந்து வந்தவளைப்போல மருண்டு மருண்டு பார்த்துவிட்டு, ஒரு கையில் என்னையும் ஒரு கையில் குழந்தையையும் அணைத்து 'ஓ' வென அழுதாள்.

விழா முடிந்ததும் கொக்கோ கோலா என்று எதையோ கொடுத்ததாகவும், தனக்கு ஒரே மயக்கமாக இருந்ததாகவும், வீட்டுக்கு அனுப்புவதாகக் கூறிக் காரில் ஏற்றியதாகவும். அதன் பிறகு ''அம்மா அம்மா'' என்று குழந்தை அலறிய ஓசையைக் கேட்டு விழித்து, யாரோ குழந்தையை எடுத்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்துப் பின் தொடர்ந்து வந்ததாகவும் சொல்லிக் கேவிக் கேவி அழுதாள்.

என் மனத்தை அழுத்திக்கொண்டிருந்த பாரம் இறங்கிற்று. ஏதோ கற்பகவல்லி காத்தாள். 'அம்மா' என்ற சொல்லுக்குத்தான் எவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்று குழந்தையை அணைத்தபடி கடற்கரைக் கோயில் மேடையில் அமர்ந்தேன். அவளையும் பக்கத்தில் அமரச் சொன்னேன். அவள் ஏமாற்றப்பட இருந்ததை மெல்லக் கூறினேன். கண்ணீர் விட்டபடியே "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்ற பாடலைத் தொடங்கித் "தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே" என்ற அடியைச் சொல்லும்போது, என் கால்களைத் பிடித்துக் கொண்டு "என்னைக் கைவிட்டுவிடாதீர்கள்" என்று கேவினாள்.

அவளை இரு கைகளாலும் தூக்கி அணைத்துக் கொண்டு "சீ, ஏதோ நடந்தது நடந்துவிட்டது" என்று கனிவோடு கூறி, பக்கத்தில் நின்ற குழந்தையைத் தூக்கி, அவள் கையில் கொடுத்தேன்.

ஏதோ ஆவேசம் வந்தவள்போல, "இல்லை, என் சங்கீதத்தை இப்படித் தெருத் தெருவாய் விற்கப் போக மாட்டேன்" என்று குழந்தையின் தலைமேல் அடித்துச் சத்தியம் செய்தாள். அவளைப் பார்த்து மருண்ட குழந்தை 'அம்மா அம்மா' என்று அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டே என்னைப் பார்த்து அழுதது. அந்த 'அம்மா' என்ற அழுகைக் குரல் அமைதியான கடற்கரை வெளியெல்லாம் நிறைந்து நிலவொளி வழியே போய் ஆகாயத்தையும் நிரப்புவதுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது.

# பொங்கல் வாழ்த்து

''பொங்கலோ பொங்கல்'' ''பொங்கலோ பொங்கல்'' என்று குழந்தைகள் எழுப்பிய கூட்டொலி, வீடெல்லாம் நிறைந்து வீதியையும் எட்டி, தெருவில் உறுமிக்கொண்டும் ஊளையிட்டுக்கொண்டும் சென்ற ஊர்திகளின் ஓசை களிடையே மூழ்கி, இன்பத்திலும் துன்பத்திலும் ஊரெல் லாம் கலந்துகொள்ளும் பண்டைய வாழ்க்கை முறையின் கடைசி மூச்சுப்போல மறைந்துகொண்டிருந்தது.

என் பெரிய பெண் செம்மலர் அடுக்களையில் அம்மா வுக்கு உதவிக் கொண்டிருந்தாள். சிறிய பையன் கண்ணப்பன் 'பசி பசி' என்று வெல்லம், வாழைப்பழம், கரும்பு முதலியன இருந்த சாமி அறைப் பக்கம் கண் வைத்தபடியே சிணுங்கிக் கொண்டிருந்தான். நடுப்பையன் நல்லையன் நண்பர்களோடு காலைக் காட்சிக்குப் போய் விட்டதாக மனைவி கூறியது நினைவுக்கு வந்தது. வானொலியில் தமிழர் திருநாள் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. நான் 'பொங்கல் மலர்' ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன், 'சார் தபால் என்ற ஓசை கேட்டு எழுந்து தெருப்பக்கம் போனேன்; அங்கே தபால் காரர் ஒரு கட்டுத் தபால்களை வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருந்தார். எனக்கு முன் ஓடிய சின்னப் பையன் அவற்றை வாங்கிக் கொண்டான். தபாலைக் கொடுத்துவிட்டுப் போகாமல் நின்ற தபால்காரனுக்கு

பொங்கல் மாமூலான ஐந்து ரூபாயைக் கொடுத்தேன். ஹிஹி என்ற பெரிய சிரிப்போடு வாங்கிக்கொண்டு தெருவில் இருந்த இரும்புக் கேட்டையும் சாத்திவிட்டுப் போனார். சின்னப் பையன் சுமந்துகொண்டிருந்த தபால் கட்டை வாங்கிக்கொண்டு கட்டில் அறைக்குப் போய்ப் படுத்தேன். கடிதங்களை மேம்போக்காகப் பார்த்துவிட்டு வாழ்த்துக்களை ஒவ்வொன்றாகப் படித்தேன்.

முதலில் இருந்த வாழ்த்து மிகச் சிறியதாக, ஆனால் விலை உயர்ந்ததாகக் காணப்பட்டது. பளபளத்த வண்ண அட்டையில் அருவி விழும் குன்றிற்குப் பின் கதிரவன் எழுந்து வானமெல்லாம் செம்மையாக்கும் காட்சி அதில் தீட்டப் பெற்றிருந்தது. அது வில்சனிட மிருந்து வந்திருந்தது வில்சன் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் என்னிடம் படித்தவன். சொல்பேச்சுக் 'கேளாதவன்; ஒழுங்காகக் கல்லூரிக்கு வராதவன். ஆனால், கல்லூரியை விட்ட பிறகு இங்கே வரும்போதெல்லாம் என்னைத் தவறாது கண்டு போவான். பெங்களூரில் எங்கேயோ பெரிய பதவியில் இருக்கிறான். ஆண்டாண்டும் யார் வாழ்த்து அனுப்பத் தவறினாலும் அவன் மட்டும் தவற மாட்டான்.

அடுத்தது கண்ணகி அனுப்பியிருந்தாள். அது என் மனைவிக்கு என்பது எனக்குத் தெரியும். கண்ணகி இப்போது தன் கணவனோடு ஹைதராபாத்தில் இருக்கிறாள். அவள் இங்கு விடுதியில் தங்கி படித்தபோது என் மனைவியை வந்து கண்டு போவாள். அந்த நினைவு மறவாமல் சில ஆண்டுகளாக அவளும் வாழ்த்து அனுப்பி வருகிறாள்.

இப்படிப் பல வாழ்த்துக்களைப் புரட்டினேன். என் வாழ்வு நினைவுகளையும் புரட்டிக்கொண்டிருந்தேன்.

''என்ன படிக்கிறீங்க? சாமி கும்பிட வாங்க'' என்ற என் மனைவியின் அழைப்பொலி கேட்டது. ''அப்பா

அப்பா, சாமி கும்புடவா. பொங்கல் ஆச்சி. சாப்புட வா அம்மா கூப்பிடுது—'' என்று சொல்லிக்கொண்டே என் சிறிய பையன் வந்தான். பார்த்த வாழ்த்துகளை ஒருபுற மும், பார்க்கவேண்டிய வாழ்த்துகளை மற்றொரு புறமும் ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டு, படையல் இட்டிருந்த முற்றத்திற்கு வந்தேன்.

என் மனைவி ஆண்டாள் எல்லாம் தயாராக வைத்து விட்டு, ''தேங்காய் உடைத்துக்கொண்டு வாங்க; சூடம் காட்டுங்க'' என்று எனக்குக் கட்டளை இட்டாள். ''அக்கா கும்பிடறா பாரு; நீயும் விழுந்து சூரியனைக் கும்பிடுடா கண்ணப்பா'' என்றாள். கண்ணப்பனும் அக்காவைப் பார்த்துக் கண்ணை மூடிக்கொண்டு பெண்கள் கும்பிடுவது போல, முழங்காலை மடக்கிக் கொண்டு விழுந்து கும்பிட்டான். நான் சிரித்துக் கொண்டே என் மனைவி இட்ட கட்டளைகளை முடித்து விட்டு இட்டிருந்த இலையில் போய் உட்கார்ந்தேன்.

சாப்பிட்டுக்கொண்டே ''ஆண்டாள்! கண்ணகி உனக்கு வாழ்த்து அனுப்பியிருக்கு'' என்றேன்.

''அவ நல்ல பொண்ணு! எனக்குப் போன வருசம்கூட அனுப்பினா. அவளுக்கு முன்னே படிச்சாளே, 'சுதா சுதா சுதா'ம்பிங்களே; கெட்டிக்காரப் பெண்ணுன்னு பாராட்டுவீங்களே; அவ நம்மை மறந்தே போயிட்டா பார்த்திங்களா. அப்போ அடிக்கடி வந்து 'மாமி' அது வேணும், இது வேணும்' னு சொந்த வீடு மாதிரி இங்கே வந்து பழகுவா'' என்று வாழ்த்து அனுப்பாதவர்களைப் பற்றிக் குறை கூற ஆரம்பித்துவிட்டாள். ஒருவாறு பொங்கலைச் சுவைத்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டே வாழ்த்துகளைப் புரட்டினேன்.

சேகரிடமிருந்தும் ஒரு வாழ்த்து வந்திருந்தது. குன்று களுக்கு இடையே நிற்கின்ற ஒரு கோபுரம். சுற்றிலும் பசுமை. மண்ணிலிருந்து விண்ணளாவ அமைந்த பச்சைப்

பாலம்போல அழகாக இருந்தது. அவற்றுக்கு மேலே நீல வானம். சிறிது நேரம் அந்தக் காட்சியில் என்னை மறந்து போனேன். பிறகு அதன் பின்புறத்தைப் புரட்டினேன். வாழ்த்துக்குக் கீழே ஏதோ எழுதியிருந்தான்.

'அன்புள்ள ஐயா! ஏன் படித்தோம், பட்டம் பெற்றோம் என்று வருந்துகிறேன். வேலை கிடைக்கவில்லை. வேறு தொழில் செய்யப் பணம் இல்லை. உதவ வேண்டுகிறேன்' என்று குறித்திருந்தான்.

சேகர் இரண்டு ஆண்டுகட்கு முன் படித்து எம். ஏ. பட்டம் பெற்றவன். அவன் குடும்பம் மிகவும் ஏழைக் குடும்பம். பல தொல்லைகளுக்கு இடையே எப்படியோ படித்து முதல் வகுப்பிலும் தேறிவிட்டான். அவனுக்கு உதவவேண்டும் என்றுதான் எனக்கும் ஆசை சென்ற ஆண்டுகூட ஒரு கல்லூரி முதல்வருக்குச் சேகரின் திறமையையும் பண்பையும், முயற்சியையும் விளக்கி, அவன் வறிய நிலையையும் குறித்து, காலியாயிருக்கும் விரிவுரையாளர் வேலையை அவனுக்குத் தந்தருளுமாறு வேண்டி எழுதியிருந்தேன்.

அந்த முதல்வர் என்னோடு ஒன்றாகக் கற்றவர் ஒரே விடுதி அறையில் மூன்றாண்டு பிரியாது என்னோடு வாழ்ந்தவர். அந்த நம்பிக்கையில் எழுதியிருந்தேன்.

ஆனால் அவரோ, 'அன்புள்ள 'சு', உன் சிபாரிசுக் கடிதம் கிடைத்தது. அந்தக் காலத்தை நினைத்துக்கொண்டேன். நீயும் நானும் பயின்ற அந்தக் காலத்தில் 'ஒருவரிடம் ஒன்று கேட்டுப்பெறக்கூடாது. நாமே முயன்று உழைத்துப் பெறவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பொருள் இல்லாமலே வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்' என்ற கொள்கையில் நீ வெறியனாக வாழ்ந்த அந்தக் காலத்தை நினைத்துக் கொண்டேன். அப்படிப்பட்ட நீ என்னிடம் முதன்முறை வேண்டிய இந்த உதவியைச் செய்ய முடிவு செய்து கொண்டேன். யார் எப்படித் தடுத்தாலும், நீ சிபாரிசு

செய்த மாணவருக்கே கொடுத்துவிட முடிவு செய்து விட்டேன். கல்லூரி அறக்குழுவினருள் எனக்குத் தெரிந்த சிலருக்கும் அறக்குழுத் தலைவருக்கும் முன்னரே கூறி வேண்டிக் கொண்டேன். ஒருவாறு நேர்முகத் தேர்வு நிகழ்ந்து முடிந்து விட்டது. நீ அனுப்பிய மாணவன் இயல்பாகவே எல்லாரையும்விட நன்றாகவும் வினயமாக வும் நடந்துகொண்டான். எனவே ஒருமனதாக எல்லாரும் தேர்ந்தெடுக்கும் நிலையில் இருந்தோம். அப்போது கல்லூரித் தலைவரை யாரோ தொலைபேசியில் அழைப்ப தாக இடையில் ஆள் ஒருவன் வந்து சொன்னான். போய்க் கேட்டுவிட்டு வந்த தலைவர், குழுவில் தமக்கு வேண்டிய பலரைத் தனியே அழைத்துச் சென்று சில நிமிடம் பேசினார். திரும்பி வந்து நாங்கள் யாரும் எதிர்பாராத வகையில் இரண்டாம் வகுப்பில் தேறிய யாரோ ஒருவன் பெயரைக் குறிப்பிட்டு, அவனையே தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக்கொண்டார். எனக்குக் கோபம் ஒரு பக்கம்; வருத்தம் ஒரு பக்கம். எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு ''அந்தப் பையன் இரண்டாம் வகுப்பில் தேறியவன்; அவன் சரியாகவும் விடை கூறவில்லை; ஒழுங்காகவும் நடந்துகொள்ளவில்லை, இப்படிப் பட்டவனை விரிவுரையாளனாகப் போட்டால் கல்லூரி ஒழுக்கம் உருப்பட்ட மாதிரித்தான்'' என்று எல்லோர் காதிலும் விழும்படி முணுமுணுத்தேன். என் முணு முணுப்பைக் கேட்ட தலைவரும் ''மிஸ்டர் நரசிம்மம்! நீங்கள் கல்லூரி ஒழுக்கம் போய்விடும் என்று பயப்படுகி றீர்கள். நாங்களோ கல்லூரியே போய்விடுமோ என்று பயப்படுகிறோம், நான் சொல்பவருக்கு வேலை கொடுத் தால் கல்லூரி வளர்ச்சிக்குப் பல நன்மைகள் ஏற்படும் மேலும் அவரின் பெற்றோர் கல்லூரிக்கு நன்கொடை வேறு தருவதாக என்னைப் பார்த்து முன்னமேயே சொல்லியிருக்கிறார்'' என்றார். எனவே நீ உன் வாழ் நாளில் முதன் முதலாக கைநீட்டிக் கேட்ட ஒன்றே ஒன்றையுங்கூட நிறைவேற்ற முடியாது வருந்துகின்றேன்-

நரசிம்மம்'' என்ற அந்தக் கடிதம் அப்படியே மீண்டும் என் மனக்கண்முன் தோன்றிற்று. சேகருக்கு என்ன எழுதுவது, எப்படி உதவுவது என்ற நினைவிலேயே மற்ற வாழ்த்துக் களை ஒருவாறு புரட்டிக் கொண்டே தூங்கிவிட்டேன்.

எழுந்தபோது மணி பிற்பகல் நான்காகியிருந்தது. முகம் கழுவிக்கொண்டு கடற்கரைக் கூடத்துக்குப் புறப் பட ஆயத்தமானேன். அப்போது நம்மாழ்வார்—என் பெரிய பையனின் நண்பன்—ஏதோ புகைப்படங்களைக் கொண்டுவந்து காட்டிக் கொண்டிருந்தான்.

''அப்பா, இதோ பாருங்கள் நாங்கள் காஷ்மீரில் எடுத்துக்கொண்ட புகைப்படம்'' என்று தன் கையில் வைத்துக்கொண்டே காட்டினான். அதில் அவனும் அவன் நண்பனும் ஆசிரியர் ஒருவரும் படகு ஒன்றில் அமர்ந்திருந் தனர். ஏரியின் அழகான பின்னணியில் அந்தப் புகைப் படம் எடுக்கப்பட்டிருந்தது. அந்தக் காட்சி கன்னியாகுமரி யில் நானும் நரசிம்மனும் எங்கள் பேராசிரியரோடு புகைப்படம் எடுத்துக்கொண்ட காட்சியை நினைவூட்டி யது. நரசிம்மன் புகைப்படத்திற்கென அழகான 'போஸ்' கொடுத்து நின்றது, நான் சட்டைப் பித்தான்களையெல் லாம் சரியாக இருக்கின்றனவா என்று கவனித்துப் பார்த்துக் கொண்டது. எங்கள் இருவர் நிலைகளையும் பார்த்துப் பேராசிரியர் செய்த புன்னகை—இவை யாவும் மறக்க முடியாதவாறு நிலைபெற்றுவிட்ட அந்தப் புகைப் பட நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது. உடனே ஏதோ தவறு செய்துவிட்டவன்போல் பதற்றத்தோடு போய்க் கட்டில் மேல் இருந்த வாழ்த்துகளை எல்லாம் ஒன்று திரட்டி அனுப்பியவர்கள் பெயர்களை எல்லாம் ஒன்று விடாமல் கவனமாகப் பார்த்தேன். கல்லூரியை விட்ட அந்த நாளிலிருந்து சென்ற ஆண்டுகூட பொங்கலன்று தொடர்ந்து வந்துகொண்டிருந்த ஒருவருடைய வாழ்த்து மட்டும் காணப்படவில்லை. மீண்டும் புரட்டினேன். கையெழுத்தை எல்லாம் துருவித் துருவிப் பார்த்தேன்.

அவர் கையெழுத்து அடித்தல் திருத்தல் இல்லாமல் மணி மணியாக அமைந்த அவர் கையெழுத்து, என் அறிவில், ஆருயிருள், ஆன்மாவில் ஊறியது ஆயிற்றே; அந்தக் கையெழுத்து எந்த வாழ்த்திலும் இல்லை. ஒருகால் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டிருக்குமோ என்று என் மனம் ஐயுற்றது. ஏனெனில், அந்த வாழ்த்து வரவில்லை என என் அறிவு தெளிவாகச் சொன்னாலும் அதை மனம் கேட்க விரும்பவில்லை. மீண்டும் ஒவ்வொரு வாழ்த்தையும் தனித்தனியாகத் தடவிப்பார்த்தேன். ஓரிரு வாழ்த்துகள் ஒன்றனுள் ஒன்றாய்ச் சிக்கிக்கொண்டு இருந்தன அவற்றை ஆர்வத்தோடு விரித்துப் பார்த்தேன். அவையும் ஏமாற்றமே அளித்தன. நேரே என்னுடைய புத்தக அறைக்குச் சென்று, கல்லூரி நாளில் நான் எழுதிய நாட் குறிப்பை எடுத்துப் புரட்டினேன். அதில் ஒரு பக்கத்தில் என் கண்கள் நிலைகுத்தி நின்றுவிட்டன.

சென்னை

7—4—43

இன்று என் பேராசிரியரைச் சந்தித்தேன். அவர் என் ஆசிரியர் மட்டும் அல்ல; என்னை ஆளாக்கிய அப்பனும் அவரே; அம்மையும் அவரே பலவகையில் பிற்போக் காகக் கல்லூரியுள் நுழைந்த நான் எல்லாவகையிலும் உயர்ந்தோனாக வெளியேறக் காரணமாக இருந்தவரே அவர் தான். பால் நினைந்து ஊட்டும் தாய்போல் என்னைப் பாதுகாத்து வளர்த்து உருவாக்கிய என் ஆசிரியர்பால் இன்று கண் கலங்க விடைபெற்றுக் கொண்டேன்.

''ஐயா! என்னை மறந்து விடாதீங்க. உங்கள் பசுமையான நினைவுகளால் வாழ்பவன் நான்...'' என்று கண் கலங்கியவாறு ஏதோ சொல்லி வேண்டிக் கொண்டேன். அவர் ஆறுதலாக என் தோள்மேல் கை வைத்தபடியே, ''தம்பி சுந்தரம்! ஒவ்வொரு ஆண்டும் ஓரிரு மாணவர்

உன்னைப்போல் எனக்கு வாய்க்கின்றனர். அவர்களை மறக்க முடியவில்லை என் உயிரோடு அவர்களும் ஒன்றி விடுகின்றனர். ஆனால் பிரிந்தபின் அவர்களுள் பலரைச் சந்திக்க இயலாமலேயே போய்விடுகிறது. அதற்காக ஆண்டாண்டு பொங்கலன்று தவறாது என் வாழ்த்துக் களை அனுப்பி வருகிறேன். உனக்கும் அவ்வாறே அனுப்பு வேன். என் உயிரோடு ஒன்றி விளங்கும் உங்களுக்கு ஏதேனும் ஒரு பொங்கலுக்கு வாழ்த்து வரவில்லை என்றால்—நான் இல்லை; அதாவது என் உயிர் இல்லை என்று நினைத்துக்கொள்.'' அதற்குமேல் என்னால் படிக்க முடியவில்லை. கண்ணீர் கீழிமைகளால் நிறைந்து எழுத்துக்களை மறைத்து விட்டன.

# சுமை கரைந்தது!

பாடை வந்து கொண்டிருந்தது. கூவம் ஆற்றங்கரையிலிருந்து ஏறிச் சாலையின் ஓரமாக நின்றேன். அந்த அம்மாவின் முகம் அமைதியாகத் தோன்றியது. நேற்றுக் காலையில் தோன்றிய சவத்தோற்றம் இன்று இல்லை. பாடையின் முன்னே ஒருவர் நெருப்புச் சட்டியைத் தூக்கிச் சென்றார். அவர் முகத்தில் எந்தவித சலனமும் இல்லை. பின்னால் வந்த ஏழெட்டுப் பேர் பேசிக் கொண்டே வந்தனர். நானும் கலந்துகொண்டேன்.

''அன்புன்னா இதுதான் ஐயா! பாருங்களேன்! எங்கேயோ போயிருந்தவன்; ஊருந்தெரியாது பேருந் தெரியாது; அந்தப் பாட்டிக்கு உயிர் போறது பக்கம் இருந்த நமக்குக்கூடத் தெரியல்ல; எப்படியோ அந்தச் சமயத்துக்கு 'டான்னு' வந்து சேர்ந்திட்டான் பார்த்தீங்களா'' என்றார் ஒருவர்.

''ஊம்'' என ஏக்கத்தோடு தொடர்ந்தார் வேறொருவர். ''அதற்கெல்லாம் கொடுத்து வைக்கணுங்க; அவரவர்கள் தலையில் எப்படி எப்படி எழுதியிருக்கோ அப்படி அப்படித்தாங்க நடக்கும்'' என அங்கலாய்த்துக் கொண்டார் மற்றொருவர்.

''ஆமப்பா! நீ சொல்வது ரொம்ப எண்மை, இல்லாட்டி இவன் ஏன் திடீர்னு கோவிச்சுக்கிட்டு ஓடிப் போனான்'' என நரைத்த முதியவர் ஒருவர் சொல்லி நிறுத்தினார்.

''அது என்னங்க? ஏன் ஓடிப்போனான்?'' என்று பொழுதுபோக்காகக் கேட்டுவைத்தார் நான்காவது ஆள் ஒருத்தர்.

இதைத்தான் கிழவரும் எதிர்பார்த்திருந்தார். மனத்தில் அடக்கி வைத்திருந்த அந்தப் பாட்டியின் கதை உடனே வெளிவரத் தொடங்கியது.

''ஒரு நாற்பது நாற்பத்தைந்து வருடத்திற்கு முன்பு இந்தச் சேத்துப்பட்டு இல்லை; அமைந்தகரையும் இல்லை; விளாமரங்கள் அடர்ந்த காடு எங்கும் சூழ்ந்து கிடந்தது. பச்சையப்பன் கல்லூரியோ அரசினர் அலுவலகங்களோ ஒன்றுமே இந்தப் பக்கம் தலைகாட்டவில்லை. ஏழெட்டுக் கல்வீடுகள் ஏகபோகமாக இந்தப் பகுதியை ஆண்டு வந்தன. குருவிக் கூடுகள்போல, தோப்புக்குத் தோப்பு ஐந்தாறு குடிசைகள் இங்கொன்று அங்கொன்றாய்ப் பரவிக்கிடந்தன. பறவைகள்போல, கவலையின்றிக் காட்டில் சுப்பி பொறுக்கியும், புல்வெளியில் சாணி எடுத்தும் கல்வீடுகளில் வேலை செய்தும் அந்தக் குடிசை மக்கள் வயிற்றைக் கழுவி வந்தனர். இப்போது அவை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. இந்த அம்மாவின் குடிசை ஒன்னுதான் அப்போது இருந்த இடத்திலே இப்போ, இன்னும் இருக்கு'' என்று சொல்லிச் சுற்றுமுற்றும் பார்த்தார். பூவிருந்தவல்லி சாலையில் சென்றுகொண்டிருந்த பாடை அமைந்தகரை கடைத் தெருவை அடைந்திருந்தது. பிறப்பையும் இறப்பையும் கண்டு சலித்துப்போன சென்னை மக்கள் அதனை ஏறெடுத்தும் பாராது தத்தம் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

**''ஊருஞ் சதமில்லே உத்தார் சதமில்லே**
**பேருஞ் சதமில்லே பெத்தார் சதமில்லே...,**

என்று பாடிக்கொண்டே 'பூம்பூம்' என்று சங்கை ஊதினார் பண்டாரம். கதை தொடர்ந்தது.

''அந்த ஆள் ஒரு முரடன்; குடிகாரன்: சூதாடி. ஆனால் வேலையில் நிபுணன். மரங்களை வெட்டுவதில் அப்போது அவனைப்போல் இந்தப் பிராந்தியத்திலேயே ஆள் கிடையாது. அவன்தான் இந்த அம்மாவை கூட்டிக் கொண்டு வாழ்ந்துவந்தான். எப்படி, எங்கே கல்யாணம் செய்துகொண்டார்களோ தெரியாது. இதே குடிசையில் இருவரும் வாழ்ந்ததை நானே பார்த்திருக்கிறேன். ஒரு குழந்தையும் பிறந்தது. பாவம், குடும்பம் கூடிவருகின்ற காலம்.

''ஒருநாள், இப்போது சேவா சதனம் இருக்கிறதே அதற்குப் பின்னால், அந்த ஆள் மரம் வெட்ட அமர்த்தப் பட்டான். என்னவோ, மரம் விழுந்து மாண்டு போனான் என்றனர், சிலர். இல்லை, அங்கே சூதாடும்போது அடித்துக் கொன்றுவிட்டனர் என்றனர் சிலர். ஏதோ குழந்தையையும் தாயையும் விட்டுவிட்டு ஆள் போய் விட்டான்!'' என்று சொல்லும்போது 'தடால்' என்ற சத்தம் கேட்டது. சட்டென்று நிமிர்ந்து பார்த்தோம். இரண்டு லாரிகள் மோதிக்கொண்டு சாலையின் குறுக்கே நின்றன. உயிருக்கு ஒன்றும் சேதம் இல்லை. போக்கு வரத்து தடைப்பட்டது. பாடையும் நின்றது. அதைப் பொருட்படுத்தாது விட்ட இடத்திலிருந்து கதையை ஆரம்பித்தார்.

''இந்த அம்மா மீண்டும் பழைய தொழிலைத் துவங் கிட்டா. சுப்பி பொறுக்கல், சாணி எடுத்தல் எப்படியோ நல்ல வகையில் காலந்தள்ளி வந்தா: பையனைப் படிக்க வைக்க நிறைய ஆசையிருந்தது. ஆனால், பையனுக்குப் படிப்பு ஒன்றும் வரலே. அப்பனைப்போல வாட்டசாட்ட மாக வளர்ந்திருந்தான். அவனைப் பார்க்கும்போதெல்லாம் கல் வீட்டுக்காரக் கங்காணி மனம் துரிதமாக வேலை செய்தது. எப்படியாவது அவனை மலேயாவுக்கு அனுப்பி வைத்தால் தனக்குத் தரகு கிடைக்கும் என்று திட்டமிட்

டார். ஆடுமாடுகளைக் கசாப்புக் கடைக்கு வாங்கி விற்கும் தரகனுக்கும் அவருக்கும் மன அளவில் வேறு பாடே கிடையாது. எத்தனையோ குடும்பங்களை அவன் கெடுத்தான். அது பெரிய கதை...இந்தப் பையன் அவர் கண்ணை உறுத்தினான்

பையனுக்கு 'அது இது' கொடுத்து மெல்லத் தன்பக்கம் சேர்த்துக்கொண்டார். அப்பனின் சூதாட்டத் திறமை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சொல்லி அவன் மனதைக் கெடுத்துவிட்டார். அப்பனைவிட அவன் பெரிய சூதாடியாய்ப் போனான். அந்த அம்மா அலைந்து திரிந்து சேர்த்த காசெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போச்சு. மனம் புழுங்கி ஒருநாள் கடிந்துகொண்டாள். எங்கேயோ சூதாடி, எது எதையோ இழந்த வெறியில் அந்த அம்மாவை உதை உதைன்னு உதைத்துப் போட்டுவிட்டு அப்பவே போய்விட்டான். எங்கே போனான்னு யாருக்கும் தெரியாது. கங்காணியின் வஞ்சனையால் மலேயாவுக்குத் தான் போயிருப்பான்னு நினைத்துக் கொண்டேன்'' என்று சொல்லி நிமிர்ந்தார். பிணம் பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரே போய்க் கொண்டிருந்தது. கல்லூரி முடிந்து மாணவர்கள் எல்லோரும் கூட்டங் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். பெரியவர் அந்தக் கல்லூரிக் கட்ட டத்தை வெறிக்கப் பார்த்தார். ''உம். எவ்வளவு சீக்கிரம் மாறிப்போச்சு'' என ஏதோ புதுமையைக் கண்டுபிடித் தவர் போலச் சொன்னார். கதை வளர்ந்தது.

''பையன் ஓடிப்போய்விட்டான்; அந்த அம்மா அவனைப் படாதபாடு படுத்தி அனுப்பிவிட்டாள் என ஊரார் பேசிக்கொண்டனர். அவர்கள் பேசிய அவதூறு அவளைச் சிறிது சிறிதாகக் கொன்றது. அவள் குன்றிப் போய்விட்டாள். எப்படியும் தன் மகன் திரும்பி வந்து விடுவான் என்று நம்பினாள். அவனைப் பார்ப்பதற்காகச் சாவாது இவ்வளவு காலம் இருந்தாள்.

''மூன்று மாசமாய் படுத்த படுக்கையாவிட்டாள். தன் மகனைக் காண அவள் பட்டபாடு...அப்பா! சொல்லி முடியாது. 'வந்துட்டானா? வந்துட்டானா?' என்று அவள் பிரக்ஞையின்றிப் பிதற்றும்போது நான் பலமுறை அழுதிருக்கிறேன். சில நாட்களாகக் கஞ்சியும் குடிக்க இயலாது போய்விட்டது. 'வந்துடுவாம்மா வந்துடுவான்' என்று ஆறுதல் சொல்வேன், 'ஆமாம், வந்துடுவான்' என்று பிதற்றிவிட்டுக் கண்ணை மூடிக்கொள்வாள்.

அதற்குள் பிணம் சுடுகாட்டு வாயிலுக்கு வந்து விட்டது. பழங்கால நிலையை அங்கிருந்த விளாமரங்கள் அவருடைய நினைவுக்குக் கொண்டுவந்தன. அன்று தொட்டு இன்றும் அழியாமல் அவரோடு வாழும் அந்த மரங்களைப் பார்த்து பெருமூச்சுவிட்டார். அவர் மனம் எது எதையோ அலையலையாக எண்ணிக்கொண்டிருப் பதுபோல் தோன்றியது. ''தாத்தா, கதையை முடி யுங்கோ'' என்ற சத்தம் கேட்டுத் தொடங்கினார்.

''என்னப்பா! கதைதான் முடிஞ்சு போச்சே, அந்த அம்மா சாவதற்குச் சில நாட்களுக்கு முன்பு அவனிட மிருந்து கடிதம் வந்தது. அடுத்த கப்பலில் வருவதாக எழுதியிருந்தான். நான்தான் படித்துச் சொன்னேன். அவள் பூரித்துப் போனாள். ஆனால் சொன்னபடி அவன் வரவில்லை. அவளுடைய நோயும் அதிகமாகிக் கொண்டிருந்தது. இன்று வருவான் நாளை வருவான் என்று காத்துக்கொண்டிருந்தோம். அவன் வந்துட்டான். வரும்போது ஒரே இருட்டு. தட்டுத் தடுமாறி வராந்தாவில் உட்கார்ந்திருந்த என்னைப் பார்த்து விசாரித்தான். 'வாப்பா; வந்தியே. உன் அம்மா உனக்காகக் காத்துக் கிடக்கிறாள். 'இப்பவோ, இன்னும் செத்தயோ' என்று சொல்லிக்கொண்டே அரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு குடிசையுள் நுழைந்தோம். ''வந்-துட்டானா, வந்...துட்டானா'' என்று குமுறல் ஒலி இராகத்தோடு மெல்லக் கேட்டுக்கொண்டேயிருந்தது.

''இதோ வந்துட்டோம்மா! வந்துட்டேன்'' என்று கூவிக்கொண்டே அவன் உள்ளே ஓடினான். அந்த அம்மா குழறலை நிறுந்திவிட்டு, மருண்டு மருண்டு விழித்தா. 'உன் மவந்தாம்மா, மவந்தான் வந்துட்டேன்!'' என்றான். அந்த அம்மா தலையைத் தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டான். அவன் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்து அந்த அம்மா முகத்தில் வழிந்தது. 'வந்துடு வான்னு தெரியும்' என்று அந்த அம்மா ஆர்வத்தோடு சொன்னா. கண் பளிச்சென மின்னி மூடியது. தொண்டை அடைத்துக் கொண்டதுபோல் தோன்றியது. வாங்கி வந்திருந்த சாத்துக்குடி ஒன்றைச் சட்டென எடுத்துச் சாறு பிழிந்து அந்த அம்மா வாயில் ஊற்றினான் அந்தப் பிள்ளையாண்டன். பழத்தைவிட்டுச் சாறு பிழிந்தது போல் அந்த அம்மா உடலைவிட்டு ஆவி பிரிந்தது'' என்று சொல்லி முடித்தார்.

அதற்குள் சிதை தயாராகியிருந்தது. நெருப்புச் சட்டியைத் தூக்கியவாறே அந்த ஆள் சிதையை வலம் வந்து கொண்டிருந்தார். திடீரென்று, ''அம்மா! அம்மா!'' என்று அலறும் ஒலி கேட்டுத் திரும்பினோம்; மலைத்து நின்று விட்டோம்.

''ஐயோ அம்மா! உன்னைப் பார்க்கக் கூடாத பாவி யாய்ப் போனேனே, அந்தக் கங்காணியின் பேச்சைக் கேட்டு உன்னைத் தவிக்க வைத்துப் போய்விட்டேனே. அம்மா அம்மா. கப்பலைத் தவற விட்டுவிட்டு உன்னை யும் விட்டு விட்டேனே!'' என்று யாரோ ஒருவர் சிதை யின்மேல் விழுந்து கதறினார். எல்லோரும் ஒன்றும் புரியாது விழித்தோம். சிறிது நேரம் கதறிக் கதறி அழுது விட்டுச் சுற்று முற்றும் பார்த்தார். கிழவரை நோக்கி ஓடி வந்தார். ''ஐயோ! கிராமணி ஐயா! என்னைத் தெரியலையா உங்களுக்கு. நான்தான் வேலன். நான்தான் வேலன்'' என்று படபடப்போடு கூறி மயங்கி விழுந்தார்.

நாங்கள் எல்லோரும் வாய் திறவாது, கண்களை அகல விரித்தபடி அந்தக் கிழவரைப் பார்த்தோம். 'ஆம், இவன் தான் வேலன்! என்று மெல்ல முணுமுணுத்துக் கொண்டே நெருப்புச் சட்டி வைத்திருந்த ஆளைப் பார்த்தார். அவரை மறந்திருந்த நாங்களும் சட்டெனத் திரும்பி அவரையே பார்த்தோம். அவர் மெல்ல எங்கள் முன் வந்தார்.

''மன்னிக்கணும். என்னெக்காவது உண்மை வெளியாயிடும்னு எனக்குத் தெரியும். நான் எதிர்பார்த்ததெல்லாம் அந்த அம்மா சாகும்வரை ஒண்ணும் வெளியாகக் கூடாது என்பதுதான். உண்மையில் நான் அந்த அம்மா மகன் இல்லை; ஆனாலும் எனக்கும் ஒரு தாய் இருந்தாங்க. குடும்பத் துன்பம் தாங்காது அனாதையாய் விட்டுவிட்டுப் பட்டாளத்திற்கு ஓடிப்போனேன். என்னையே எண்ணி எண்ணி என் தாய் இறந்துட்டாங்க. எவ்வளவோ முயன்றேன்; என் தாயை உயிரோடு பார்க்க முடியலே; பிணத்தைத்தான் பார்க்க முடிந்தது. சாவதற்கு முன் என்னையே பார்க்க வேண்டும்னு சுழன்று சுழன்று திரிந்த அந்தக் கண்கள் ஒளியோடிருக்கும்போது வரலே. 'அம்மா' என வாயார நான் அழைக்கும் ஒலியைக் கேட்கத் துடித்த அந்தக் காதுகள், உணர்வற்ற பிறகு நான் போய்ப் பார்த்தேன். கத்தினேன்; கதறினேன். சுமை நீங்கவில்லை. என் ஊரைவிட்டு இந்த ஊருக்கு வந்தேன். ஆனாலும், 'பாவி பாவி' என்று என் மனம் என்னைக் குத்திக்கொண்டேயிருந்தது. அடிக்கடி இந்தக் குடிசை வழியே போவேன். ''வந்துட்டானா? வந்துட்டானா?'' என்ற உளறல் எப்போதும் கேட்கும். நேற்று மாலை அந்தக் குடிசைப் பக்கத்தில் இருவர் —

''பாவம்; அவன் வருவதாகக் கடிதம் எழுதியிருந்தான். இன்னும் வரலை. வருவான் வருவான்னு இந்தக் கிழ உயிர் போகாமல் இழுத்துக் கொண்டிருக்கிறது.

அநேகமாக இன்னைக்கு ராத்திரியே போயிடும்'' என்று பேசிக்கொண்டதைக் கேட்டேன்.

''என் தாயும் இப்படித்தானே தவித்திருப்பாள் என்று நினைத்தேன்; நினைந்து நினைத்து அழுதேன். மனம் ஆறுதலடையவில்லை. ஓர் ஒளி தோன்றிற்று. ஒரு வழி கண்டேன். செத்துப் பிறந்தேன். நான் அவள் மகன் ஆனேன். அப்படி ஆகவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன். நேரா மூர்மார்க்கட்டுக்குச் சென்றேன். பழைய உடுப்புக்கள், கப்பலிலிருந்து வருவதுபோல் சில சாமான்கள், பழங்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு மீண்டேன். இரவு மணி பத்து இருக்கும், வீடு தெரியாதவன்போல் இருமுறை அந்தச் சந்தில் திரிந்தேன். பிறகு, இந்தப் பெரியவரை விசாரித்தேன். நான்தான் அந்த அம்மா மகன் என்று முழுதும் நம்பிவிட்டார். அவர் வாயாலேயே 'உன் மகன் வந்துட்டான்' என்ற பேச்சு அந்த அம்மா காதில் விழுமாறு செய்தேன். அந்த அம்மாவின கண்களை ஆசையோடு பார்த்தேன். அந்தக் கண்களுக்குள் என் அம்மாவைப் பார்த்தேன். அவர்களின் ஏக்கத்தைப் புரிந்து கொண்டேன், அவர்கள் தலையைத் தூக்கி என் மடிமீது வைத்துக்கொண்டேன். மனம் வெடித்துவிடுவது போல் தோன்றியது, கண்ணீர் பீறிட்டுக் கொட்டியது. மலையாய் என்னை அழுத்திவந்த அந்த நெஞ்சுச் சுமை இந்தச் சில துளிக் கண்ணீரில் கரைந்து போவதை உணர்ந்தேன். மனம் இலேசாக இருந்தது. 'அப்பா—சுமை கரைந்தது!' என நா முணுமுணுத்தது 'பற்றுவிட்டது' என்று அமைதியாக அந்த அம்மாவின் ஆவியும் போயிற்று'' என்று படபடப்பாய்ப் பேசி, சட்டென நிறுத்தினார். கையிலிருந்த நெருப்புச் சட்டியைக் கீழே வைத்துவிட்டு, மின்னல்போல் வெருட்டென வெளியேறினார். அவர் சென்ற திசையைச் செயலற்றுப் பார்த்துக் கொண்டே நின்றோம்.

# கேட்காமல் வந்தார்கள் சொல்லாமல் போனார்கள்!

அப்போது நான் சென்னையில் தங்கியிருந்தேன் வாழ்வு சப்பென்று இருந்தது. செல்வம் படைத்த மாணாக்கர்க்குச் சென்னை வாழ்வு சுவர்க்க வாழ்வாக இருக்கலாம். ஆனால், கொள்கையோடு வாழ விழையும் வறிய இளைஞர்களுக்கு அது ஒரு போர்க்களமாகவே காட்சி தந்தது.

சிறிய படகு போன்ற கிராமத்திலிருந்து வந்திருந்த தால், கடல் போன்ற சென்னையின் போக்கும், நிலை மாற்றங்களும் எனக்குத் தெளிவாகவில்லை. மனிதரை மனிதரிழுக்கும் கொடுமையும், நடைபாதைப் பிணங் களைக் கண்டு வரிசை வரிசையாகச் செல்லும் நடைப் பிணங்களின் இரக்கமற்ற தோற்றமும், ஓரிரு ஆட்களே உடைய பெரிய பங்களாக்களும், பலநூறு மக்கள் ஒடுங்கி ஒட்டி வாழும் சாலை ஓரங்களும் என் நெஞ்சைத் துன் புறுத்தின. இறுதியில் தக்க சிபாரிசும், செல்வாக்கும் இல்லாது போகவே, விடுதியில் தங்க முடியாது, வாடகைக்கு அறை ஒன்று தேடிப் புறப்பட்டேன்.

ஒரு தகரப் பெட்டி, ஒரு துணிப்பை, செருப்பற்ற கால் குடையற்ற தலை. இவற்றோடு ஆனி மாத வெயிலிலே வறிய ஏழையின் வயிறுபோல் காய்ந்து

அவர்கள் கண்கள்போல் பொங்கும் தார்ச்சாலையிலும், சந்தியிலும், வீடு தேடித் தேடி வருந்தினேன்.

இவ்வளவு பெரிய சென்னையில் வீடா இல்லை. இருந்தன. விடுதிகள் பல இருந்தன. ஆனால், ஏழை தரும் குறைந்த வாடகைக் கட்டணத்திற்கு வீடுகள், விடுதிகளில் அறைகள் கிடைப்பதாயில்லை. ஏழை மக்கள் வாழும் இடங்களிலே ஓரிரு அறைகள் காலியாய் இருந்தன. அவர்கள் கேட்ட கட்டணத்தைக் கட்டவும் தயாராயிருந்தேன். ஆனால், ஒண்டிக்கட்டை என்று அறிந்ததும் எனக்கு வீடு தர எல்லாரும் மறுத்துவிட்டனர். அவர்கள் நல்லவர்கள்தான். ''இரக்கம் காட்டுவதே பாவம்'' என்ற தத்துவம் தெரியாத மக்கள்தான் அவர்கள். ஆயினும், தந்தை தாயின் துணையில்லாத தனி மாணாக்கரைத் தங்கள் இல்லங்களில் வைத்துக்கொள்ள அவர்கள் அஞ்சினார்கள்.

வேறொரு வீட்டில் நடந்த நிகழ்ச்சி எனக்கு வியப்பளிப்பதாக இருந்தது, அதில் ஆறு, ஏழு குடித்தனங்கள் இருந்தன. என்னுடைய வறிய நிலையையும், வீடு தேடித் தேடிக் களைத்த என் தோற்றத்தையும் கண்டு, என்னிடமிருந்து நன்னடத்தைப் பத்திரங்களையும் நல்லொழுக்க இதழ்களையும் பார்த்துப் பின் வீடு தர ஒப்புக்கொண்டார் ஒருவர். இச் செய்தியறிந்த அக் குடித்தனக்காரர்கள் அந்த மாணாக்கரைக் குடித்தனம் உள்ள வீட்டில் குடி வைப்பதாக இருந்தால் நாங்கள் வெளியேறி விடுகின்றோம் என்று அந்த வீட்டுக்காரரிடம் வம்புக்கு வந்துவிட்டனர். நம்மால் அவருக்கு ஏன் தொல்லையென்று மெல்ல அந்த இடத்தையும் விட்டு விட்டேன்.

கடைசியாக ஒரு மாடி வீட்டின் மேலே தனியறை ஒன்று கிடைத்தது. ''போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என அந்த வீட்டில் அமைந்து படிக்கத் தொடங்கினேன்.

யாருக்கும் தொல்லையின்றி அமைதியாகப் படித்ததைக் கண்டோ என்னவோ, நல்லவன், தொல்லை தராதவன் எனப் பலர் எண்ணிக்கொண்டனர்.

ஒரு நாள் மறதியாகக் கதவைத் திறந்தபடியே வைத்துவிட்டுக் கல்லூரிக்குச் சென்றுவிட்டேன் மீண்டும் வந்து பார்க்கையில் ஒரு குடும்பம், ஒரு முழுக் குடும்பம், கணவனும் மனைவியுமாக என் வீட்டில் அனுமதியின்றி வந்து தங்கியிருந்தனர் நான் உள்ளே சென்றவுடன், அந்த 'ஆள்' நாகரிகத்தோடு மெல்ல எழுந்து 'ஹி. ஹி' வணக்கம் என, விருந்ினர் ஒருவரை வீட்டுக்காரரர் வரவேற்பது போன்று வரவேற்றார்? அந்த அம்மாவும் சட்டென எழுந்தார். நீங்கள் யார் என முகத்தில் அறைந்தாற்போல் கேட்கத் தோன்றியது. ஆயினும் சட்டென அவ்வாறு கேட்க மனம் வரவில்லை. என்னுள் நடக்கும் இச் சிறு மனப்போராட்டத்தைப் புரிந்துகொண்டதுபோல், அந்த 'ஆள்' மீண்டும் எழுந்து "நாங்க..." என்று எதையோ சொல்லத் தொடங்கினார். என் மனநிலையை மறைப்பதற்காக, "ஓகோ........... நன்கு தெரியுமே. ஒன்றுமில்லை. இருங்கள், பரவாயில்லை ஆமாம்" என்று வாயில் வந்த சொற்களையெல்லாம் வெளியிட்டேன். எழுந்து நின்றார். முதலில் அவர்கள் வருகை தொல்லை தருமோ என நினைத்தேன் நாள் செல்லச் செல்ல என் தனிமைத் துயர் ஒருவாறு நீங்க அவர்கள் தொடர்பு எனக்குத் துணை செய்தது. பல கோடிக் கணக்கான வெள்ளி நாணயங்கள் புரளும் இச் சென்னையிலே விலை போட்டு வாங்க இயலாத அந்த உண்மை அன்பை அவர்கள்பால் கண்டேன் நான் அறையினுள் நுழைந்ததும், பெரும்பாலும் அவர்கள் அதனை விட்டு வெளியே வந்து மாடியில் உலாவத் தொடங்கிவிடுவார்கள். நான் படிக்கத் தொடங்கிவிட்டால் வேகமாகப் பேசக்கூட மாட்டார்கள். நான் உறங்கிய பின்னரும், வெளியே புறப்பட்ட பின்னருமே அவர்கள் குடும்ப வாழ்வைத் தொடங்குவார்கள்.

காலமும் காதலும் சும்மாயிருப்பதில்லை. கல்லூரியில் அட்டவணை ஒன்றன்பின் ஒன்று செல்லச் செல்லத் தேர்வு வந்து 'டக்' கென முன்னே நின்று மாணவர்களைக் கலங்கச் செய்வதுபோல், அந்த ஆள் அன்று தயங்கித் தயங்கி நின்றார். என்ன என்று விரைவில் புரிந்துகொண் டேன். ஏதோ 'பிரசவ வேதனை' என்று எண்ணினேன். மேசை நாற்காலிகளை ஒதுக்குப்புறமாகப் போட்டுக் கொண்டே நான் படிக்கத் தொடங்கினேன். குழந்தை களின் ஒலி மெல்ல மெல்லக் கேட்டது. அந்த 'ஆளின்' முகம் மலர்ந்திருந்தது. அவர் அங்கும் இங்கும் ஓடி என்னென்னவோ கொண்டுவந்தார். அந்த அம்மாவும் ஓரிரு நாள்களிலேயே ஓடியாடி உழைக்கத் தொடங்கி விட்டார்.

குடும்பம் பெரிதாகிவிடவே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. நான் வைத்திருந்த உணவுப் பொருள்களும் சிறிது சிறிதாகக் களவுபோக ஆரம்பித்தன. ஓரிரு சமயங் களில் அவர்கள் இருவரும் நாணிக்கோணி மெல்ல மெல்ல அரிசியிருக்கும் இடத்தை நோக்கிச் செல்வார்கள். நான் அவர்களின் எண்ணத்தை அறியாதவன்போல், அந்த நடையழகிலும் குழந்தைகளைக் காக்கப் பாடுபடும் அந்த அன்புத் தன்மையிலும் என்னை அறியாது சொக்கிப்போய் விடுவேன். அப்போது அச்சமின்றி, என் கண்முன்னா லேயே, என் உணவுப் பொருள்களைக் கொள்ளை கொண்டுபோவார்கள். பலமுறை 'அம்மா, ஐயா இது சரியன்று. கேட்காமல் வந்தீர்கள். இந்தச் சென்னையிலே அந்த அளவு உங்களை அனுமதித்த என்னை நீங்கள் எவ்வளவோ போற்றவேண்டும். அதுதான் இல்லை என்றாலும் என்பொருளைத் திருடாமலாவது இருப்பது நல்லது இல்லாவிடில் இப்போதே வெளியேறிவிடுங்கள்' எனச் சொல்லத்தோன்றும். ஆனால் எப்படிச் சொல்வது? 'குழந்தை குட்டியோடு வாழ்கிறார்கள். எங்கே செல்வார் கள்? பணச் செருக்குடைய கழுகுகள் நிறைந்த இந்த

உலகிலே எப்படி வாழ்வார்கள்' என்று எண்ணி எண்ணிச் சும்மா இருந்துவிடுவேன்!

ஒருநாள் வகுப்பின் இடையிலேயே வீட்டுக்குத் திரும்பி விட்டேன். நான் மாடிப்படியில் ஏறும்போதே ஓலமிடும் குரல் கேட்டது. அந்த அம்மாதான் அழுகிறார்கள் என என் செவி உணர்ந்துகொண்டது. குழந்தைக்குத் தான் ஏதேனும் ஆபத்தோ எனப் பதறியவாறு விடுவிடு என ஏறி அறையை அடைந்தேன். குழந்தைகளைப் பார்த்தேன். அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தன. என்னை ஏக்கத்தோடு அந்த அம்மா பார்த்தார்கள். வாயினால் ஒன்றும் சொல்லவியலாதவாறு நெஞ்சு அடைத்துக்கொண்டது போல் தோன்றியது. சாலையைச் சுட்டிச் சுட்டிக் காட்டினார்கள்.

அங்கே கண்ட காட்சி என் உடலை நடுங்கச் செய்தது. அங்கே இரு கயவர்கள் அந்த ஆளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போவது தெரிந்தது. ''சடசட'' என்று இறங்கினேன். அவர்களிடம் கெஞ்சினேன். என்ன பிழை செய்திருந்தாலும் மன்னிக்குமாறு மன்றாடினேன். என் கையிலிருந்த சில்லறையிற் சிறிது கொடுத்தவுடன் அந்தத் தடியர்கள் போய்விட்டனர். அந்த ஆளும் நானும் அறைக்கு வந்தோம். அந்த அம்மா வாய் திறந்து என்னைப் போற்றவில்லை. ஆனால் அவர்களுடைய கண்களும், முகமும் என்னை உளமார வாழ்த்தும் செய்தியைக் காட்டின. களங்கமற்ற குழந்தையின் முகத்திலும், மலரினிடத்திலும், மாலையில் மறையும் கதிரினிடத்திலும் காண்கின்ற சொல்லற்ற, செயலற்ற, ஆனால் சொல்லும் பொருளும் மிகுந்த ஒரு அமைதியான அழகை அன்று அவர்கள் கண்களில் கண்டேன்.

அன்று திரு. வி. க. கூட்டம் நிகழ்ந்தது. கேட்டதில் காலத்தை மறந்துவிட்டேன் இரவு வெகு நேரமாகி என்னறையை அடைந்தேன். அந்தக் குடும்பத்தைக் காண

வில்லை. ஏதோ என்னை விட்டுப் பறிபோனது போன்ற ஒரு வெறுமை உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. வீடு பாலையாகத் தோன்றியது. இலக்கிய நூல்களெல்லாம் உணர் வற்றுக் காட்சி அளித்தன பாடல்களாலும் சூன்யமான என் மனதை நிறைவு செய்ய இயலவில்லை. 'என்னிடம் சொல்லாமலேயே சென்றுவிட்டார்களே. நன்றி கெட்ட ஜென்மங்கள்' என்று ஓரிரு நிமிடங்கள் என் துயரப் பெருக்கில் வைதேன். ஆனால் மீண்டும் அவர்கள் பால் மனம் சென்றது. 'எனக்காகக் காத்திருந்திருப்பார் கள். நான் உரிய காலத்தில் வராததால்தான் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார்கள்' என எண்ணி வருந் தினேன். அவர்கள் தங்களுக்கு என அமைத்துக்கொண்ட அறையை நெருங்கினேன். தேங்காய்நாரும் சின்னஞ்சிறு சிறகுகளும் கொண்டு அமைந்திருந்த அந்த அழகான வீட்டைப் பார்த்தேன். கவலையின்றி அதனை விட்டுப் போன அந்தச் சிட்டுகளின் வாழ்வை எண்ணினேன்.

> **''காக்கை குருவி எங்கள் சாதி—நீள்**
> **கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
> **நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை**
> **நோக்க நோக்கக்களி யாட்டம்''**

என்ற பாரதி பாடலைப் பாடிக்கொண்டே, அவர்கள் தங்களுக்கு என அமைத்துக்கொண்டு வாழ்ந்த வெறுங் கூட்டை எடுத்து வெளியே எறிந்தேன்.

# 'மதகு'

மதகடியில் வந்து நின்றேன். சுற்றுமுற்றும் பார்த்தேன், வைகாசி முழு நிலா தலைக்குமேல் பொழிந்து கொண்டிருந்தது. அறுவடையான தரிசு நிலங்கள் எல்லாம் வெறிச்சென்று இருந்தன. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ஒரே பொட்டைத் திடலாய்த் தோன்றியது. மனித நடமாட்டம் ஒன்றும் இல்லை. இடுகாட்டிலிருந்து ஆந்தை அச்சுறுத்துவதுபோல் 'ட்ர்ர், ட்ர்ர்' என்று அலறியது. அதற்குப் பதில் தருவதுபோல் சேரி நாய் ஒன்று குரைத்தது. அந்த அமைதியான நேரத்தில், அகண்ட வெட்ட வெளியில் எழுந்த அலறலும் குரைப்பும் எனக்கொன்றும் அச்சம் உண்டாக்கவில்லை. மதகைப் பார்த்தேன் ஏதோ கண் கண்ட ஒரு தெய்வத்தைக் காண்கின்ற பக்தி உணர்வு என்னுள் எழுந்தது. அதன்கீழ் வற்றி வரண்டு பாளம்பாள மாய்ப் பிளந்து கிடந்த வெறும் ஆறும் தெரிந்தது. மதகின் கிழக்கு மூலையருகில் போனேன். மண்டியிட்டு அமர்ந்தேன். முகத்தை அந்த மூலையில் புதைத்துக்கொண்டு அழுதேன். மெல்ல எழுந்து அதன்மேல் அமர்ந்தேன். மனம் விம்மிற்று. மாலை நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன.

''மத்தளம் முழங்க வரிச்சங்கம் நின்றூத...'' என் மாமனார் ஆழியூர் சர்க்கரை ஆலை இயக்குநர் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு விழாக் கச்சேரி நிகழ்ந்து கொண் குருந்தது. ''ஹலோ சேகர்! பெரிய ஆளுப்பா நீ! மார்க்சீயம் பேசிக்கொண்டே பெரிய கையா புடிச்சிட்டியே''

என்று புன்னகைத்தபடி 'லெனின்' என்ற நூல் ஒன்றை என் நண்பன் மாஸ்கோ வழங்கினான் "மிஸ்டர், ஒரு சிறு திருத்தம்: பெரிய கையை உங்கள் நண்பர் பிடிக்கல்லே; அழகான கைன்னு சொல்லுங்க" என்றாள். என் அருகில் அமர்ந்திருந்த மணப்பெண் வள்ளியம்மையின் கல்லூரித் தோழி வனஜா. இவற்றைக் கேட்டு வளளி என்னை ஓரக் கண்ணால் பார்த்துப் புன்னகை புரிந்தாள். அவள் கையி லிருந்த, யாரோ கொடுத்த, 'மனித வாழ்க்கையும் காந்தி யடிகளும்' என்ற நூலைப் பார்த்து நானும் புன்னகை செய்தேன். இப்படி எத்தனையோ பரிசுகள்; கேலிகள்; நையாண்டிகள்; எகத்தாளங்கள்; வாழ்த்துக்கள். இவற்றுக்கு இடையே ஒரு பெண் எங்கள்முன் வந்து ஏனோ தயங்கி நின்றாள். என் பக்கம் திருப்பி, தடுமாற்றத்தோடு, என்கையில் பேனா கிளிப்பில் செருகிய கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டு, அங்கும் இங்கும் பார்த்தாள். அவளை எங்கோ பார்த்த நினைவு வந்தது. படபடப்போடு "அருந்ததி இதைக் கொடுக்கச் சொன்னா!" என்று கூறிவிட்டு, கிடுகிடு என்று பெண்கள் கூட்டத்தில் நுழைந்து மறைந்துவிட்டாள். அந்தக் கடிதத்தின்மேல் மணி மணியாய் விளங்கிய அருந்ததி கையெழுத்தைப் பார்த்தேன். எப்போதோ கண்ட, அவள் எழுதுகின்ற சின்னஞ்சிறு செவ்விரல்கள் என் கண்முன் தெரிந்தன. "தம்பி! ஊராண்மைக் கழக ஒன்றியத் தலைவர் திரு சோமசுந்தரம்" என்ற கரகரத்த குரல் கேட்டு, 'வணக்கம்' என்று சொன்ன படியே திடுக்கிட்டபடி தலை நிமிர்ந்தேன். எதிரே என் மாமனாரும் இன்னொரு பெரியவரும் நின்றிருந்தனர். கடிதத்தையும் பேனாவையும் கோட்டுக்குள் இருந்த சட்டைப் பையினுள் வைத்துவிட்டு அவரோடு கை குலுக்கியபடி ஏதோ பேசி அனுப்பிவைத்தேன்.

'அருந்ததி!...ஆம்' சென்ற மாதம் புகைவண்டி நிலையத்தில் பார்த்தபோது எப்படி வளர்ந்திருந்தாள்.

ஆனால், புலியூரில் தான் ஆசிரியனாக இருந்தபோது பார்த்த சிறுமியா அவள்!'

புலியூரில் பெரிய பள்ளிக்கூடத்தில் ஆசிரியனாக நான் இருந்தேன். அங்கேயே இன்னொரு சின்னப் பள்ளிக்கூடமும் இருந்தது. இந்தப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரை தான் உண்டு. நான் வேலை செய்த பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்புவரை படிக்கலாம். அதனால் இந்தப் பள்ளிக்கூடத்தைப் பெரிய பள்ளிக்கூடம் என்றனர். பெரிய பளளிக்கூடத்தில் வேலை செய்ததாலோ என்னவோ என்னைப் பெரிய அசிரியனாக மதித்து வந்தனர் அந்த ஊரார். அப்படி என்னை மதித்ததற்கு வேறு காரணங்களும் இருந்தன. ஒன்று, வாயில்லாப்பூச்சிகளான அந்த ஊர் மக்கள் மனத்திற்குள்ளேயே எண்ணிப் புழுங்கும் எண்ணங்களை எல்லாம் வெளியே எடுத்துச் சொல்லி ஆறுதல் செய்தது; மற்றொன்று, சொந்த பந்தம் ஒன்றும் இல்லாத அநாதையான என்னிடம் மிகுதியாகும் பணத்தை அக்கம் பக்கத்தில் உள்ளவர்க்கு வட்டி இல்லாமல் கடன் கொடுத்துவந்தது.

இப்படி வாழ்ந்து கொண்டிருந்த நாளில் ஒரு நாள், அன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள் அதாவது ஒவ்வொரு பள்ளிக்கூடமும் சுதந்திர தினவிழா கொண்டாட வேண்டிய நாள். கொடியேற்றிப் பேசுவதற்கு ஆள் தேடி அந்த இரண்டு பள்ளிக்கூடங்களும் பெரிதாக ஒன்றும் கவலைப்படவில்லை. தலைமை ஆசிரியர் இருவரும் கூடி, இங்கிருந்து ஒருவரை அங்கும், அங்கிருந்து ஒருவரை இங்கும் பேசுவதற்குப் பரிமாறிக்கொள்வதாக எளிதில் திட்டமிட்டு விட்டனர். அந்தத் திட்டப்படி சிறிய பள்ளியில் கொடியேற்றித் சொற்பொழிவு ஆற்றும் பெருமை எனக்கு வாய்த்தது

ஏதோ பேசினேன். குழந்தைகளுக்குத் தக்கபடி நன்றாகப் பேசியதாகத் தலைமை ஆசிரியர் பாராட்டினார். அவர் எல்லாப் பேச்சாளர்களையும் அப்படியே

தான் பாராட்டுவது வழக்கம். விடை பெறும்போது ஒரு சிறுமி, ''பாதகம் செய்பவரைக் கண்டால், நீ பயங் கொள்ளல் ஆகாது பாப்பா'' என்று நான் பாடிய பாரதி பாடலை முணு முணுத்துக் கொண்டே என்முன் வந்தாள். அவளை எங்கோ அடிக்கடி பார்த்த நினைவு வந்தது ஆம், புத்தங்களைக் கையில் ஏந்திக்கொண்டு, புள்ளூர் வழியில் அவள் குறுகுறு என நடந்து போகும்போது மாலையில், மதகுக் கரையில் உட்கார்ந்து வயல்வெளிகளையும் வானத்தையும் பார்த்துப் பொழுதுபோக்கும் நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். ''உம், ஊம், ஓம்' என்று ஓசையிட்டுக்கொண்டு மதகுப் பலகையைக் கடந்து குதித்துச் சுழன்றோடும் ஆற்று வெள்ளக் காட்சியாலும், பச்சைப் பசேல் என்று கண்ணுக்கு எட்டிய தூரம்வரை விளங்கும் கழனி அழகாலும், பார்வை முற்றுப்பெறும் அடிவானம்வரை செவ்வொளி படர்ந்து தோன்றும் வான எழிலாலும் அவ்வப்போது ஈர்க்கப்படும் நான், இயற்கையே இரு கால் கொண்டு நடந்து வருவது போல் தோன்றும் அந்தச் சிறுமியின் வனப்பிலும் ஈடுபட்ட துண்டு. நான் பாடிய பாடலை விரும்பியவள்போல இன்று என் முன்னே வந்து நிற்கும் அவளிடம் ஏதேனும் பேச வேண்டும் என்ற என் ஆர்வத்தை என்னால் தடுத்து நிறுத்த இயலவில்லை. ''நீ இங்கேயா பாப்பா படிக் கிறாய்?'' என்று நிறுத்தினேன்.

அதற்குள் தலைமை ஆசிரியர், ''ஆம், சேகர்! நல்ல பொண்ணு. புள்ளூர் இல்லை, அங்கேயிருந்து வந்து படிக்கிறா. படு சுட்டி. நல்லாப் பாடுவாளே! அருந்ததி! எங்கே, முருகா! முருகா! முருகா!...பாடு'' என்று மணி ஒன்றானதைக்கூட மறந்து, எனக்கும் மற்றக் குழந்தை கட்கும் தலைக்கு ஒன்று கொடுத்த சாக்லைட், பசியைத் தூண்டிவிட்டுவிட்டது என்பதையும் மறந்து பாடச் சொல்லிவிட்டார். இந்தக் கவலை எல்லாம் அந்தச் சிறுமி வாய் திறக்கும். வரைதான் இருந்தது. சிவந்த இரண்டு சின்ன இதழ்களை அசைத்து அவள் பாடத் தொடங்

கியதும் என்னை மறந்து அந்த மழலை மொழியில் மயங்கி நின்றேன். இரண்டே இதழ்களை உடைய செந்நிறப் பூ ஒன்று தென்றலில் அசைந்து அசைந்து மூடிக்கொள்வது போல் நெகிழ்ந்த அந்த இரு உதடுகளுக்கும் இடையே தேன நழுவிச் சொட்டுச் சொட்டாய் ஒழுகுவதுபோல் செந்தமிழ்ச் சொற்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. ''கருதிக் கருதிக் கவலைப்படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேல் முருகா...'' என்று மூச்சுப் பிடித்து விலா எலும்புகள் மேலெழுப்ப அவள் பாடியபோது, ''வேண் டாம் பாப்பா வேண்டாம்...போதும்...'' என்று சொல்லத் துடித்தது. பாட்டு முடிந்தது. சுற்றுமுற்றும் பார்த்தேன். சுற்றி நின்றுகொண்டிருந்த குழந்தைகள் எல்லாம் என் போலவே மயக்கம் தெளிந்து மெல்ல அசையத் தொடங்கி யதைக் கண்டேன். மேசைமேல் இருந்த 'பூச்செண்டை' எடுத்து அவள் கையில் கொடுத்துக் கைதட்டினேன். மற்றக் குழந்தைகளும் கைதட்டினார்கள். அவள் தலை குனிந்து கொண்டே அந்த இடத்தைவிட்டு மெல்ல நழுவினாள். ''ஏ அருந்ததி! வணக்கம் சொல்லாமே போறியே. உம்!'' என்று கெஞ்சலாக அதட்டினார் தலைமை ஆசிரியர். கையிலிருந்த பெரிய பூச்செண்டை மார்பில் அணைத்தபடியே ''வணக்கம்...!'' என்று சொல்லி, என் கண்விட்டு மறைந்தாள்.

கண்விட்டு மறைந்தாலும் அவள் என் கருத்துவிட்டு மறையவில்லை. அந்தக் குறுகுறுத்த பார்வை, செம்மலர் ஒன்றிலிருந்து வந்தது போன்ற அந்தப் பாடல், தலை குனிந்தபடியே சென்ற அந்தக் காட்சி—இவற்றை நினைத்த படியே அடுத்த திங்கட்கிழமை மாலை மதகின் மேல் வந்து உட்கார்ந்திருந்தேன். அது எங்கள் ஊரையும் புள்ளூரையும் பிரிக்கும் எல்லையில் உள்ளது. எப்போதும் போல் சல சல என்று ஓடும் ஆற்றையும், அதில் துள்ளிக் குதிக்கும் கெண்டை மீன்களையும், அவற்றைப் பிடித்துத் தின்ன மதகுப் பலகைமேல் தலைவைத்துக் காத்துக்

கொண்டிருக்கும் நீர்ப் பாம்புகளையும், அதன் கரையில் வளர்ந்த கோரைப் புற்களில், மாலை வெயிலில் மரகதம் போல் ஒளிரும் பச்சைப் புழுக்களைப் பிடுத்துத் தின்னத் தொண்டை குழிந்து குழிந்து எழ, மூச்சு விட்டுக்கொண்டு வரப்பு ஓரங்களில் காத்திருக்கும் தவளைகளையும் பார்த்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று ஓடும் நீரில் வளைந்து வளைந்து அசையும் ஒரு பச்சை வண்ண நிழலையும், புன்னகையையும் கண்டு திரும்பினேன் அவள் நின்று கொண்டிருந்தாள் பட்டுப் பச்சைப் பாவாடையும் பச்சைச் சோளியும் அணிந்து மரகதக் சிலைபோல் அவள் நின்று கொண்டிருந்தாள். சிரித்தபடியே, "என்ன சார்" அங்கே ரொம்ப நேரமா பார்த்துக்கிட்டே இருக்கிங்க. நான் பள்ளிக்கூடத்தில் பொறப்பட்டதுலேயிருந்து பார்த்துக்கிட்டேவறேன், நீங்க குனிந்த தலை நிமிராமே ஆத்தையே பார்த்துக்கிட்டு இருக்கிங்க. என்ன சார் அங்கே? நானும் பார்க்கட்டுமா...சார்!" என்றாள்.

முகத்தைத் திருப்பினேன். கண்முன்னே அவளையும், அவளுக்குப் பின்னே அந்தப் பச்சை வயல்களையும் பார்த்தேன். அந்தப் பசுமையின் அசைவுகளிலெல்லாம், அவளே அசைந்து கொண்டிருப்பதுபோல் தோன்றிற்று.'உன்னால் பார்க்க முடியாது அருந்ததி!" என்றேன்.

"ஏன் சார்...?" என்று உடனே வாடிய முகத்தோடு கேட்டாள். கனவிலிருந்து விழித்துக் கொண்டவன்போல், "என்ன அருந்ததி, என்ன சொன்னேன்? உன்னாலே பார்க்க முடியாதுன்னு சொன்னேனா. ஆமாம், அதோ அங்கேபார். ஒரு வளை. அங்கே நண்டு ஒன்று போய்ப் புகுந்துவிட்டது. அதனால்தான் ஒன்னால் பார்க்க முடியாதுன்னேன்" என்று ஏதோ அவள் திருப்திபடும்படி சொன்னேன்.

"நான்கூட சின்னவளா இருந்தப்போ அப்படித்தான் சார். சாயங்காலம் தாடிப் பிச்சைக்காரன் வந்தா பயந்து கிட்டு வீட்டுக்குள்ளே ஓடிப்போய் அம்மாவிடம் நின்னுக்

கிட்டு, போயிட்டானான்னு எட்டி எட்டிப் பார்ப்பேன்? என்று ஏதோ சொல்லி, அந்த வளையையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். காயாத—முற்றிய இரண்டு மிளகுகளை இரண்டு ஊசிகளில் குத்திச் சமமாக நிறுத்தியது போல, இரண்டு கைகளையும் வளைக்கு முன்னே வைத்துக் கொண்டு ஒரு நண்டு எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

''உம்'' என்று வியப்பதுபோல் கேட்டுவிட்டு, ''எங்கே அந்தப் பாட்டு, பாடு பார்க்கலாம்'' என்று கொஞ்சலாகக் கேட்டேன்.

''எப்படி சார் பாட்டெ பாப்பிங்க'' என்று கலுக்கெனச் சிரித்துக்கொண்டே சுற்றும்முற்றும் பார்த்தாள். இரண்டு திசைகளிலிருந்தும் யாரும் வரவில்லை. பாடினாள் மீண்டும் அந்த இதழ்கள் நெகிழ்ந்தன. மாலை வெயில், தென்றல் காற்று, ஆற்று ஓசை, பச்சை வண்ணம், வான வெளி-இவை எல்லாவற்றோடும் அந்தக் குரலும் ஒன்றித்துப் போய், என்னையும் ஈர்த்து அவற்றோடு இயைப்பதுபோல் இருந்தது. பாடல் நின்றது. மீண்டும் மண்ணுக்கு வந்தேன்.

''நேரம் ஆயிட்டுது சார். அம்மா தேடுவாங்க'' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டுவிட்டாள். அந்தப் பச்சைப் பாவை நடந்து செல்லும் அழகைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தேன். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே அந்த மண்சாலையில் அவள் தனியே போனாள். பெரிய பெண்ணாக இருந்தால் 'காதல் கீதல்' என்று ஏதாவது கதை எழுதியிருக்கலாம். அந்தச் சொல்லே அறியாத அந்தப் பிஞ்சு வடிவம் என் கண்களை விட்டு மறைகிறவரை பார்த்து கொண்டே இருந்தேன். என்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்து விட்டிருந்தது.

சனியும் ஞாயிறும் எப்போது வரும் வரும் என்று முன்பெல்லாம் எதிர்பார்ப்பேன். இப்போதோ அந்த

விடுமுறைகள் ஏன் வருகின்றன என்று நொந்துகொண் டேன். அப்படி மாறிவிட்டது என் மனம். ஒவ்வொரு நாளும் மாலையில் மதகடியில் நாங்கள் ஏதாவது பேசு வோம். என்னென்ன எல்லாமோ கேட்டாள். ''மரங் கொத்திக் குருவியை ஏன் சார் கடவுள் படைத்தார்'' என்று கேட்டாள் ஒருநாள்.

''ஏன் படைத்தார்...'' என்று எண்ணத் தொடங்கி னேன் வெகுநேரம் எண்ணினேன்போல் தோன்றுகிறது. அவள் போய்விட்டிருந்தாள்.

மறுநாள் சொல்லிக்கொள்ளாமல் போனதற்காகக் கோபித்துக் கொண்டவன்போல், அவள் வருவதைப் பார்த்துவிட்டு முகத்தை ஆற்றுப் பக்கம் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். பின்னால் வந்து நின்று, ''கருதிக் கருதிக் கவலைப்படுவார்...'' என்ற அடியைப் பாடத் தொடங்கினாள். ''ஐயோ! மூச்சுத் திணறுமே!'' என்று திரும்பினேன். பாட்டை நிறுத்திவிட்டுச் சிரித் தாள். அந்தச் சிரிப்பைக் கண்டபின் என்னால் கோபங் கொண்டவன்போல் நடிக்கக்கூட முடியலில்லை; நானும் சிரித்தேன்.

'இல்லே சார். ஒரு நாள் காலையிலே எங்க வீட்டுத் தோட்டத்து மரத்திலே 'டொக் டொக்னு' சத்தம் கேட்டது. போய்ப் பார்த்தேன். அங்கே ஒரு குருவி மரத்தைப் புடிச்சுக் கிட்டு மூக்காலே குத்திக்கிட்டிருந்தது. முண்டாசு கட்டிக்கிட்டு தேங்காய் பறிக்க மரம் ஏறுற ஆள் மாதிரி அது ஏறிச்சு. சத்தம் போடாம நின்று பார்த்துக்கிட்டே இருந்தேன். ரொம்ப மெல்லச் சொன் னாள். ஏதோ இப்போது கண்முன் பறவை இருப்பது போல. திரும்பித் திரும்பிச் சுற்றிக்கொண்டே மேலே போய்க்கொண்டே 'டொக் டொக்' என்று மரத்தைக் கொத்திச்சு. அப்புறம் ஆடாமே அசையாமே ஒரே எடத்துல குத்தித் துளை போட்டுது, உள்ளே கருப்பா

ஒரு புழு இருந்திச்சு. மூக்காலே குத்தி எடுத்துக்கிட்டுப் பறந்து போயிடுச்சு. அது ‘டொக் டொக்’னு குத்தினது எங்கம்மா உடம்பு சரியில்லாதப்போ டாக்டர் ‘டொக் டொக’னு முதுகிலே தட்டினதுபோல இருந்தது. ‘டி.பி. கிருமிகள் நெஞ்சு எலும்பை அரிச்சிடுச்சி ஆபரேஷன் செஞ்சிக்குனும்’னு டாக்டர் சொன்னாரு. ஆஸ்பத்திரி யிலே ஆபரேஷன் செய்தாரு; ஊசி எல்லாம் போட்டாரு. நான் பக்கத்திலேயே அழுதுகிட்டு இருந்தேன் ஆஸ்பத்திரி யிலே இருந்து வர்றப்போ அம்மா நூறு ரூபா பணங் கொடுத்தாங்க. இந்த மரங்கொத்திக் குருவிகூட டி. பி. டாக்டர் மாதிரி ‘டொக் டொக்’னு தட்டிப் பார்த்து பூச்சி இருக்கிற எடத்தைக் கண்டு புடிச்சுது. தொளை போட்டுது. பூச்சியை எடுத்துக் கொன்று தின்னுட்டுது. அப்போ நெனச்சேன். மரத்து டி. பி.க்காக கடவுள் மரக்கொத்தி டாக்டரைப் படைச்சிருக்கார்னு. இதைக் கற்பகம் மாலினிகிட்டே எல்லாம் சொன்னேன். போடி பயித்தியம்னு சொல்லிட்டு விளையாடப் போயிட் டாங்க வாத்தியாரம்மாவிடம் சொல்லப் பயமா இருந் தது. ஒங்ககிட்டே சொல்லணும்னு ஆசையா இருந்தது. ஒங்களுக்கே தெரிஞ்சிருந்தா ‘எனக்குத் தெரியுமேன்னு!’ கேலி செய்விங்கன்னுதான் நான் அப்படிக் கேட்டேன். நீங்க என்னடான்னா எங்கிட்டே பேசாம எங்கேயோ ஆகாயத்தைப் பார்த்துக் கிட்டு உட்காந்திட்டிங்க’’ என்று மூச்சு விடாமல் பேசி முடித்தாள்.

‘‘அடட... அப்படியா! வெரிகுட். இப்போதுதான் மரங்கொத்தியைக் கடவுள் ஏன் படைத்தார்னு தெரிஞ்சு கிட்டேன்’’ என்று சொல்லி, அவள் முதுகில் கனிவோடு தட்டிக் கொடுத்துக்கொண்டே, ‘‘உன்னை ஏன் கடவுள் படைத்தார் தெரியுமா?’’ என்று சொல்லி நிறுத்தினேன்.

அவள் வியப்போடு தன் கரிய விழிகளை அசைக்கா மல் என்னையே ஏன் என்று கேட்பதுபோல் பார்த்தாள்.

''ஏன் தெரியுமா? மரங்கொத்தியை ஏன் கடவுள் படைத்தார்னு கண்டுபுடிச்சி, வாத்தியார்களுக்கு எல்லாம் சொல்லிக்கொடுக்கத்தான்'' என்று சொல்லிச் சிரித்தேன்.

'போங்க சார்' என்று சிணுங்கிக்கொண்டே போய் விட்டாள். எனக்கே வியப்பாக இருந்தது. எதிர்காலக் கியூரி அம்மையாரை அவளிடம் கண்டேன். என்ன ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தும் இந்தக் குழந்தை மனத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லையே! அன்றே 'ஏன் கடவுள் படைத்தார்?' என்று ஆர்வத்தோடு கேட்டிருந்தால், இந்த அற்புதமான படைப்புக் கொள்கையை அந்தக் குழந்தை எவ்வளவு இன்பத்தோடு சொல்லி மகிழ்ந்திருப்பாள். இனித் தெரிந்தாலும் சரி தெரியாவிட்டாலும் சரி, அவள் கேட்கும் கேள்விகளுக்கு அவளையே பதில் சொல்லச் சொல்லி ஆர்வத்தோடு கேட்டு அவளை மகிழ்விக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

இன்னொரு நாள் என் அருகில் அமர்ந்தபடியே, ''மரப்பட்டை எல்லாம் சொரசொரப்பா இருக்கே ஏன் தெரியுமா சார்?'' என்று ஒரு புதிர் போட்டாள். பழைய சூட்டை நினைத்துக்கொண்டு ''ஏம்மா?'' என்று கேட்டேன்.

''நமக்கு முதுகை அரிச்சா கையிருக்கு சொறிஞ்சிக்கிறோம். அல்லாட்டி யாராவது சொறிஞ்சி உடுறாங்க, ஆடு மாடுக்கெல்லாம் முதுகை அரிச்சா யார் சார் சொறிஞ்சி விடுவாங்க? அதுக்காகத்தான் கடவுள் மரப்பட்டையை எல்லாம் சொரசொரப்பா படைச்சிருக்காரு. நான் பார்த்தேன் சார். மாடுங்க முதுகைத் தென்னந்தோப்பிலே தேய்ச்சிக்கிட்டிருந்ததை'' என்று சான்றோடு விவரித்தாள்.

'இல்லம்மா... தென்ன மட்டை விழுந்த வரும்பும்மா அது' என்று அவளை மறுத்துச் சொல்ல நினைத்தேன். என் அறிவுப் பார்வையைவிட அவள் அருட்பார்வையே உயர்ந்தது என்று எண்ணி, ''என் கண்ணே!'' என்று

அவளை அணைத்துக்கொண்டேன். அதைவிட அவளைப் பாராட்ட வேறு வழி எனக்கு அப்போது தோன்றவில்லை. அவள் தாய் அணைத்ததுபோல் உணர்ந்தாளோ என்னவோ அமைதியாக இருந்தாள். "சரி, அருந்ததி. நேரமாயிடுச்சி. வீட்டுக்குப் போ" என்று அனுப்பி வைத்துவிட்டு என் அறைக்குப் புறப்பட்டேன். இப்படித் தத்துவமும் விஞ்ஞானமும் கலந்து திகழும் அந்தக் கண்களைப் பார்த்துக்கொண்டே காலம் எல்லாம் கழித்திருக்கலாம் என்று இப்போது நினைக்கிறேன் அப்படிக் கழித்திருந்தால் இன்று நான் கலங்க வேண்டியதில்லையே.

அந்த வாய்ப்பு இல்லாமற் போயிற்று. கதைகளில் குறுக்கிடுவதுபோல் வில்லனோ விதியோ குறுக்கிடவில்லை. மேலே படிக்கவேண்டும் என்ற என் ஆர்வமே எங்கள் நட்புக்குத் தடையாயிற்று. எப்படியும் மேற் படிப்பைக் கல்லூரியில் சேர்ந்து கற்கவேண்டும் என்ற உறுதியில், ஜூலை மாதம் முதல் தேதி அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டேன். அந்த ஆண்டு ஜூன் மாதம்தான் ஐந்தாம் வகுப்பை முடித்துக்கொண்டு ஆறாம் வகுப்பில் அருந்ததி சேர்ந்திருந்தாள். அதாவது சிறிய பள்ளிக்கூடத்தை விடுத்து பெரிய பள்ளி மாணவியாக ஆகியிருந்தாள்.

எல்லோருக்கும் நிகழ்வதுபோல் எனக்கும் பிரிவுபசாரம் நான் புறப்படும் நாள் பிற்பகல் நிகழ்ந்தது. அன்று மாலை 5 மணி வண்டியிலேயே நான் சென்னைக்குப் புறப்பட்டதால் பள்ளியிலிருந்து ஒரிரு ஆசிரியர்களும் தலைமை ஆசிரியரும் மாணவர் எல்லோரும் வழியனுப்ப ரயில் நிலையம் வரை வந்திருந்தனர். அருந்ததியும் தன் வகுப்புப் பெண்களோடு வந்திருந்தாள். முருகன் என் கையைப் பற்றிக்கொண்டு "அண்ணா! அண்ணா!" என்று அழுதான். "கவலைப் படாதே. குமாரசாமி சாரிடம் சொல்லியிருக்கேன். உனக்கு வேண்டியது உதவுவார்" என்று சொல்லி முதுகை மெல்லத் தட்டிக்

கொடுத்துச் சமாதானம் செய்தேன். சிங்காரவேலு ''சார் இனிமே நாங்க சண்டை போடமாட்டோம் சார்'' என்று அழுதான். அவனும் கண்ணனும் சண்டை போட்டதற்காக நான் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தது நினைவுக்கு வந்தது. இப்படிப் பலபேர்களைச் சமாதானம் செய்துகொண்டிருக்கும்போதே வண்டி வந்துவிட்டது. என்னிடம் அருந்ததி நெருங்க முடியாமல் மாணவர்கள் சூழ்ந்திருந்தனர். ஆசிரிய நண்பர்களும், பெற்றோர் சிலரும் நெருங்கி எனக்குப் பல அறிவுரை சொல்லிக் கொண்டிருந்ததால் நானும் அவள் அருகே செல்ல இயலவில்லை. ஒரு சின்ன ஆலங்கன்றுக்கு அருகில் அவள் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே தன் தோழிகளோடு நின்றுகொண்டிருந்தாள். இருந்த இடத்தில் இருந்தபடியே 'வணக்கம்' என்று சொல்லிக்கொண்டே பெண்கள் நின்றுகொண்டிருந்த பக்கம் பார்த்தேன். என்னைக் கண்டு பீறிட்டுக் கொண்டு வருகிற அழுகையை அடக்கமுடியாமல் அவள் தலைகுனிந்து கொண்டாள்.

கண் கலங்கியபடியே நானும் வண்டியில் ஏறிப் படிக்கட்டில் நின்றேன். அதற்குள் மாணவர் பலர் என் பெட்டி படுக்கை முதலியவற்றை ஏற்றிவிட்டனர். அப்போது அவள் ஓடிவந்து என் கையில் ஒரு பொட்டலத்தைக் கொடுத்தாள். மனத்துக்குள்ளேயே விம்மினாள். அவள் கையைப் பற்றிக்கொண்டு, ''ஏன் அருந்ததி படித்துவிட்டு மறுபடியும் இங்கு வருவேன். உனக்குப் பாடஞ்சொல்லிக் கொடுப்பேன்'' என்றேன். ''நிச்சயமாகவா சார்!'' என்று அவள் ஆர்வத்தோடு கேட்டாள். ''உம்; நிச்சயமாக'' என்று உறுதி சொன்னேன். அவள் கண்கள் பிரகாசித்தன. துளிர்த்து நின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சிரிக்க முயன்றாள்.

வண்டி நகர்ந்தது. உள்ளே வந்து சன்னல் வழியே தலையை நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்தேன். எல்லோரும் கை அசைத்து வழி அனுப்பினர். நானும் கை அசைத்

தேன். வண்டியும் வேகம் எடுத்தது. நிலையத்திலிருந்தவர்களும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டனர். அவள் மட்டும் போகாமல் என் பக்கம் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தாள். வண்டி தூரமாகப் போகப் போக அவள் மங்கிப் புகைபோல் தோன்றினாள். காலம்போல் வேகமாக ஓடிய வண்டியும் என் கண்களைவிட்டு அவளைப் பிரித்தது அந்த ஊரில் கழித்த நாட்களை எண்ணிக் கொண்டிருந்ததில், அடுத்திருந்த தஞ்சாவூர் சந்திப்பு வந்ததுகூடத் தெரியவில்லை.

அவள் கொடுத்த பொட்டலம் என் கையில் இருந்தது. உள்ளே போய் உட்கார்ந்து மெல்லப் பிரித்துப் பார்த்தேன். தயிர்ச் சோறு. அந்தச் சோற்றுக் கட்டியில் ஒரு மூலை சிதைந்திருந்தது. கொஞ்சம் எடுத்ததுபோல் தெரிந்தது. அந்தச் சின்னஞ்சிறு வயிற்றுக்காக மத்தியான உணவாகக் கொண்டுவந்த சோறு அது என்று எனக்குத் தெரிந்துவிட்டது. இரவில் உண்ண எனக்குக் கொடுப்பதற்காகத்தான் உண்ணாமல் வைத்திருந்த அவள் அன்பின் ஆழத்தை உணர்ந்து வாய்விட்டு அழுதேன். பக்கத்தில் இருந்த பெரியவர் ஒருவர், "அழாதே அப்பா! அம்மா கட்டிக்கொடுத்த சோறா...சாப்பிடு இப்படித்தான் அழுவே அப்புறம் வேலை, கல்யாணம் காட்சின்னு ஆனப்புறம் எல்லோரையும் மறந்துடுவே...என் பையன்கூட ஒன்னாட்டந்தான் இருந்தான். இப்போ அப்பான்னா அவரு யாருன்றான்" என்று எனக்குச் சமாதானம் சொல்பவர்போல் தாம் அழுது தீர்த்தார். அவர் சொன்னதுதான் வாழ்க்கை உண்மையோ?

சென்னை நகரச் சூழலில், பரபரப்பான வாழ்வில், ஓய்வற்ற உழைப்பில், உறக்கமற்ற கல்லூரிப் படிப்பில், போட்டிப் பந்தயப் புகழ் பொறாமைகளில் முதல் சில மாதங்கள் இடைஇடையே அருந்ததி தோன்றினாள். அவள் வீட்டிற்குச் சென்று, அவளுக்கு ஒரே துணையான அவள் தாயோடு பழகித் தொடர்புகொள்ளத் தவறி

விட்டோமே என வருந்தினேன். பள்ளிக்கு அவள் பெயரில் அவளுக்கு மட்டும் கடிதம் எழுதத் தோன்றவில்லை. எனக்குப் பெரிதும் துணையாக இருந்த தலைமை ஆசிரியர்க்கு மட்டும் அவ்வப்போது கடிதங்கள் எழுதி வரலானேன். அவளுக்கு மட்டும் ஏனோ ஒரு கடிதம்கூட எழுதவில்லை. பின் சில நாட்கள் அவள் நினைவுமட்டும் வந்து போய்க்கொண்டிருந்தது. பின்பு அதுவும் வருவ தில்லை. நான் அவளை மறந்தே போனேன்.

ஆறாண்டுகள் விரைவாக ஓடிவிட்டன. எம் எஸ்ஸி. தேர்வு எழுதிக்கொண்டிந்தேன்; ஓரிரு நாட்களே இருந்தன முடிவதற்கு. அப்போது தலைமையாசிரியரிட மிருந்து விரைவுத் தபாலில் கடிதம் ஒன்று வந்தது.

அன்புள்ள சேகர்,

உன் கடிதம் கிடைத்தது. எம். எஸ்ஸி. தேர்வில் வெற்றிபெற வாழ்த்துகிறேன். படித்துவிட்டு என்ன செய்யலாம் எனக் கேட்டிருந்தாய். அதுபற்றி முடிவு செய்துள்ளேன். ஆழியூர் சர்க்கரை ஆலை இயக்குநர் உன் சாதிதான். ஆலையில் வேலை வாங்கித் தருவதாய் உறுதி கூறியிருக்கிறார். இதற்கு இடையில் அங்கு உனக்கு ஒரு சின்ன வேலை. சனிக்கிழமை தேர்வு முடிந்துவிடுகிறது அல்லவா? ஞாயிறன்று மேரி ராணிக் கல்லூரிக்குப் போ. அங்கு இதனுடன் அனுப்பியிருக்கும் விசிட்டிங் அட்டையைவிடுதி வார்டனிடம் கொடு. தவறாமல் போய்க்கொடு. பிறகு மறுநாள் சனிக் கிழமை இரவு வண்டியில் புறப்பட்டு இங்கு வா, வேலை பற்றி முடிவு செய்வோம்.''

கடிதம் படித்த உடன், 'ஏன் மேரி ராணிக் கல்லூரி வார்டனைப் பார்க்கச் சொல்லியிருக்கிறார். ஒருகால் சர்க்கரை ஆலையில் யாரேனும் தெரிந்தவர்கள் அவர் களுக்கும் இருக்கிறார்களோ என்னவோ?' என்று எண்ணியவாறே தேர்வு முடிந்த மறுநாள் மேரி ராணிக்

கல்லூரிக்குப் போய் வார்டனிடம் விசிட்டிங் அட்டையைக் கொடுத்து விட்டு நின்றேன். என்னவோ என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "தாங்கள்தான் மிஸ்டர் சேகரா? வாருங்கள். ஒருமுறை நீங்கள் பேச்சுப் போட்டிக்காக எங்கள் கல்லூரிக்கு வந்திருக்கிறீர்களே...பரிசுகூடத் தட்டிக் கொண்டு போனீங்களே...நினைவிருக்கிறதா?'' என்று கேட்டுக்கொண்டே விடை எதிர்பாராமல், ''கொஞ்சம் இங்கே இருங்கள். வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே தம் அறையுள் நுழைந்து, அங்கு நின்றுகொண்டிருந்த ஆளிடம் ஏதோ சொல்லி வெளியே அனுப்பினார்.

நான் விசிட்டர் அறையில் கிடந்த சோபாவில் அமர்ந் திருந்தேன். தேர்வுக்குக் கண் விழித்துப் பலநாள் படித்த தால் உறக்கம் தலையைச் சுற்றியது. இதற்கு இடையில் ''எதிர்கால உலகம் காந்தி அடிகளுடையதா மார்க்ஸ் முனிவருடையதா?'' என்ற தலைப்பில் அங்கு பேசிய போட்டி நினைவுக்கு வந்தது. 'எதிர்காலம் காந்தி அடிக ளுடையதே' என்று பேசி என்னிடம் தோற்ற பெண் நினைவுக்கு வந்தாள். அப்போது அவளைப் பற்றி எதுவும் எண்ணிப் பாராத என் மனம் இப்போது அவளை மீண்டும் நினைத்துப் பார்த்தது. வெள்ளிய ஆடையில், தங்கசிலை போல் நின்று, காந்தி அடிகளாரின் கொள்கைகளையும் அவை எப்படி எதிர்கால உலகைக் காக்கும் ஒரே துணை என்றும் மெல்ல மெல்ல, ஆனால் ஆணித்தரமாக அவள் எடுத்துரைத்த கருத்துக்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக என் நினைவுக்கு வந்தன. கருத்து வளத்தோடு என் சொல் அலங்காரத்தால் நான் அவளை வென்றதும் என் நினைவுக்கு வந்தன. தோற்றுப் போயுங்கூட என்பால் பிற போட்டியாளர்போலப் பொறாமைப்படாது, ''மிஸ்டர் சேகர்! என்னவோ நான் இன்று தோற்றுப் போகலாம். ஆனால், ஒருநாள் நீங்களே உணர்வீர்கள். இந்த உலகைக் காந்தியடிகள் கொள்கைதான் காப்பாற்றும் என்று. அப்படி உணர்ந்தால் தயவுசெய்து எங்கிருந்தாலும்

எனக்குத் தெரிவியுங்கள். எனக்கு அதுவே சிறந்த பரிசாகும். இந்தப் பரிசை நீங்களே வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று படபடப்பு எதுவும் இன்றி அமைதியாக அவள் கூறியதும், என் நினைவுக்கு வந்தன. அப்போது தொடங்கிய சீனப்படை எடுப்பு அந்தப் பெண் கூறியது தான் உண்மையோ என்று எனக்கு உணர்த்தத் தொடங்கியிருந்தது. ஏனோ நான் அவளுக்கு ஒன்றும் பதில் தெரிவிக்கவில்லை. இப்போது அந்த நினைவு வரவே, வார்டனிடம் சொல்லி அந்தப் பெண் இருந்தால் பார்க்க வேண்டும் என சொல்லலாம் என்று எழுந்தேன். நான் எழுந்து இரண்டு மூன்றடி முன் எடுத்து வைத்திருப்பேன். அவளே வந்தாள். அந்தப் பெண்தான். அதே 'வெள்ளைக் கலை உடுத்தி, வெள்ளைப் பணி பூண்டு, என் முன் வந்து நின்றாள். அவளைக் கண்டு வார்டனும் தன் அறையிலிருந்து வந்தார்.

''மிஸ்டர் சேகர்! இவள்தான் உங்களோடு போட்டியிட்டுத் தோற்றவர்; செல்வி வள்ளியம்மை. இப்போது மறுபடியும் போட்டியிடுகிறார். இதில் தோற்காமல் இருக்க வேண்டும் என்று கர்த்தரைப் பிரார்த்திக்கிறேன்'' என்று சொல்லி நிறுத்தியபடியே, என்னையும் அவளையும் பார்த்தார். அவள் நாணித் தலை குனிந்தாள்.

''இப்போது நான் போட்டிக்கு வரவில்லை. தோற்கடிப்பதைவிட தோற்பதேமேல் என்று நினைக்கிறேன். உண்மையில் காலப் போக்கைப் பார்த்தால் செல்வி வள்ளியம்மைதான் வென்றதாகத் தெரிகிறது'' என்று நிறுத்தினேன்.

அவள் எதுவும் சொல்லாமல் குனிந்தபடியே கேட்டுக் கொண்டிருந்தாள். வார்டன் எதையோ சொல்ல முயன்று கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் அமைதி நிலவிற்று.

''மிஸ்டர் சேகர்! இந்தப் பெண்ணின் தந்தை ஆழியூர் சர்க்கரை மில் இயக்குநர்; பெரிய பணக்காரர்; நல்லவர்; காந்தி அடிகளிடம் ஈடுபாடு கொண்டவர்; உப்புச்சத்தி

யாக் கிரகத்தில் சலந்துகொண்டு தடியடிப்பட்டவர். தென் ஆப்பிரிக்காவில் இறந்துபோன அந்தத் தமிழ் நாட்டுப் பெண் வள்ளியம்மை பெயரையே தம் மகளுக்கும் வைத்ததிலிருந்து அவர் இயல்பை நீங்கள் புரிந்து கொள்ளலாம். இவளை நீங்கள் அங்குப் போவதற்குமுன் அறிந்துகொள்வது நல்லது. அதற்காகத்தான் இந்த ஏற்பாடு'' என்று திரும்பிப் பார்த்தார். மூன்று கிண்ணங்களில் ஓர் அம்மையார் பால் கொண்டு வந்தார். வள்ளி எழுந்து எனக்கும் அந்த அம்மையாருக்கும் வழங்கினாள்.

''இவள் காப்பி, டீ குடிக்க மாட்டாள். இந்த விடுதியிலேயே இவள் ஒரு தனிப்பிறவி. ஆனால் மதிப்பெண் வாங்குவதில் மட்டும் முதல்...'' என்று ஏதேதோ சொல்லிக் கொண்டு போனார். பாலைச் சுவைத்தபடியே அந்த வெண்ணிறப் பாவையையும் நோக்கினேன். என் பார்வையைச் சந்திக்க இயலாமல் அவள் புன்னகையோடு தலைகுனிந்து கொண்டாள்.

மறுநாள் பகலெல்லாம் ஊர் செல்லும் நினைவிலேயே கழிந்தது. இரவு வண்டி ஏறினேன். அதிகாலையில் எங்கள் ஊருக்கு வண்டி சென்றது. இறங்கிய உடன் ஆசிரியர், ''வாப்பா வா. பெட்டிகளை எல்லாம் இந்த ஆள் எடுத்து வருவான். வண்டி கொஞ்சநேரம் நிற்கும். இங்கு கிராஸிங் மெல்ல வா'' என்று அன்போடு, அன்பைவிட ஏதோ பெரிய மரியாதையோடு அழைத்தார். எதிரே நின்ற ஆலமரத்தைப் பார்த்தேன். ஆறாண்டுகளுக்கு முன்பு இருந்த ஆலங்கன்றுதான் அது என்ற நினைவு எனக்கு வந்தது. உடனே அருந்ததியின் நினைவு பளிச்சிட்டது. எப்படியும் இன்று பகலில் பள்ளிக்குப் போய் மெல்ல விசாரிப்போம் என்று எண்ணினேன். 'ஆனால் அவள் இந்தப் பள்ளியில் இருக்க மாட்டாளே. ஒரு கால் தஞ்சாவூரில் படிக்கலாம். அந்த அம்மா உயிரோடு இருக்கிறார்களோ என்னவோ? அவள் படிக்கிறாளோ, படிப்பை நிறுத்தி விட்டாளோ?' என்று பல எண்ணங்கள்

அந்த ஆலமரத்தைக் கண்டவுடன் அலைமோதிக்கொண்டு வந்தன.

"என்ன சேகர், அந்த ஆலமரத்தைப் பார்த்து அப்படியே நின்னுட்டிங்களே. ஆலை இயக்குநர் கார்லே காத்துக்கிட்டிருக்காங்க, வாங்க" என்ற ஆசிரியர் அழைப்பு என்னை மீண்டும் இந்த உலகத்திற்குக்கொண்டு வந்தன.

நீல வண்ணப் பியட் காருக்கு வெளியே வெள்ளிய கதராடை உடுத்தியபடி என்னைப்பார்த்துக்கொண்டு நின்ற எளிய ஒரு தோற்றத்தைப் பார்த்தேன். இயக்குநர் என்றால் ஏதோ தொந்தி தள்ளிக்கொண்டிருக்கும் ஒருவர் என்ற என் எண்ணத்திற்கு மாறாக அவர் தோற்றம் இருந்தது. உண்மையிலேயே இன்றும் காந்தியடிகள்பால் ஈடு கொண்ட ஒரு சான்றோராகவே அவர் எனக்குத் தோன்றினார். என்னை அறியாமலே என் கைகள் குவிந்தன. "வணக்கம்" என்றேன்.

"வாங்க தம்பி! வாங்க" என்று கைகளால் என் கையைப் பற்றிக்கொண்டு காரில் 'போய் உட்கார்ந்தார். நானும் அமர்ந்தேன்; பண்ணையார் வீட்டுக்குப் போனோம். அந்த வீட்டாரும் வேறு சிலரும் என்னைப் பார்த்தனர்; பேசினர். தலைமை ஆசிரியர் என்னைத் தனியே பார்த்து, "வைகாசியில் திருமணம் அப்பா. உனக்கொன்றும் தடை இல்லையே" என்றார். வள்ளியம்மையின் எளிய தோற்றமும் இனிய பேச்சும் எழில் முகமும் என் கண்முன் ஒரு கணம் தோன்றின. 'உம்' என்று தலை அசைத்ததாக ஞாபகம். எப்படியோ அன்று கழிந்து விட்டது. மறுநாள் காலையில் சர்க்கரை 'ஆலை விஷயமாகச் சென்னையில் சிலரைச் சந்திக்க வேண்டும் என்று பண்ணையார் என்னை அழைத்துக்கொண்டு காரில் புறப்பட்டுவிட்டார். "எனக்குக் கார் என்றால் மயக்கம் வரும். ரயிலில் வருகிறேன்" என்று சொன்னேன். அவருக்கு அது பிடிக்காததுபோல் தோன்றியது. இருந்தாலும் "சரி,

அப்படியானால் உங்களை மாலை வண்டியில் ஏற்றி விட்டுவிட்டு நான் காரில் வருகிறேன். அங்கே சென்னை யில் எழும்பூர் நிலையத்தில் உங்களைச் சந்திக்கிறேன்'' என்று சொல்லி, அன்று பகல் எல்லாம் சர்க்கரை ஆலைக்கு அழைத்துப்போய் பலவற்றை விளக்கிச் சொன்னார். நண்பகல் உணவு. ஆலை விருந்தினர் இல்லத்திலேயே நடந்தது. அங்கிருந்தபடியே மாலையில் புகைவண்டி நிலையத்துக்கு வந்தேன். தஞ்சாவூர்ப் பக்கத்திலிருந்து வண்டி ஒன்று வந்து நின்றது. 'ஒருகால் இதில் அருந்ததி வருவாளோ?'' என்று எதிர்பார்த்தேன். என் எண்ணம் பழுதாகவில்லை. அவள் தலைசிப் பெட்டியிலிருந்து இறங்கினாள். என்னைக் கண்டதும் குழந்தைபோல் ஓடி வந்தாள். என் அருகில் இயக்குநரைக் கண்டதும் தயங்கி, அந்த ஆலமரத்தடியில் போய் நின்றாள். அவளோடு அவள் பின்னே மெல்ல நடந்து வந்த இன்னொரு பெண்ணும் வந்து சேர்ந்து கொண்டாள். அருந்ததி அவளிடம் ஏதோ கூறிவிட்டு, என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். எங்கள் பழைய களங்கமற்ற அன்பை முன்பின் அறியாத இயக்குநரை வைத்துக் கொண்டு, வளர்ந்து பெரிய பெண்ணாகத் தோன்றிய அவளிடம் போய்ப் பேச எனக்குத் தயக்கமாக இருந்தது. மேலும், அவள் என்னை நோக்கியபடியே இறங்கி வந்ததையும் நான் அவளை ஆர்வத்தோடு பார்த்த தையும் பண்ணையார் பார்த்திருக்க வேண்டும். அதனால் தானோ என்னவோ எப்போதும் மலர்ந்திருந்த அவர் முகம் கடுகடுப்பாக இருந்தது. இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன; அந்த ஐந்து நிமிடங்களும் அவள் எனக்காக அங்கேயே காத்துக்கொண்டு நின்றாள். துணிவின்றி நான்தான் கோழைபோல் தலைகுனிந்து கொண்டிருந் தேன். அவள் என் மாணவி என்று கூறவும், அவளை நான் அறிந்தவன்போல் காட்டிக்கொள்ளவும் கூட அஞ்சினேன். இறுதியில் அவளோடு பேசாமலேயே வண்டி ஏறி வந்துவிட்டேன்.

வண்டி ஏறிச் சென்னையை அடைந்ததும் அவர் சொன்னபடி வந்திருந்தார். அன்றிலிருந்து நான் தனிமையை இழந்தேன். எப்போதும் சிலர் என்னைச் சுற்றியே இருப்பர். எல்லா வேலைகளையும் எனக்காக அவர்கள் செய்யக் காத்திருந்தனர். திருமணப் பத்திரிகையையாவது நேரே சென்று அருந்ததிக்குக் கொடுத்து வர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதுவும் நிறைவேறவில்லை.

மாலை வண்டியில் இறங்கினேன். காலையில் திருமணம் நிகழ்ந்தது. மாலையில் வரவேற்பு விழா ஆரம்பமானது. திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் பலர் பல பரிசுகள் கொடுத்தனர். அவற்றில் ஒன்றுதான் என் நெஞ்சைக் கவர்ந்த அந்தப் பேனா, அது என் பழைய பேனா, அருந்ததிக்கு நான் கொடுத்தது. என் வகுப்பில் சேர்ந்தபோது அவள் எழுதிய முதல் கட்டுரையைப் பாராட்டி, வகுப்பில் அவளுக்கு நான் தந்த முதற் பரிசு அது. அதைக் கடிதம் ஒன்றில் செருகிக் கொடுத்தவள்தான், அன்று அருந்ததியோடு ரயில் நிலைய ஆலமரத்தடியில் நின்று கொண்டிருந்தவள். அந்தக் கடிதத்தை அவள் என்னிடம் கொடுக்கத் தயங்கியபோது, "என்ன வாழ்த்தா! இப்படிக் கொடுங்கள்" என்று துணிந்து நானே கைநீட்டி வாங்கிக் கொண்டேன். அதன்மேல் அருந்ததியின் கையெழுத்து மணி மணியாய்த் திகழ்ந்தது.

அந்தக் கடிதத்தைப் படிக்க மனம் துடித்தது. ஒன்றன்பின் ஒன்றாக என்னென்னவோ நிகழ்ச்சிகள் தொடர்ந்தன வரவேற்பு முடிந்ததும் விருந்து; விருந்து முடிந்ததும் நண்பர்களுடைய எக்காளம்; சீட்டாட்டம்; சினிமா. எப்படியோ இரவு 11-30 மணிக்குமேல் நான் தனியாக விடப்பட்டேன். அறையைத் தாளிட்டேன். குழாய் விளக்கை அணைத்துவிட்டு, சீரோ பாயிண்ட் பச்சை விளக்கைப்போட்டேன். கோட்டைக் கழற்றி மாட்டி விட்டு, சட்டைப் பையிலிருந்த கடிதத்தையும் பேனாவையும் எடுத்தேன். சிறிது நேரம் அந்தப் பேனாவைப் பார்த்

தேன் அந்தப் பிஞ்சு விரல்கள் தெரிந்தன. 'என்னென்ன இயற்கை உண்மைகளை அந்தப் பேனாவால் எழுதினாளோ!' என்று எண்ணினேன். அந்தக் கடிதத்தைப் பிரித்தேன்.

அன்புள்ள!...நான் எப்படி அழைப்பேன்? எப்படி அழைக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ? அன்புள்ள என் சார்! என்று எனக்கு அழைக்க ஆசையாக இருக்கிறது. அப்படியே அழைக்கிறேன். அதற்காவது அனுமதிப்பீர்கள் இல்லையா!

''நிச்சயமாக'' என்று சொல்லி வண்டியில் ஏறினீர்கள். அந்த ஒரு மந்திரச் சொல்லை ஏனோ என் மனம் மறக்கவில்லை. நாள்தோறும் நம் மதகடியைக் காண்பேன். அங்கு, சென்னையில் மதகடி இல்லையா? இருக்கும். எல்லாப் படிப்புகளுக்கும் இடையே என்னை மறந்தாலும் உங்களுக்கு என்னை அங்குள்ள ஏதாவது ஒரு மதகடி நினைவூட்டும் என்று நினைத்துக்கொள்வேன். அங்குச் சிறிது நேரம் தயங்கித் தயங்கி நிற்பேன். முன் போல் நீங்கள் அங்கு இருக்கக் கூடாதா என்று எண்ணு வேன். 'கருதிக் கருதி' என்ற அடியை மூச்சுமுட்டப் பாடுவேன். 'வேண்டாம் பாப்பா...வேண்டாம்...'' என்று அன்போடு ஆதரவோடு சொல்லி என்னை அணைத்துக் கொள்ளமாட்டீரா என்று ஏங்குவேன். உங்களுக்குப் பிடித்த பாரதியார் பாடல்கள் எத்தனையோ இப்போது மனப்பாடம் செய்துவிட்டேன். ஆழ்வார் பாடல் நூறுக்கு மேல் தெரியும். திருநாவுக்கரசர் பாடல் பல படித்தேன். இவற்றை எல்லாம் ஏன் படித்தேன். நாள்தோறும் இசை யோடு மதகடியில் பயித்தியம்போல் நின்று சொல்லிச் சொல்லி யாருக்காகப் பார்த்துக் கொண்டேன் என்று இப்போது எனக்குத் தெரியவில்லை.

அன்று மாலை வண்டியிலிருந்து இறங்கினேன். யாருக் காக என் கண்கள் ஆறாண்டுகளாக ஏங்கினவோ, அவரை அங்கே எதிர்பாராமல் கண்டேன். தங்கள் கருகருத்த மீசை யும், பேண்டும், சூட்டும் என் கண்ணை மறைக்கவில்லை.

நான் பெண், பெரியவளாக வளர்ந்த ஒரு பெண் என்பதையும் ஒரு விநாடி மறந்து போனேன். உங்களை நாடி ஓடி வந்தேன். உங்கள் இரு கைகளும் எனக்காக விரியும் என்று எண்ணி ரயிலில் இருந்த பத்துப் பெட்டிகளையும் கடந்து ஓடி வந்தேன் தாங்களோ என்னைக் கண்டும் காணாதவர் போல் நின்று கொண்டிருந்தீர். நான் தடுமாறிப் போனேன் வேறு யாரோ என்று தயங்கினேன். குனிந்த படியே தங்கள் கால்களைப் பார்த்தேன். தலைகுனிந்த படியே பல நாள் பார்த்த கால்கள் அல்லவா அவை. அவை என்னை ஏமாற்றவில்லை. துணிவோடு காத்திருந்தேன். என் தோழி அவசரப் படுத்தினாள். அவ்வப்போது நான் அவளிடம் உங்களைப் பற்றிச் சொல்லியிருந்தேன். ''என் சாரடி அவர் கொஞ்சம் இரு, யாரோடோ பேசிக் கொண்டிருக்கிறார் வருவார்'' என்று அவளையும் நிற்கச் சொன்னேன் ''நலமா?'' என்று ஒரு வார்த்தையேனும் பேசுவீங்க என்று என் மனம் படாதபாடு பட்டது இறுதியில் என்னை ஏறெடுத்துப் பாராமல், எதுவும் கூறாமல் வண்டியில் ஏறிப்போய்விட்டீர். எந்த நிலையம் என்னிடம் தங்கள் அன்பை வளர்க்கவேண்டும் என்ற உறுதி தந்ததோ, அதே நிலைத்தில் அதே ஆலமரத்தடியில் தாங்களே அதை அழித்து விட்டீர்.

வண்டி மறைகிறவரை பார்த்துக் கொண்டிருந்தேன். அன்று புறத்தே மறைய மறைய என் நெஞ்சில் வந்து நீங்கள் நிலைத்துவிட்டதுபோல் உணர்ந்தேன். இப்போதோ என் நெஞ்சில் நிலைத்த உருவை இந்த வண்டி எங்கோ பறித்துக் கொண்டு போவதுபோல் இருந்தது.

என் தோழி என்னைத் திட்டினாள். நான் அழுதேன். அதன்பிறகு தங்கள் திருமணம்பற்றிக் கேள்விப்பட்டேன். நல்லகாலமாகப் பம்பாய்ப் பக்கத்திலிருந்து யாரோ எங்க அம்மாவின் உறவாம். ஒருவர் வந்திருந்தார். நிலபுலன்களை வந்த விலைக்கு விற்றுவிட்டு அவரோடு நானும் என் அம்மாவும் போகிறோம். இனி இந்த மண்ணில் எனக்கு என்ன இருக்கு? நீங்கள் கொடுத்த பேனா இது. நானே திருப்பிக் கொடுக்க ஆசைப்பட்டேன். என்னால் அது முடியாமல் போய்விட்டது. உங்களை எண்ணி எண்ணி அதனால் என்னென்னவோ எழுதினேன் என் இதயத்தின் வாயிலாய் அதுதான் எழுதிக்கொண்டிருந்தது.

என் இதயமே இப்போது நொறுங்கிவிட்டது. இனி நான் எழுதுவதற்கு என்ன இருக்கிறது உங்களுக்காவது பயன் படும். வேறு நான் என்னத்தான் உங்களுக்குத் தரமுடியும், என் இதயக் கருவியாகிய உங்களுக்கு உரிய இதைத் தவிர.

நான் இன்னும் மதகுபோல்தான் இருந்தபடியே இருக்கிறேன் தாங்களோ அதன் கீழே குதித்துச் சுழித்தோடிய தண்ணீர்போல் எங்கோ என்னைப் பிரிந்து ஓடிவிட்டீர். கால வெள்ளத்தில் கற்கள்தாம் தாக்குப் பிடிக்கின்றன. அதைத்தான் கற்பு என்கிறார்களோ என்னவோ?

ஒரே ஒரு வேண்டுகோள். ஒவ்வொரு நாளும் நாம் சந்திப்போமே, அந்த மதகடிப் பக்கம் எப்போதாவது போக நேர்ந்தால், அருள் கூர்ந்து அங்கே ஓரிரு விநாடி நின்று யாருக்கும் தெரியாமல் அதன் கிழக்கு மூலையில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். தாங்கள் நாள் தோறும் அமர்ந்து அன்பு வழங்கிய அந்த மூலையில் யாரும் அறியாமல் என் முகத்தைப் புதைத்துக்கொண்டு கண்ணீரால் கழுவி முத்தங்கள் இட்டு, உயிர் விளக்கேற்றி பூசை செய்து வந்துள்ளேன்.

நான் நிற்கிறேன். நின்று கொண்டேயிருப்பேன்.

என்றும் உங்கள்,

அருந்ததி

மதகடியை விட்டு எழுந்தேன். கிழக்கு மூலையை நோக்கினேன். அந்த வட்ட வடிவ முகத்தில் உருண்டு திரண்டு நீண்டகரிய விழியிரண்டில் ஏக்கப் பார்வை ஒன்றை ஏந்திக் கொண்டு, கலைஞன் கனவில் மட்டும் தோன்றி, அவன் கைவண்ணத்தில் அகப்படாத ஓர் அழகு உயிர் ஒன்று பெற்று, உடல் ஒன்று உற்று, மண்ணில் வந்து உலவுவது போல என் அருந்ததி தோன்றினாள். மண்டியிட்டு அமர்ந்து முத்தமிட்டேன். மதகு மூலையில் முட்டிக் கொண்டேன். அந்த மாயத் தோற்றம் மறைந்து விட்டது. வாய்விட்டு அழுதேன். எவ்வளவு நேரம் அழுதேனோ? எங்கோ தூரத்தில் ஊளையிட்டுக்கொண்டு ஓடிவந்த இரண்டு நரிகளைக் கண்டு அழுகையை நிறுத்திச் சுற்றுமுற்றும் பார்த்தேன். நிலவுபாதி சாய்ந்திருந்தது. 'அன்பான ஒரு பெண்ணுள்ளத்தின் வளர்ச்சியை அறியத் தவறிவிட்டோமே' என்ற மனச் சுமையோடு மதகை விட்டுப் புறப்பட்டேன்.

# தங்கை

மீண்டும் ஒருமுறை அந்தக் கடிதத்தை எடுத்தேன். தங்கை புன்னகையோடு கன்னத்தில் குழி விழ என்னைப் பார்த்துக்கொண்டே அடுப்பங்கரைக்குச் சென்றாள். பல நாள்களுக்குப் பிறகு எங்கள் வீட்டு மல்லிகைச் செடியில் புதுமலர் ஒன்று பூத்ததுபோல் இருந்தது. ''பகல் 12-30 மணிக்கு வண்டியில் பெண் பார்க்க வருகிறோம்'' என்ற அந்த வரியை மீண்டும் ஒருமுறை படித்தேன்.

''சோமு!''

''என்னாண்ணே!'' என்று கேட்டுக்கொண்டே தம்பி சோமு வந்தான்.

''போய்ப் பொன்னியைக் கூட்டிவா. தங்கையை அழகா ரதி மாதிரி சிங்காரிக்கச் சொல்லு. வர்ரவுங்க அப்படியே மயங்கி விழுந்திடணும்...தெரியுமா!''

''அடடா! அடிகிடி பட்டு, அப்பொறம் ஆபத்தா போயிடப்போகுது'' என்று சிரித்துக்கொண்டே நான்கைந்து வீடுகளுக்கு அப்பால் இருந்த என் மாமன் மகள் பொன்னியைக் கூப்பிடப் போனான்.

''டேய் சோமு!''

''என்னாண்ணே!'' போனவன் கழுத்தைத் திருப்பி என்னைப் பார்த்தான்.

''அப்படியே ஊர் சுற்றப் போயிடாதே. உடனே வந்துடு. நிறைய வேலையிருக்கு'' என்று சொல்லியபடியே படங்களைத் துடைத்துச் சுவரில் மாட்டத் தொடங்கினேன்.

உடனே பாட்டியைப் பற்றிய நினைவு வந்தது. ''பாட்டி இன்னைக்கு உனக்கு ஒரு வேலையும் இல்லை. நல்லா மஞ்சள் பூசிக் குளிச்சுட்டுத் தாத்தாவோடு தெருத் திண்ணையிலேயே ஒக்காந்துடு. திருவாரூரிலிருந்து பெண் பார்க்க வந்தவுங்க சின்னம்மா வெள்ளைப் பொடவையோட முன்னே போனதைப் பார்த்துட்டு அபசகுனமா நெனச்சதுதான் ஒனக்குத் தெரியுமே.''

கடைசியாக கடைக்குட்டிப் பையன் ராமன் நினைவுக்கு வந்தான். ''டேய் ராமு! ஊர்லேந்து வர்ராங்க. நீ பொம்மையை வச்சிட்டு தோட்டத்துலே விளையாடணும். சத்தம் கித்தம் போடப்படாது. என்ன, உம்.''

''அத்தான்!''

பொன்னி வந்துகொண்டிருந்தாள். பின்னால் வந்து கொண்டிருந்த சோமு என்னவோ அடக்கமுடியாத சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தான்.

''என்னத்தான்! என்னைச் சிங்காரிச்சிக்கிட்டு வரச் சொன்னீங்களாமே! எங்கேயாவது...சினிமாவுக்கா?''

''டேய் சோமு! நீ ரொம்ப போக்கிரியாய்ப் போயிட்டே, இரு இரு. உன்னை அப்புறம் பார்த்துக்கறேன்...''

''இல்லேண்ணே இல்லே. நான் அப்படிச் சொல்லலே. எல்லாம் பொன்னியோட கற்பனை!''

''சரி சரி. அவளுடைய கற்பனையோ, உன்னுடைய கனவோ, எதுவானாலும் ஆகட்டும். இப்ப நான் சொல்ற படி ரெண்டு பேரும், கேட்கணும்.''

"ஓ!"

"ம்...அத்தான்!"

"பொன்னி! மங்கையைப் பெண் பார்க்க வர்ராங்க. உன் திறமை எல்லாங் காட்டி அவளை அழகாகச் சிங்காரிக்கணும். தெரிஞ்சுதா?...ம்... அது என்ன கையிலே?"

"அதுவா, ராஜா ஸ்னோ!"

"ஏன் மந்திரி பவுடரும், தளபதி குங்குமமும் கொண்டு வரக் கூடாது?"

"போங்கத்தான்" என்று சிணுங்கியபடியே அவள் போய்விட்டாள். சோமு எதையோ நினைத்தபடியே நின்று கொண்டிருந்தான். "என்ன! ஏதாவது திட்டம் போட்டிருக்கியா? எல்லாத்தையும் மூட்டை கட்டி வைச்சுட்டு நான் சொல்றதைக் கவனமா கேளு!"

"நாலு பேர் வர்ராங்க. புதுப்பாயை எடுத்துத் தாழ் வாரத்தில் விரி. வெத்தலை பாக்கு எல்லாம் சரியா இருக் கான்னு பாத்துக்க. ஊதுபத்தியைக் கொளுத்தாமே அப்படியே வச்சிரு. வண்டி ஊதுற சத்தம் கேட்ட பிறகு கொளுத்தி வைக்கலாம். அவர் பெரிய வைதிகமாம். திவ்ய பிரபந்தத்தை எடுத்துத் திருப்பாவையைப் புரட்டிவை. அந்த அம்மா ஒரு சினிமாப் பித்துன்னு கேள்விப்பட்டேன். 'கலை', 'சினிமா' வார இதழ்களை வாசகசாலையிலிருந்து கொஞ்ச நேரத்துக்கு இரவல் வாங்கி வா. அவங்களோட வருகிற மாப்பிள்ளையின் தம்பி அந்தக் கட்சியாம். அவன் சொல்றபடிதான், எல்லாம் நடக்குமாம். அவனுக்கு வேண்டிய பத்திரிகை களையும் மறக்காமெ எடுத்து வா. அப்புறம் ஒரு சின்னப் பையனாம். அவனைப்பற்றிக் கவலை இல்லை. வாழைப் பழத்தைக் கொடுத்துச் சமாளிச்சுடலாம்."

தம்பிபோய் விட்டான். பொன்னி முன்பே உள்ளே போய்விட்டாள். எண்ண அலைகளில் மிதந்தபடியே படங்களைத் துடைத்துத் துடைத்து வீட்டிலுள்ள பொத்தல் பொரைகள் தெரியாதபடி மாட்டிக் கொண்டிருந்தேன். 'வேலையிருக்கு. அப்புறம் வர்ரேன்''னு சொல்லிப் பொன்னி போய் விட்டாள். அவளை வாயில் வரை வந்து மங்கை வழியனுப்பினாள்.

''அப்படியே! கொஞ்சம் அடுப்பைப் பார்த்துக்கோ. பருப்பு வேகுது'' என்று சொல்லியபடியே, அம்மா கொல்லைப் புறமாக எங்கோ போவது தெரிந்தது.

''என்னம்மா! எதுக்கு இப்போ தங்கச்சியை அடுப்புக்கிட்டெ போகச்சொல்றே. என்ன அவசரம். எங்கே போறே? தினந்தினந்தான் அது அடுப்பங்கரையிலேயே இருக்குதே'' என்று கடிந்துகொண்டேன்.

''இல்லைடா. திலகம் முந்தாநேத்து சென்னபட்டணத்திலேயிருந்து வந்திருக்கா. அவளிடம் கொஞ்சம் நேரத்துக்கு 'நெக்லெசு' வாங்கிக்கொண்டு வரலாம்னு போனா, அபசகுனமாதிரி எங்கே போறன்னு கேக்கிறியே'' என்று அம்மா அங்கலாய்த்துக்கொண்டே போனார்.

''அடடே! கோவிச்சுக்காதே அம்மா! தங்கச்சிக்காகப் போறேன்னு தெரியலை. வாங்கிட்டுச் சீக்கிரம் வந்துடு.'' மீண்டும் என் வேலையில் துரிதமானேன்.

''அடி பாவி! என்னடி இது. மூணு வீட்டுக்கு அந்தாண்டெயே கும்ப நாத்தம் மூக்கைத் துளைக்குது. ஏண்டா மடையா. ஒன்னோட மூக்கும் என்னடா அடச்சிக்கிச்சா'' என்று வைதுகொண்டே அடுப்பங்கரைக்கு அம்மா வேகமாகப் போனார். கையிலிருந்த படத்தைக் கீழே வைத்துவிட்டு நானும் பின்தொடர்ந்து உள்ளே போனன்.

தங்கையின் கன்னங்களில் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. குனிந்தபடி கீழே விழுந்த துளிகளைக் கட்டை விரலால் தேய்த்துக் கொண்டிருந்தாள். சுவரிலிருந்த வளையில் ஊர்க்குருவி குஞ்சு பொரித்திருந்தது. அதன் வாயருகே இட்டலித் துண்டுகள் சில கிடந்தன. பாவம், அவளுடைய மனக்கோட்டை பெரியது. அதில் தன்னை மறந்துவிட்டாள் என்று உடனே புரிந்துகொண்டேன்.

''அம்மா! இதோ மறுபடியும் வாங்கியாந்துடறேன். கெட்டுப்போன பருப்பை எடுத்துக் கொட்டிடு. நாகப் பட்டணத்தார்போல் 'சமையலே சரியில்லை ம்... அப்படித் தான் எல்லாம் இருக்குன்னு, போயிடப் போறாங்க'' என்று சட்டையைப் போட்டுக்கொண்டு வெளியே வந்தேன். அதற்குமேல் செல்லாது கால் நின்று விட்டது. எங்கே போய் எந்தக் கடையில் வாங்குவது என்று விழித்தேன். எல்லாக் கடையும் தெரியும். ஆனால் யாரும் கடன் கொடுக்கும் நிலையில் நான் வைத்துக் கொள்ளவில்லை. அளவுக்குமேல் கடன் வாங்கிவிட்டேன். காய்கறிக்கடை, எண்ணெய்க் கடை, மளிகைக்கடை எல்லாவற்றிலும் கடன் பாக்கி இருந்தது. வேறு வழியில்லாமல் துணிந்து மளிகைக்கடை செட்டியாரிடம் போனேன். நாலைந்து பேர் சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தனர். நான் ஓரமாக ஒதுங்கி நின்றேன். அவர்கள் எல்லாம் போன பிறகு மெல்லத் தயங்கியபடியே செட்டியார் முன் போய் நின்றேன்.

''என்னப்பா கண்ணா! பணம் கிணம் கொண்டு வந்தியா? உன் கணக்கெ பாத்து தயாரா வெச்சிருக்கேன்'' என்று அழுக்கேறிய கடன்பாக்கிப் புத்தகத்தை மெல்லக் காலை ஊன்றி, தன் பெரிய தொந்தியைக் கொஞ்சம் முன்னுக்கு நகர்த்தி பின்புறத்தை மெல்ல மேலே எழுப்பிக்கொண்டு அவர் உட்கார்ந்திருந்த பலகைக் கட்டையின் கீழிருந்து எடுத்து என்னைப் புன்னகையோடு நோக்கினார்.

''இல்லிங்க......இப்...இப்பொ ஒரு கால்படி பருப்பு வேணுங்க'' என்று இழுத்தேன்.

''போடா போ! பணம் கொண்டு வந்தா வா. இல்லாட்டி இந்தப் பக்கமே வராதேன்னு உனக்கு நான் அப்பவேசொல்லிடலே. கடன் தலைக்குமேலே போயிடுச்சி. நீ கெட்டகேட்டுக்கு பருப்பு இல்லாமே சோறு எறங்க மாட்டேங்கிதா. ஒங்க அப்பன் எப்படி மானமா வாழ்ந்துட்டுச் செத்தான். அவன் புள்ளெயா நடந்துக்கோ'' என்று நைய நையத் திட்டிக்கொண்டு போனார்.

அப்பாவைப் சொன்னவுடன் பீறிட்டுக்கொண்டு வந்த அழுகையை அடக்கிக்கொண்டேன். அப்பா மான மாகத்தான் வாழ்ந்தார். ரோலிங் மில்லில்வேலை பார்த்து வந்த கொஞ்சம் வருமானத்தை வைத்துக்கொண்டே மானமாகத்தான் வாழ்ந்தார். மின்சாரத்தில் தாக்குண்டு இறந்த போது குடும்பத்துக்கு இரண்டாயிர ரூபாய் பணம் கொடுத்தார்கள். செத்துங் கொடுத்த சீதக்காதி போலச் செத்தும் அவர் உதவினார். எனக்கு அங்கேயே வேலை கொடுத்தார்கள். என்னவோ இப்போது வருமானம் கட்டி வரவில்லை. இப்படி எண்ணிக் கொண்டே' ''அய்யா! இந்த மாதம் கட்டாயம் பழைய பாக்கியையும் சேர்த்துக் குடுத்துடறேன். சம்பளத்தில் முடியாவிட்டாலும் வீட்டை அடமானம் வைத்து தங்கச்சி கல்யாணத்தை முடிச்சிடலாம்னு இருக்கோம். அந்தப் பணத்திலாவது கொடுத்துடறேன். இப்பொ பொண்ணு பார்க்க வர்ராங்க. தயவு செஞ்சி சீக்கிரம் பருப்பு குடுங்கன்னு...'' காலில் விழாக் குறையாகக் கெஞ்சினேன்.

''சரி சரி. எப்படியோ, வர்ர மாசம் கடனை எல்லாம் தீத்துடணும்' என்று சொல்லிக்கொண்டே பருப்பை அளந்து பொட்டணம் கட்ட ஆரம்பித்தார்.பொட்டணம் கட்டிக்கொண்டே, 'கல்யாணத்துக்கு வேணும்னா

சொல்லு நல்ல சரக்கா பார்த்துத் தர்றேன்'...என்று ஆதரவோடு பேசினார்.

சாம்பார்மணம் 'கமகம'த்தது. 'எப்படியாவது தங்கை மணம் கமழ்ந்தால் சரி' என்று எண்ணிக்கொண்டு, மீதியிருந்த படங்களை விரைவாகத் துடைத்து மாட்டி விட்டு வரவேற்புக்கான எல்லாவேலையும் முடிந்து விட்டதா என்று எண்ணிக் கொண்டிருந்தபோது, கோயில் மணி 'டாண் டாண்' என்று அடித்தது. சிங்கார வேலவருக்கு மத்தியான பூசைக்கு அடிக்கும் மணி அது. பன்னிரண்டு ஆகிவிட்டது. 'டக்' கென நினைவுக்கு வந்தது.

''டேய் சோமு; வண்டிக்குச் சொல்லிட்டியாடா, சொன்னாதான் நிலையத்துக்கு வண்டி போகும். இல்லாட்டி 'இந்த ஊர் நிலையத்திலே வண்டியுங் காணும் ஒன்னுங் காணும்; என்ன ரொம்பப் பட்டிக்காடா இருக்கும் போலிருக்கே'ன்னு கோவிச்சிக்கப் போறாங்க. மாரிமுத்தண்ணேங்கிட்டே சொல்லி சவாரிக்கு ஏற்பாடு செய்!'' என்றேன்.

''என்னாண்ணே! பணங்குடுக்காமே மாரிமுத்தண்ணே எப்படிச் சவாரிக்கு வருவாரு, 'எரு அடிக்கணும்' அப்படி இப்படின்னு சொல்லி ஏமாத்திடுவாரே!'' என்றான்.

பையில் கொஞ்சம் சில்லரை இருந்தது. என்றாலும் எதிர்பாராத செலவுகளுக்கு வேணுமே என்று நினைத்துக் கொண்டு அதை எடுக்கவில்லை. ''போடா—போய் தங்கச்சி திருமணத்துக்கு வீட்டை அடமான வச்சிப் பணம் வாங்கப்போறோம், சவாரி நிறைய வேணும், சேத்துக் கொடுத்துடறோம்னு சொல்லி எப்படியாவது ஏற்பாடு செய்யிடா'' என்று ரகசியமாக அவன் காதல் மட்டும் விழும்படி அடமான விஷயத்தைச் சொல்லிவிட்டுக் 'கனாக் கண்டேன் தோழி நான்' என்ற நாச்சியார் திரு

மொழியை முணுமுணுத்துக் கொண்டே பாயில் உட்கார்ந் தேன். அப்படியே ஒரு விநாடி கண் அயர்ந்துவிட்டேன்.

'கலகல' என்று சலங்கைச் சத்தம் கேட்டு விழித்தேன். வண்டியிலிருந்து சின்னப் பையன் முதலில் குதித்தான். தம்பி சோமு தாவி அவனைத் தன் கைகளால் தூக்கிக் கீழே விட்டான். அதன் பிறகு அந்த அம்மா இறங் கினார்கள் பெரிய பையன் முன்னால் இருந்தபடியே கீழே குதித்து இறங்கிவிட்டான். கடைசியாக அவர் மெல்ல இறங்கிவந்தார். "வாங்க தம்பி! வாங்க அம்மா! வாங்க அய்யா!" என்று வரவேற்றோம். நீங்கதான் கண்ணனா! என்று என்னைப் பார்த்தபடியே கேட்டுக்கொண்டு புன்னகையோடு வந்து திண்ணையில் அமர்ந்தார் பெரியவர். தாத்தாவும் பொக்கைவாயைக் காட்டிக் கொண்டே அவரோடு ஏதேதோ உறவு விஷயங்களைப் பற்றி பேசத் தொடங்கினார். பாட்டி உள்ளே எழுந்து போனார் பெரிய பையன் தன் அப்பாவின் அருகில் உட்கார்ந்துகொண்டு பத்திரிகை படிக்க ஆரம்பித்தான். சின்னப் பையன் அம்மாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டே உள்ளே போனான் அம்மா நின்றுகொண்டே சம்பந்தி அம்மா கேட்டதற்கு எல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் உள்ளும் புறமும் போய்க் கொண்டிருந்தேன். தம்பி, சொல்கிற வேலையைக் கேட்கத் தயாராக வாயிற்படிப் பக்கம் நின்றுகொண்டிருந் தான். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே நான் உள்ளே அடுப்பங்கரைக் கதவை ஒட்டி நின்றுகொண் டிருந்த தங்கையைப் பார்த்துத் தலையசைத்துச் சைகை செய்தேன். முன்பு சொல்லியிருந்தபடி அவள் எல்லோ ருக்கும் பால் கொண்டு வந்து கொடுத்தாள். "எதுக்குத் தம்பி இதெல்லாம். இப்பொதான் சாப்பிடப் போறேமே" என்று என்னிடம் பேச்சுக் கொடுத்தபடியே தங்கையை ஏற இறங்கப் பார்த்தார். நான் அவரையும் அந்த இளைஞனையும் பார்த்தேன். தந்தையும் மகனும் ஒருவருக்

பொருவர் குறிப்பாக ஒரு விநாடி கண்களால் பேசிக்கொண்டதையும் கவனித்தேன்.

''எவ்வளவும்மா படிச்சிருக்கே?'' என்றார் அவர்.

''பத்தாவது வரைக்கும்'' என்றாள் தங்கை தலை குனிந்து கொண்டே.

''சரிம்மா...'' என்று விடைகொடுத்தார். அவள் காலி டம்ளர்களை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள். திண்ணையிலிருந்த இருவர் முகமும் மலர்ந்திருந்தன மெல்ல, எட்டித் தம்பியைப் பார்த்தேன். அங்கே நின்று கொண்டிருந்த அவன் ஒரு விரலைக் காட்டினான். நானும் பதிலுக்கு ஒரு விரலைக் காட்டினேன். எங்கள் ஏற்பாட்டின் படி ஒரு விரல் என்றால் வெற்றி. என் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. உடனே திருமண நாள், கல்யாண மண்டப ஏற்பாடு, ஊர்வலம், வரிசை—இப்படி என்னென்னவோ பற்றியெல்லாம் எண்ணிக்கொண்டு கனவு உலகில் சஞ்சரித்தேன்.

அப்போது, 'வீல்' என்று தோட்டத்துப் பக்கத்திலிருந்து வந்த ஓசை கேட்டுத் திடுக்கிட்டபடி உள்ளே ஓடினேன். என்னைத் தொடர்ந்து அந்தப் பெரியவரும் இளைஞனும் ஓடி வந்தனர். தாத்தாவும் வந்தார். தோட்டத்தில், நெற்றியில் குபுகுபு என்று இரத்தம் வழிய, அந்தச் சின்னப்பையன்—மாப்பிள்ளையின் கடைசி தம்பி—வாயை விரித்து விரித்து ஓலமிட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சிறுவனை வாரி ஒரு கையில் அணைத்தபடி, ''அடபாவி, என் புள்ளே மண்டெயே ஒடச்சிட்டியே'' என்று கத்திக்கொண்டு, கடைக்குட்டியின் கன்னத்தில் பளார் பளார் என்று அறைய ஆரம்பித்தார். தங்கை ஓடி வந்து தம்பியை அந்த அம்மா கையிலிருந்து பிடுங்கிக்கொண்டாள். அந்தக் கடைக்குட்டி, ''எம் பொம்மையை ஒடச்சுட்டான்... என்னே அடிச்சுட்டான்...நானும் ஒடஞ்ச பொம்மை

யாலே அடிச்சுட்டேன்'' என்று தேம்பித் தேம்பி அழுது கொண்டே சொன்னான்.

தன்னிடமிருந்து தம்பியைப் பிடுங்கிய தங்கையை அந்த அம்மா முறைத்துப் பார்த்தார். ''பொறப்படுங்க. கொலைகாரக் கூட்டம். இங்கே சம்பந்தம் வச்சிகிட்டா வாழ்ந்த மாதிரிதான்'' என்று படபடப்போடு பேசினார். நான் மெல்ல அருகில் போய் ''இங்கே சிங்காரவேலவர் விடுதியில் ஆஸ்பத்திரி இருக்கு. என்னிடம் தம்பியைக் கொடுங்க. கட்டுக் கட்டிக்கொண்டு வறேன்னு'' இழுத்தேன். எனக்குச் சாதமாகப் பெரியவரும் அந்த அம்மாவைப் பார்த்தார்.

''பெரிய ஆஸ்பத்திரியாம் பெரிய ஆஸ்பத்திரி! ஒங்க உதவியும் வேண்டாம், ஒங்க உறவும் வேண்டாம். என்னங்க இன்னும் நின்னுகிட்டு. சோறு தின்னுட்டுப் போவலான்னு அப்பாவும் புள்ளெயும் நிக்குறிங்களா. வாங்க'' என்று எவருடைய பதிலையும் எதிர்பாராமல் அடிபட்ட பையனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு, சொல்ல'மல் கொள்ளாமல் அந்த அம்மா 'தடதட' வென்று படி இறங்கி நடக்க ஆரம்பித்தார். பெரியவர் என்னைப் பார்த்து ''போயிட்டு வர்ரோம் தம்பி! டயம் சரியில்லை...'' என்று இழுத்தபடியே அந்த அம்மாவைப் பின்தொடர்ந்தார். அந்த இளைஞன் ஒன்றும் சொல்லாமல் தந்தைக்கு முன்னே போய்க்கொண்டிருந்தான். போய், வீதி திரும்பும் வரை பார்த்துக் கொண்டே இருந்தேன். திரும்பிப் பார்க்காமல் நான்கு பேரும் போய்விட்டனர். உள்ளே கடைக்குட்டியின் விம்மல் ஒலி கேட்டது. நான் ஒலி எழுப்பாமல் விம்மிக் கொண்டிருந்தேன். தங்கையோ ...!

# மனங்குழுவ யாதுண்டு?

'கண கண' என மணி அடித்தது. மடை திறந்த வெள்ளம்போல் பிள்ளைகள் துள்ளிக் குதித்துக்கொண்டு வெளியேறினர். சிறிது நேரத்திற்குள் எல்லோரும் போய் விட்டனர். இலை உதிர் கால ஒதியன்போலப் பள்ளிக் கூடம் வெறிச்சென்றிருந்தது. தலைமை ஆசிரியர் அறை மட்டும் திறந்திருந்தது. நாற்காலியில் சாய்ந்தபடி எதையோ எண்ணிக்கொண்டிருப்பதுபோல் தோன்றிற்று. ''என்னங்க இன்னும் தயங்குகிறீங்க? எனக்கு நல்லாத் தெரியும். அவன் தான் காரணம்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்து, எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தார் துணை ஆசிரியர் முருகேசன்.

''எப்படிங்க அவனை மட்டும் சொல்லமுடியும்? உள்ள பிள்ளைகளிலே அவன் மிகச் சின்னவன்; மெலிந்தவன். அப்படி ஒண்ணும் தீய பிள்ளையாண்டானாய்த் தெரிய வில்லையே'' என்று குனிந்தபடியே பதில் சொன்னார் தலைமை ஆசிரியர் பாலகணபதி.

''என்னமோ, நான் சொல்லுவதைச் சொல்லி விட்டேன். நீங்க தக்க தண்டனை கொடுக்கலேன்னா அப்புறம் நான் வகுப்புக்குப் போகவும் முடியாது; பாடம் நடத்தவும் இயலாது. இப்படி முரட்டுப் பிள்ளைகளுக் கெல்லாம் இடங் கொடுத்தா பள்ளி ஒழுங்கு நிலைத்த மாதிரிதான்'' என்று கடுகடுப்பதுபோல் பேசியவாறு எழுந்தார்.

"உட்காருங்கள் முருகேசன், உட்காருங்கள். கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம் என்றுதான் நினைக்கிறேன்; ஏன்னா, தவறிப்போய் நாம் தப்பு செய்துடக் கூடாது பாருங்கள். ஒரு கூட்டத்தில் ஒருத்தனை மட்டும் தண்டிப்பது, அதுவும் தெளிவு இல்லாமல்..." என்று முடிப்பதற்குள்ளேயே முருகேசன் இடைமறித்தார்.

"தெளிவாவது, ஒண்ணாவது—ஒரு கல் வீசினால் குளம் முழுதும் அலை எழுமே; ஒரு பயலை விரட்டுனா எல்லாப் பயல்களும்..." என்று அவர் சொல்லிக் கொண்டே போனார். அவரைத் தலைமை ஆசிரியர் கவனித்ததாகத் தெரியவில்லை. எதிரே மாட்டியிருந்த ஓவியம் ஒன்றைப் பார்த்து கொண்டிருந்தார். கண்ணுக் கெட்டாத தூரத்திலிருந்துவரும் செவிக்கு எட்டாதஅற்புத இசை ஒன்றில் ஈடுபட்டு ஐம்புலனையும் மறந்து அறிதுயில் கொள்ளும் ஞானியைப் போல் அவர் காணப்பட்டார். கையெழுத்துப் போடப் போகும் போதெல்லாம். 'அது யார் படம்?' என்று அறிய முருகேசன் மனம் விரும்பியதுண்டு. பரட்டைத் தலையோடு, சோக மயமாக, ஏக்கப் பார்வையோடு கூடிய அந்த ஓவியம் நிச்சயமாக அவருடைய மகளுடையதாக இருக்காது. அப்படியானால் யாருடையது? அவருடைய ஓவியத் திறமையைக் காட்ட இந்தப் பரட்டைத் தலைதானா கிடைத்தது. திடீர் என்று எப்படிக் கேட்பது? நாம் ஏன் அதைப்பற்றிக் கேட்டு அவர் துன்பத்தைக் கிளறவேண்டும்? என எண்ணி வகுப்பிற்கு மீண்டுவிடுவார். அன்று அதனைப்பற்றிக் கேட்கும் ஆர்வத்தை அவரால் அடக்க முடியவில்லை.

'ஐயா' என்றார் முருகேசன். ஒலி கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார் பாலகணபதி. தேங்கியிருந்த கண்ணீரை முருகேசன் அறியாதவாறு துண்டால் துடைக்க முயன்று கொண்டே "என்ன சொன்னீர்கள்! யாரும் வந்தார்களா? எனத் தட்டுத்தடுமாறிக் கேட்டார்.

எழுந்து வந்துவிடலாமா எனச் சற்று எண்ணினார் முருகேசன். ஆசை தூண்டவே "ஐயா, ஒன்று கேட்கப் பல நாள் ஆசை...தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்... தங்களுக்குத் துன்பந் தருமானால் வேண்டாம்" என்று அந்தப் படத்தைப் பார்த்தவாறே கேட்டார். அவர் மனக் குறிப்பை உணர்ந்துகொண்டார் பாலகணபதி.

"ஓ...அந்தப் படத்தைப் பற்றித்தானே. வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது அதைப்பற்றி நானே சொல்ல இருந்தேன். ஆயினும் இப்போது கேட்டுவிட்டீர்கள் முருகேசன்; சொல்லிவிடுகிறேன்." அப்போது அங்கு வந்து நின்ற வேலைக்காரனைப் பார்த்து, "பள்ளிக்கூடத்தை நாங்களே பூட்டிக்கொள்கிறோம்" என்று சொல்லி அனுப்பிவிட்டு, அந்தப் படத்தையே நோக்கினார்.

சிறிது நேரம் அமைதியாகக் கழிந்தது. பட்டம் விடும் போது சிக்கிய நூல்கண்டின் முனையைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சிறுவனைப்போல் எப்படித் தொடங்குவது. எதில் தொடங்குவது என்று எண்ணிப் பார்ப்பதுபோலத் தோன்றியது

"வருந்துகிறீர்கள் போலிருக்கிறதே. அப்படியானால் நான் சென்றுவருகிறேன். இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்" என்று எழுவதுபோல் முருகேசன் பாசாங்கு செய்தார்.

"இல்லை, இல்லை; இன்று சொல்லத் துணிந்து விட்டேன். எத்தனை ஆண்டுகளாய் நெஞ்சிலேயே வைத்துச் சுமப்பது... சொன்னாலாவது கொஞ்சம் அமைதி கிடைக்கும்" என்று திணறிக்கொண்டே கூறத் தொடங்கினார்.

"இறைவன் படைப்பில் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன; கலந்தே வளர்கின்றன. முரட்டு முட்களே மென்மையான மலர்களைக் பாதுகாக்கும் வேலியாகின்றன. வாசனைத் தைலம் பூசப்பெற்ற வெள்ளிய

காகிதப் பூக்களுக்கும் மண மல்லிகைக்கும் வேறுபாடு கண்டறிய இயலாத நாம் நீதிபதிகளாகிவிடுகின்றோம். அதனால் எண்ணற்ற மல்லிகை மலர்கள் வாடி வதங்கிக் கருகிப் போகின்றன'' என்று பெரிய அஸ்திவாரம் இட்டபடி நிமிர்ந்தார். அவர் தலைக்குமேல் கூடு கட்டியிருந்த சிட்டுக்குருவி எங்கோ போய் இரை கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டிக் கொண்டிருந்தது.

இரண்டு கைகளாலும் முகவாய்க் கட்டையைத் தாங்கியபடி மீண்டும் தொடங்கினார்.

''அப்போதுதான் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியை விட்டு வெளியே வந்திருந்தேன். வெறும் ஏட்டுக் கல்வியைக் கற்றதாலேயே பேரறிஞன் ஆகிவிட்டதாக எண்ணி இறுமாந்திருந்தேன். 'கொள்கையில் விட்டுக் கொடுக்காதவன்' என்று என்னை அப்போது எல்லோரும் போற்றுவார்கள். குறை சிறிதும் காணப் பொறுக்க மாட்டேன். அதைப் பெருமையாகவும் எண்ணியிருந்தேன்.

''இந்த நிலையில் காட்டுப்பட்டி கிராம ஆசிரியனாகும் வாய்ப்புக் கிடைத்தது. அது ஒரு சின்ன ஊர். பொழுது புலர்ந்ததும் நாலா திசையிலிருந்தும் மலரை நாடிவரும் வண்டுக் கூட்டங்கள்போலப் பலபல கிராமங்களிலிருந்து குழந்தைகள் குழு குழுவாக வந்து கொண்டேயிருப்பார்கள். பத்து மணிக்குள் எல்லோரும் வந்துவிடுவர்.

''அவர்களில் ஒருத்திதான்...வள்ளி...அந்தப் படத்திலிருக்கும் பெண். அவள் காட்டுப்பட்டியிலிருந்து வந்து கொண்டிருந்தாள். ஊர்ப் பெயர் போலவே அவள் தலையும் காடாய் இருக்கும். செம்பட்டையாய், பேன் பிடித்து, அழுக்குப் படிந்து பார்க்க வெறுப்பாகத் தோன்றும். 'ஏ வள்ளி, உன் ஆயா இல்லையா? ஏன் இப்படி அலங்கோலமா பத்ரகாளி மாதிரி வர்றே!' என அதட்டுவேன். கண் கலங்கியபடியே 'ஆயா நாத்து நடப்போயிட்டுது', 'ஆயா அம்மான் வீட்டுக்குப்

போயிட்டுது', 'ஆயா பிள்ளையை தூக்கி வைச்சிக்கச் சொல்லிடிச்சி' என்று ஏதாவது சொல்வாள். 'நீலி! இரு இரு, உன்னை என்ன பாடு படுத்துகிறேன்' என்று திட்டி விட்டுப் பணியில் ஈடுபடுவேன்.

அன்று நண்பகல் ஒரே பரபரப்பு. வள்ளிக்கு பக்கத்திலிருந்த கோதையுடைய தோட்டுத் திருகாணியைக் காணோம்...எல்லாக் குழந்தைகளும் தேடிக் கொண்டிருந்தனர் சாப்பிட்டுவிட்டு மீண்டேன். பெரிய வழக்கு ஒன்று காத்திருந்தது. முற்றும் உணர்ந்த அறவோன்போல் நீதி வழங்க நாற்காலியில் உட்கார்ந்தேன்.

'என் பக்கத்தில் வள்ளிதாங்க இருந்தா' என்று ஐயத்தோடு கூறினாள் கோதை.

'ஆமா, ஆமா, நாங்கள் எல்லாம் தேடிக்கிட்டிருந்த போது அவள்தான் எங்கேயோ போயிட்டு வந்தா' என்றாள் இன்னொருத்தி.

'ஐயையோ! நான் ஒன்னுக்குப் போனஞ் சார்' என்று வள்ளி அழ ஆரம்பித்தாள்.

எனக்கு இயற்கையாகவே வள்ளியிடம் வெறுப்பு இருந்தது. அவள் கூறியதை நான் நம்பவில்லை. 'உனக்கு மட்டும் அந்த நேரத்தில் போகவேண்டி இருந்ததோ? உண்மையைச் சொல்லிவிடு ... மன்னித்துடறேன்?' என்றேன்.

'இல்லவே இல்லை சார்' என்று விம்மினாள். பக்கத்தில் நின்று கொண்டிருந்த வேலன், 'இவள் திருடி சார். எனக்கு நல்லாத் தெரியும். அன்னைக்குத் தோட்ட வேலை செய்யப் போயிருந்தபோது என் பென்சிலைத் திருடித் தன் பைக்குள் பதுக்கி வைச்சிட்டா. அப்புறம் நான் தேடிக் கடுண்பிடிச்சேன்' என்றான்.

சாட்சிகள் கிடைக்கவே தீர்ப்புக் கூறத் தொடங்கி விட்டேன். 'திருடி' என்று ஓர் அட்டையில் எழுதி,

அவள் நெற்றியில் கட்டி ஒவ்வொரு வகுப்புக்கும் இழுத்துப் போகச் சொன்னேன்.

'ஐயையோ! நான் திருடியில்லே, சார், திருடியில்லே, சார்' என்று கத்தினாள்; கதறினாள்.

'பொய்க்குள்ளி எந்தத் தப்பையும் மன்னித்து விடுவேன். பொய் சொன்னவர்களை மட்டும் மன்னிக்கவே மாட்டேன். டேய்! இவளை இழுத்துக்கொண்டு போங்கடா' என்றேன்.

இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு கேவிக் கேவி அழுதாள். பையன்கள் சிரித்துக்கொண்டே 'திருடி' 'திருடி' என்ற முழக்கத்தோடு அவளை இழுத்துச்சென்று காட்டினர். மாலையில் வகுப்பு முடிந்தது. ஒவ்வொரு கிராமப் பிள்ளைகளும் கூடிக்கூடிப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். காட்டுப்பட்டிக் குழந்தைகளும் புறப்பட்டனர். 'ஏய் திருடி! எங்க பின்னாலே வராதே...உன்னாலே ஊருக்கும் கெட்டபேரு. மேட்டுப்பட்டி பிள்ளையெல்லாம் கேலி செய்யுறாங்க' என்று விட்டுப் போய்விட்டனர். நொண்டி ஆடுபோல் வள்ளி பின்னால் போய்க்கொண்டிருந்தாள். நான் எதனையும் பொருட்படுத்தாது கிட்டப்பா நடித்த 'வள்ளித் திருமணம்' நடக்கும் நாடகக் கொட்டகை நோக்கிப் போனேன்.

மறுநாள் வள்ளி பள்ளிக்கு வரவில்லை. விசாரித்தேன். 'வழியிலேயே சுரம் வந்துவிட்டதாம்' என்றனர் காட்டுப் பட்டிக் குழந்தைகள். 'வரும் வரும், கள்ளி! எவ்வளவு நெஞ்சழுத்தம்' என்று கூறிவிட்டு, வகுப்பு நடத்தத் தொடங்கினேன்.

தொடர்ந்து சில நாட்கள் வள்ளி வரவில்லை. ஒரு வாரத்திற்குப் பிறகு தற்செயலாக நோக்கம் ஒன்றுமில் லாது 'வள்ளி எப்படி இருக்காடா?' என்று குப்பனைக் கேட்டேன். ரொம்ப இளைச்சுப் போயிட்டா சார், செத்திடும்னு கிராம வைத்தியரு சொல்லிட்டாரு...கழனி

யூர் பெரிய ஆஸ்பத்திரிக்கு அவ ஆயி அவளைத் தூக்கிட்டுப் போயிருக்கு' என்று கவலையோடு சொன்னான்.

மாலையில் வகுப்பு முடிந்தவுடன் தைக்க கொடுத்திருந்த சட்டையை வாங்கிவரக் கழனியூருக்குப் புறப்பட்டேன். கடைத்தெருவுக்குப் போகிற வழியில்தான் மருத்துவ நிலையம் இருந்தது. என்னவோ உள்ளேபோக வேண்டும்போல் தோன்றிற்று. உள்ளே போனேன். வராந்தாவிலேயே ஒரு மூலையில் வள்ளியின் அம்மா உட்கார்ந்து கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் எழுந்து நின்று கும்பிட்டாள். அவள் காலடியில் வள்ளி படுத்திருந்தாள்—கண்கள் மூடிக்கிடந்தன. துரும்பாய்ப் போய்விட்டாள், 'டைபாயிடாங்க; நூத்தி அஞ்சி டிகிரி சுரம் இருக்காம்' என்று முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டே மருந்து வாங்கிவர அவள் அம்மா போனாள். மண்டியிட்டு மெல்ல வள்ளியருகே உட்கார்ந்தேன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தேன். நெருப்பாய்க் காய்ந்தது. வள்ளி கண்களைத் திறந்து என்னைப் பார்த்தாள். குப்பிட முயன்றாள். கைகள் அசையவில்லை.

'வேண்டாம் வள்ளி, சும்மா படுத்துக்கோ' என்று என் வாழ்நாளிலேயே முதன்முறையாக அவளிடம் அன்போடு சில சொற்கள் சொன்னேன். அவள் உதடுகள் துடித்தன. 'என்ன வள்ளி! ஏதேனும் சொல்லணும்னா சொல்லு' என்றேன். தன் முழு சக்தியுங்கொண்டு நாவைப் புரட்டினாள். 'நான்...நான் திருடலே சார்' என்றாள். 'சாட்சிகள் திருடிங்கும்போது நான் எப்படி?' என எழுந்தேன். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கன்னத்தில்பட்டு சுவறிப் போயிற்று. அங்கு என்னால் நிற்க இயலவில்லை. அவள் அம்மா வந்தாள். நான் ஒன்றும் கூறாது வெளியேறினேன்.

ஓரிருநாள் சென்றிருக்கும். ஒருநாள் யாரோ ஒருவன் வள்ளி செத்துட்டாளாம் சார்' என்றான். மனம் 'பகீர்'

என்றது. 'பாவம்...டைபாயிடு சுரம்' என்று வாய் வெறுமனே முணுமுணுத்தது. கோடை விடுமுறை வந்தது. எங்கெங்கோ போனேன். கொடுங்கோடையிலும் மகிழ்வாக வாழும் குயிலினங்களைக் கண்டேன்; செழித்துத் தளிர்விடும் வேப்ப மரங்களைப் பார்த்தேன். என் மனம் மட்டும் ஏனோ அமைதி காணாது தவித்தது.

கோடை மாறி மாரிக்காலம் வந்தது. மழை 'சோ' வெனப் பொழிந்தது. குன்றிலிருந்த அழுக்குகளையெல்லாம் அடித்துக்கொண்டு அருவி ஓடிற்று. தூசு படிந்திருந்த மரங்கள், தழைகள் எல்லாம் தூய்மையாயின. தெரு, சாலை, வரப்பு எல்லா இடங்களிலும் குவிந்து கிடந்த குப்பைகூளங்களையெல்லாம் மழைத்தண்ணீர் கொண்டோடிப் போயிற்று. மண் குளிர்ந்தது. பசும்புல் தலை நீட்டிச் சிரித்தது. என் மனத்தில் மட்டும் ஏதோ ஒன்று, எதனாலும் கழுவமுடியாத ஓர் அழுக்கு ஒட்டிக் கொண்டது போல் தோன்றியது. பல்லிடுக்குக்குள் சிக்கிக்கொள்ளும் நார் மெல்லவும் நையாமல் வெளியேயும் வராமல் உறுத்துவதுபோல் துன்புறுத்திக்கொண்டே வந்தது.

பள்ளி திறந்து ஐந்தாறு நாள்கூட ஆகியிருக்காது. குழந்தைகளைத் தோட்ட வேலைக்கு அனுப்பிவிட்டு, நாற்காலியில் சோர்ந்து சாய்ந்து கிடந்தேன். 'சார் சார்' என்று கத்திக்கொண்டே ஒருவன் ஓடிவந்தான். அவன் கையில் என்னவோ இருந்தது. எல்லாக் குழந்தைகளும் அவனைப் பின்தொடர்ந்து ஓடி வந்தனர். கொண்டுவந்த பொருளை மேசையின்மேல் வைத்தான். உடனே கோதை, 'சார்! சார்! என் தோட்டுத் திருகாணி சார் அது. இப்பத் தான் சார் நினைவு வருது. போன வருடம் தோட்ட வேலை செய்யும்போது விழுந்திடிச்சுப் போலிருக்குது' என்று என்னென்னவோ சொன்னாள். ஒரே நேரத்தில் ஆயிரம் ஈட்டிகள் நெஞ்சுகள் பாய்வதுபோல் உணர்ந்தேன். இதைக் கேட்டுக்கொண்டிருந்த குப்பன், கண் கலங்கிய

படியே முன்வந்து, 'நான்தான் சார் வள்ளி பையிலே வேலன் பென்சிலை எடுத்து விளையாட்டுக்காக மறைத்து வைத்தேன். அவளை அவன் திருடின்னு நினைச்சுட்டான். நான் மறைச்சு வைச்சேன்னு சொன்னா நீங்க அடிப்பீங் கன்னு அப்போ சொல்லலை...சார்...பாவம் வள்ளி! வேலன் 'திருடி!' இன்னப்போ, அவ இல்லே, நான்தான்னு சொல்லலை சார்!' என்று அழுதான். சுறாமீன் சவுக்கால் 'பளீர்! பளீ'ரென யாரோ முதுகில் அடிப்பதாக ஒரு பிரமை ஏற்பட்டது'' என்று சொல்லும்போதே அவர் தொண்டை கரகரத்தது, ''இன்னும் அமைதி கிடைக்க வில்லை...முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டன, முருகேசன். இன்னும் அமைதி கிட்டவில்லை'' என்று மூச்சைப் பிடித்துக்கொண்டு சொல்லிவிட்டு, மேசைமேல் 'தடால்' எனச் சாய்ந்தார். சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதார்.

**''மலைகழுவ மழையுண்டு—பெரிய**
**மரங்கழுவ மழையுண்டு**
**மனங்கழுவ யாதுண்டு—அம்மா**
**மனங்கழுவ யாதுண்டு''**

என்று மனம் எண்ணி எண்ணி ஏங்கியது. பலகணி வழியாய் வெறும், வெளியைப் பார்த்துக் கலங்கின, முருகேசன் கண்களும்.

# பலி

''ராம்சந்த், கடைசி முறையாகக் கேட்கிறேன். 'பலி' என்ற கதை உம் உண்மையான வாழ்க்கையின் பிரதிபலிப் புத்தானே'' என்று அழுத்தமாகக் கேட்டார், அரசினர் வக்கீல். அவர் கையில் புதிய பத்திரிகைப் பிரதி ஒன்று இருந்தது.

''எல்லாக் கதைகளுமே எழுத்தாளனின் வாழ்க்கைப் பிரதிபலிப்புத்தானே'' என அலட்சியமாகப் பதில் சொன்னார் எழுத்தாளர் ராம்சந்த்.

''அதைக் கேட்கவில்லை. 'பலி' என்ற உமது கதையில் பலியாகிறவள் உம் மனைவிதானே. அதில் கொடுமை புரிந்தவனாகப் படைக்கப்பட்டவன், இதோ, உம் அருகில் இருக்கும் பிரதீப்சிங்தானே '' கையிலிருந்த பத்திரிகையை வீசிக்கொண்டே கேட்டார்.

''இல்லை.''

'!சரி உம் மனைவி எப்படி இறந்தாள்?''

''உயிர்க்காற்றை உள்ளிழுத்து வெளியிடும் ஆற்றல் அற்றுப்போனாள். அதனால்...'' சோகத்தோடு ஒரு புன்னகை புரிந்தான்.

''அப்பொழுது உம் மனைவி இயற்கையாய்ச் செத்தார் என்கிறீரா?''

''ஆம்!''

''இதோ, உம் அருகில் நிற்கும் உம் நண்பருக்கும் உம் மனைவியின் சாவிற்கும் தொடர்பு உண்டு என்கின்றேன். இதை நீர் எப்படி மறுப்பீர்?''

''முன்பிறவியில் செய்த பாவ புண்ணியத்திற்கு ஏற்ப இந்தப் பிறவியில் ஒருவன் இன்பதுன்பம் அடைகிறான் என்று நம் சமயம் கூறுகின்றது. இதை நீர் எப்படி மறுப்பீர்? எப்படி நிருபிப்பீர்?''

''சுற்றி வளைத்த பதில் தேவையில்லை. நேரிடையாய்ச் சொல்லும்.''

''சுற்றிவளைத்த வினாத் தேவையில்லை, நேரிடையாக கேளும்.''

''உம் மனைவியின் இறப்பிற்கு உம் நண்பர் காரணம் இல்லையா?''

''இல்லை.''

''சரி, நீங்கள் போகலாம்...!'' விசாரணை தள்ளி வைக்கப்பட்டது

மேற்குக் கடலிலே மறையும் கதிரவன்போல் ராம்சந்த் அமைதியாகச் சென்று மறைந்தார். கண்ணீர்த் துளியைச் சொரிந்துகொண்டே பிரதீப்சிங் தன் தள்ளுவண்டியை உருட்டிக்கொண்டு சென்றான்.

திரும்பிப் பார்த்தேன். என்னைப்போல் வேடிக்கை பார்க்க வந்த கூட்டம் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது! 'கசமுச' என்று என்னென்னவோ பேசிக் கொண்டு சென்றனர்.

கடலலையைக் கிழித்துக்கொண்டு வரும் கட்டுமரம் போல அக் கூட்டத்திலிருந்து ஒருவாறு வெளியே வந்தேன்.

"சார், 'பலி' ராம்சந்த்தின் உன்னத சித்திரம்" என்று கூவிக்கொண்டே பத்திரிகைச் சிறுவன் ஒருவன் பாரிமுனையில் விற்றுக்கொண்டிருந்தான். உடனே ஒரு பத்திரிகை வாங்கிக்கொண்டு நேரே கடற்கரைக்குச் சென்றேன். தனிமையாக ஓரிடத்தில் உட்கார்ந்து படிக்கத் தொடங்கினேன்.

நீலக் கடல், இந்த அற்புதக் கடலிலே எத்தனைமுறை நீந்தி நீந்தி ஆடியிருக்கின்றேன். இன்றைக்கு நினைத்தாலும் 'பகீர்' என்கின்றது. இருபத்தைந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அன்று கடல் நீச்சலிலே ஒரு ஒரு போட்டி... நீந்திக்கொண்டு கங்கை ஆற்றுநீர் கலக்கும் சங்கமத் துறையருகே வந்துவிட்டேன். அந்த இருபெரும் நீர்ப் போராட்டங்களுக்கு இடையே சுழன்று கொண்டிருந்த சுழியில் சிக்கி விட்டேன். போராடிப் போராடிக் கைகள் களைத்து விட்டன. கண் தெரியவில்லை. கால்களோ அசைய மறுத்தன. அப்புறம் ஒன்றும் தெரியாது. எவ்வளவு நேரம் சென்றதோ தெரியவில்லை... கண்விழித்தபோது நீலவானம் தெரிந்தது. கண்ணைச் சுழற்றிப் பார்த்தேன். நண்பன் பிரதீப்சிங் ஆர்வத்தோடு என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். நண்பர்களெல்லாம் சூழ்ந்திருந்தனர்...பழைய எண்ணங்கள் அலை அலையாக வந்தன. "எப்படிப் பிழைத்தேன்?" எனக் கேட்டேன். பிரதீப்சிங் கண்களிலிருந்து நீர் துளிப்பதைக் கண்டேன். பக்கத்தில் இருந்தவர் "பிரதிப்சிங் இல்லாவிடில் நீ எப்படிப் பிழைத்திருப்பாய்?" என்றார்கள்.

இருபது ஆண்டுகளுக்குமுன், அதுவும் பயங்கரமான நிகழ்ச்சிதான். கல்கத்தா சாலை வழியே சென்றுகொண்டிருந்தேன். திருமணம் ஆகிய புதிது. சம்பளத்தைப் பெற்றதும் ராணிக்கு என்ன என்ன வாங்கிக்கொண்டு போவது என்று எண்ணியவாறு போய்க்கொண்டிருந்தேன். மோட்டர் சைக்கிளில் வந்த எவனோ ஒருத்தன்

பிரேக்போடமுடியாமல் நடைபாதையில் அதை ஏற்றிவிட்டான். பின்னால் வந்துகொண்டிருந்த பிரதீப்சிங் எப்படித் தான் என்முன் வந்தானோ? பாய்ந்த மோட்டார் சைக்கிளைக் கைகளால் பிடித்தவாறே அதன்கீழ் அடிபட்டுக் கிடந்தான். நான் பெறவேண்டிய தண்டனையைத் தானே வலிந்து ஏற்றுக்கொண்டான். மருத்துவ நிலையத்திற்கு உடனே தூக்கிச் சென்றேன். ''பிடரியில் அடிப்பட்டுள்ளது. கால் எலும்பு முறிந்து விட்டது. ஒரு காலை எடுத்துவிட வேண்டும். பிடரியில் அடிபட்டிருப்பதால் புத்தி கலங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என மருத்துவர் சொன்னார்... நடுநடுங்கிப் போனேன். பிரதீப்சிங் மருத்துவ நிலையத்தை விட்டு வரப் பல மாதங்கள் ஆகிவிட்டன. வேலை செய்ய இயலாதவன் ஆனான். சிற்சில சமயங்களில், புயல்போல் சீறிச்சீறிப் பேசுவான். சிலசமயம் இடிபோல் சிரிப்பான். ஏதாவது எடுத்து உடைப்பான். மருத்துவர் 'கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்திவிடும்; பிடரியில் அடிபட்டதால்... அந்த நரம்பில் ஏதோ சிறிது கோளாறு ஏற்பட்டுவிட்டது. உடல் கோதிப்பு இல்லாது பார்த்துக் கொள்ளுங்கள், சரியாய்ப் போய்விடும்'' என்றார்.

இந்தக் குறையைவிட வேறொரு பெரிய குறையை இப்போது அவனிடம் கண்டேன். தூய மனத்தோடு பெண்களைத் தாயெனப் போற்றிப் புகழும் அவன் மனம் கெட்டுப் போயிருந்ததை ஒருவாறு கண்டுகொண்டேன். பெண்களைத் தவறாக நோக்கும் அவன் நோக்கமும் துன்பந் தந்தது.

நாடு சுதந்திரம் பெற்றவுடன் ரயில்வேயை ஒன்றாக இணைத்துவிட்டனர். நான் சென்னைக்கு மாற்றிக் கொண்டு வந்துவிட்டேன். ஒருநாள் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியபோது பிரதீப்சிங் வாயிற்படியிலே காத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன்...என்னைக் கண்டதும் கட்டிப்பிடித்துக்கொண்டு கதற ஆரம்பித்து விட்டான்.

தன் மனைவியும் உறவினரும் தன்னை இழிவுபடுத்தி அனுப்பிய கொடுமையைக் கூறிக்கூறி அழுதான். ''சரி, என்னோடேயே தங்கிவிடு. கோழைபோல் அழாதே. என்னுயிர் உள்ளவரை உன்னைக் காக்கின்றேன்'' என்று ஏற்றுக்கொண்டேன். எனக்காகத் தன்னை அழித்துக் கொண்ட ஒரு நண்பனுக்கு நான் செய்தது ஒரு சிறு செயலே ஆகும் என என் மனம் குறை கூறிற்று

அடிக்கடி இரவில் வேலைக்குச் செல்ல நேரும். ஒரு நாள் வேலை முடிந்து காலையில் வந்தபோது பிரதீப்சிங் தூங்கிக்கொண்டிருந்தான். ராணி சோகத்தோடு கூறினாள்.

''உங்கள் நண்பர் பேச்சும் பார்வையும் எனக்கு அச்சத்தைத் தருகின்றது. அவரை எப்படியாவது வீட்டை விட்டு அனுப்பிவிடுங்க'' என்றாள். அவள் முகம் கதிரவன் எழுந்தபின் தோன்றும் வெளுத்த நிலவுபோன்று வெளிறிப் போயிருந்தது.

''ஏன்? இரவு முழுவதும் தூங்கவில்லையா? பிரதீப்சிங் எதனையாவது உடைத்துவிட்டுக் கத்தினானா?'' எனக் கேட்டேன்.

''இந்த வீட்டையே உடைத்தாலும் பொறுமையாக இருப்பேன். ஆனால் என் பெண்மையை இழிவாக நினைக்கும் அளவுக்கு அவர் மனம் அவ்வளவு தாழ்ந்து போய் உள்ளது. உங்களோடு இருக்கும்போது அமைதியாக இருக்கின்றார். நீங்கள் சென்றபின் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு சிறிதுநேரம் புரள்கிறார். திடீரென்று வெறிக்க வெறிக்கப் பார்க்கிறார். சிற்சில சமயம் சுவரில் முட்டிக் கொள்கிறார்.''

''சரி, இன்றிலிருந்து ஒன்று செய்! இரவில் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு தூங்கு. இரவில் குடிக்கத் தண்ணீர், எழுந்து வெளியே செல்ல விளக்கு எல்லாவற்றையும் அவன் அறையிலேயே வைத்துவிட்டுப் போகின்றேன்.''

என்று சொன்னேன். தன் மனம் ஒப்புக்கொள்ளாவிடினும் என்னிடம் பேசிப் பயனில்லை என ஒருவாறு ஒத்துக் கொண்டாள்.

பல நாள்கள் இவ்வாறு நடந்தன. ஒருநாள் காலையில் சென்றபோது பதறிப்போய்விட்டேன். அவள் அறை திறந்து கிடந்தது. சுற்றும்முற்றும் பார்த்தேன்; அவள் இல்லை. அவளுடைய உயிரற்ற உடல் கிடந்தது. அன்பான பார்வையும், இரக்கமுள்ள மனமும் பலமணி நேரங்களுக்கு முன்பேயே போய்விட்டதுபோல் தோன்றியது. நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருந்தது. மெல்ல அழுத்திப் பிடித்துக்கொண்டு ராணியைத் தூக்கினேன். அவள் கையிலிருந்து ஒரு சீட்டு விழுந்தது.

"பாபு...நான் போகிறேன். தங்கள் தூய நெஞ்சிற்குத் துணையாகும் பண்பற்றவள் ஆகிவிட்டேன். தங்களின் உயர்ந்த மனப்பீடத்தில் வைத்துப் போற்றிய தூய மலராக நான் இல்லை. தங்கள் கண்களிலே உள்ள நீல மணியாய் இருந்தேன். இப்போதோ சிதறிய கண்ணாடி ஓடாய்ப் போய்விட்டேன். நீங்கள் என்றும், இனியும் எனக்குரியர். ஆனால் நானோ உங்களுக்குத் தகுதியற்றவளாகிவிட்டேன். கதவைத் தாழிடத் தவறியதால் அழிந்தேன்... வருகிறேன். தங்களிடம் விடைபெறாது போகின்றேன். எல்லையற்ற கடலில் ஒன்றை ஒன்று விரட்டிக் கொண்டு வரும் அலையெல்லாம் இறுதியில் காலக்கரையில் மோதி மோதி அழிந்து போகின்றன அவற்றுள் நான் முந்திய அலையாகப் போகின்றேன். ஒரு வேண்டுகோள். என்னை மன்னிக்குமாறு வேண்டிக்கொள்கின்கின்றேன். தங்கள் நண்பரிடமிருந்து தப்பிக்கும் முயற்சியில் அவருடைய மற்றொரு காலும் நொறுங்கிப் போயிருக்கும்." அப்படியே உட்கார்ந்து விட்டேன். "ஆ...ராணி இதற்கா இறந்து போய்விட்டாய்? நீ மனமாரக் குறையற்றவள் என்று எனக்குத் தெரியாதா?

இந்த உலகில் எத்தனையோ கொடுமைகளை, பாபங்களைப் பார்த்துப் பார்த்துத் தெளிந்த நான், உன்னை ஏற்றுக்கொள்ள மறுப்பேனா''என்று என் வாய் ஏதேதோ முணுமுணுத்தது.

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டேன். காற்றில் பறந்த பத்திரிகையை நான்காக மடித்துக் கையில் வைத்துக்கொண்டு எழுந்து, பதினைந்தாம் நம்பர் பேருந்துவைப் பிடிக்க விரைந்தேன்.

# ‘திருவேணி சங்கமம்’

‘‘அம்மா ...அம்மா!... அம்மா... அம்மா!’’ மடியில் கிடந்த மீனாவின் குரல் இது. நான் புறக்கடையில் உட்கார்ந்து இருக்கிறேன். வானத்தில் மீன்கள் எல்லாம் பளிச்சிடுகின்றன, சுற்றுமுற்றும் பார்க்கிறேன். எங்கும் இருள் சூழ்ந்துவிட்டிருக்கிறது. திரும்பி வீட்டைப் பார்க்கின்றேன். வீட்டினுள் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருக்கின்றன அணைப்பதற்கு யார் இருக்கிறார்கள்! மாடியை அண்ணாந்து பார்க்கிறேன். அங்கும் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. குனிந்து மீனாவைப் பார்க்கிறேன். அவள் என்னையே பார்த்துக்கொண்டு மல்லாந்து படுத்துக்கொண்டிருக்கிறாள். என் அலங்கோலத் தோற்றத்தைப் பார்த்துப் பார்த்துப் பயப்படும் அவள் பார்வை என்னை என்னவோ செய்கிறது.

‘‘அம்மா ...அம்மா!’’

‘‘ஏன்...டி...!’’ நான் பதில் தருகிறேன், ‘அம்மா’... மீண்டும் நெஞ்சைக் குழைத்துவிடக்கூடிய உருக்கமான அழைப்பு.

‘‘ஏண்டா கண்ணு என்னவேணும்?’’ விரிந்து கிடக்கும் கூந்தலை முடிந்துகொண்டே பேசுகிறேன். எனக்கே வியப்பாக இருக்கிறது. என் கோபதாபம் எங்கே

போயிற்று? ஒரு விநாடியிலே நான் பழைய காமாட்சியாக ஆகிவிட்டேனா என்ன? குழந்தையும் அதைப் புரிந்து கொண்டுவிட்டாள். தயங்கித் தயங்கி அழைத்தவள் இப் போது தாராளமாகப் பேசத் தொடங்கிவிட்டாள். அவள் கண்களில் இப்போது தயக்கத்தையோ பயத்தையோ காணோம். ஏதோ ஒரு தைரியம் தெரிகிறது. மீண்டும் அதை நினைத்துக்கொண்டு அழுகிறேன்.

''அம்மா...அம்மா...ஏம்மா அழறே?'' இவ்வளவு நேரம் அந்தப் பிஞ்சு மனத்தில் முட்டி மோதிக்கொண் டிருந்த உணர்ச்சி பேச்சாகிவிட்டது.

''உம்...என் தலைவிதி.'' இது என் பதில். குழந்தை மீனா ஒன்றும் பேசாது என்னையே பார்க்கிறாள். என் பேச்சு அவளுக்குப் புரியவில்லை போலும். மேலே என்ன பேசுவது என்று நினைக்கிறாளோ என்னவோ, அந்தக் கண்கள் மேலும் என்னைக் குழைத்துவிடும் போலிருக் கிறது அவள் கண்களிலிருந்து என் கண்களை எடுத்துத் திருப்பி வானத்தைப் பார்க்க முயல்கிறேன். என்னென் னவோ பழைய நினைவுகள் வந்து வந்து போகின்றன.

எதிரே வந்த எருமை மாட்டைக் கடந்து போகத் தெரியாமல் சைக்கிளோடு அவர் என்மேல் விழுந்ததெல் லாம் இன்னும் பச்சைப்பசேல் என்று என் நினைவில் இருக் கிறது. அன்று அவர் என்னைப்பார்த்து வேண்டிய அந்த மன்னிப்புப் பார்வை நினைக்க நினைக்க இன்பம் தருகிறது. குழந்தைப் பருவத்தில் மழை பெய்யும்போது குடை பிடித்துக்கொண்டு, பள்ளிக்கூடத்திற்கு அவர் என்னையும் அணைத்தபடியே அழைத்துச் சென்ற நிகழ்ச்சிகள் ஏனோ இப்பொதும் எண்ணங்களில் அலை அலையாய் வருகின்றன. வரதட்சணையாக மாமி அதிகப் பணம் கேட்டபோது, யாருக்கும் தெரியாமல் தனக்கு வந்த போனசை அப்பாவிடம் கொடுத்ததைத் தற்

செயலாக நான் கண்ட காட்சி இந்த உடம்பு இருக்கிற வரை மறக்கக் கூடியதில்லை. திருமணத்தன்று, 'அடியே காமாட்சி'' என்று அவர் தழுவிக்கொண்ட அன்பு அடுத்துவரும் பிறவியிலெல்லா தொடர்ந்து வரும்.

''காமாட்சி!'' என் எண்ண அலைகளுக்கிடையே அவர் குரல் கேட்கிறது ''காமாட்சி பசிக்கிறது. சோறு போடு. நீயும் போட்டுக்கொள்.''

''முடியாது. சோறு போட மாட்டேன். நானும் போட்டுக்கொள்ள மாட்டேன்.'' என்னவோ வீம்புக்கு நானும் பதில் சொல்லிவிட்டு, அப்புறம் என்ன சொல்கிறார் என்று என் கண்ணையும், காதையும் கவனமாக வைத்துக்கொண்டு பார்க்கிறேன். மாடிப்படியில் ஏறுகிற அவர், கீழே இறங்கி வந்து ''அடி, அசடே!'' என்று என்னைத் தழுவிக்கொள்ள மாட்டாரா என்று என் நெஞ்சம் ஏங்குகிறது. மாடிப்படியில் அவருடைய காலடி ஓசை கேட்கிறது. ஆனால் அது என்னை நோக்கிக் கீழே இறங்கி வரவில்லை எனக்கு எதிர்த்திசையில் மாடியை நோக்கிப் போகிறது. 'படீல்' என்று கதவை அடித்துச் சாத்தும் ஓசையும், அதன் மூலம் அவர் கோபத்தின் அழுத்தமும் எனக்கு விளங்காமல் போகவில்லை. நான் மட்டும் என்ன மரமா? எனக்கு மட்டும் கோபம் வராதா? பத்து ஆண்டுகள் ஆச்சு அவர் என் கழுத்தில் தாலி கட்டி. தாலிக்கயிறு தவிர ஒரு மாதம் நிலையாக ஒரு தங்கச் சங்கிலி போட்டது கிடையாது. பல நாள் பணம் சேர்த்துப் போனவாரம் தான் நானும் அவரும் போய்ச் சங்கிலி ஒன்று வாங்கி வந்தோம். நாலைந்து நாள்களுக்கு முன்புதான் வெள்ளிக்கிழமையன்று அவரே என் கழுத்தில் போட்டு அழகு பார்த்தார். இன்று அது வேண்டுமாம். அவர் தங்கையின் நிச்சயதார்த்தத்துக்குப் பாங்கியில் வைக்கவேண்டுமாம். இப்போ பணவசதி இல்லையாம்.

பத்து வருடத்திற்குப் பிறகு வந்தது இது. பத்து நாள்கூட ஆகவில்லை. இப்போது போனால் எப்போது வருமோ? வருமோ? வராதோ? நான் பிடிவாதமாகத் தர மறுத்து விட்டேன். எனக்கு மட்டும் ஆசை இருக்காதா? மீனாவை அழைத்துக்கொண்டே பழக்கடை நிலப்படியில் நான் தலைவைத்துப் படுத்துக்கொண்டேன். எப்படியோ தூங்கிவிட்டேன். எவ்வளவு நேரம் தூங்கினேனோ தெரியாது.

''யாரடி போட்டா? அப்பாவா?'' என்று கேட்டேன். ஒன்றும் சொல்லத் தோன்றாது தலையை ஆட்டினாள். சோற்றை நினைத்ததும் பசி வயிற்றைக் கிள்ளியது. 'அவரோ பாவம்! நமக்காகப் போட்டிருக்கிறார். வீம்பு 'எதற்கு' என்று என் மனமே குத்திக்காட்டிற்று. அவசர அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு சமையல் அறைப் பக்கம் வந்தேன். நான் வருவதற்கும், அவரும் அவளும் மாடியிலிருந்து வருவதற்கும் சரியாக இருந்தது. மூவரும் சாப்பிட உட்கார்ந்தோம். கண்ணீர் பெருகிப் பெருகி எனக்கு வந்தது.

''அடி அசடே! ஏன் அழறே. இல்லேன்னா வேண்டாம். இப்போ போய் யாரிடம் கடன் கேட்பது என்று ஒன்னைக் கேட்டேன். பரவாயில்லை. இப்போ சாம்ப மூர்த்தி சாரிடம் போய்க் கேட்டுப் பார்க்கிறேன்.''

''அதெல்லாம் வேண்டாம். அவரிடம் முன்னேயே நாம் கடன் வாங்கி இருக்கோம். நான் சங்கிலியைத் தறேன். ஏதோ ஆசையில் அப்படித் தப்புத் தண்டாவா பேசிட்டேன்.''

''அதுதான் அம்மா அழுதே?''

''சரிசரி, சாப்பிடு மீனா.''

''காமாட்சி, சாப்பிடு. அப்புறம் பேசிக்கொள்ள லாம்.'' எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தோம்.

வலது பக்கம் வைக்கவேண்டிய கறிகள் இடது கைப்பக்கம் இருந்தன. கவலையில் தவறி வைத்துவிட்டார் என்று அன்போடு நான் அவரைப் பார்த்தேன்.

''ஆண்கள் எத்தனை நாள் கற்றாலும் பரிமாறும் கலை வ!ந்துவிடுமா? என்ன?'' என்று நான் கர்வத்தோடு அவரைப் பார்த்தேன்.

ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்ட எங்கள் இருவரையும் பார்த்து மீனா தலை குனிந்து கொண்டாள். அதைக் கவனியாதவர்போல ஒருவாறு ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு சாப் பிட்டோம். சாப்பிட்டபின் இலையை எடுத்துக்கொண் டிருந்த நான் ''அய்யோ...! இங்கே வாங்க. என்ன பரிமாறல் உங்கள் பரிமாறல், இலையைக் குப்புறப் போட் டிருக்கீங்களே!'' என்றேன்.

''அப்படியே யார் போட்டது? நீ இல்லே அப்படிப் போட்டிருக்கே.''

''இல்லையே! நான் எங்கே போட்டேன்? நீங்க ளில்லையா சோறுபோட்டுச் சாப்பிட ஆளை அனுப்பி னீங்க.''

''நானா? நீ இல்லையா, இலை போட்டு, பறிமாறிட்டு, மீனாவை மாடிக்கு அனுப்பி, சோறு போட்டிருக்குன்னு அழைத்துவரச் சொன்னே!''

இப்படி எங்கள் பேச்சு நடந்து கொண்டிருந்தபோது அங்கிருந்து மீனா மெல்லப்படுக்கையறைக்கு நழுவிக் கொண்டிருந்தாள். எங்களுக்கு உண்மை ஒருவாறு விளங் கிற்று. தனக்குத் தெரிந்தபடி சோறு போட்டுவிட்டு மீனா எங்களையும் உண்ண வைத்தது தெரிந்துவிட்டது. ஒரே

நேரத்தில் ''கண்ணு! மீனா கண்ணு!'' என்று நாங்கள் இருவரும் படுக்கை அறைக்குப் போனோம். அவள் குப்புறப் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதுகொண் டிருந்தாள். அவள் அருகில் நாங்களும் சென்று படுத்துக் கொண்டு அவளை எங்கள் மார்பில் சேர்த்து அணைத்துக் கொண்டு கண் கலங்கினோம். எங்கள் மூவர் கண்ணீரும் ஒன்றுசேர்ந்தன. அது சில்லென்று குளிர்ச்சியாக இருந்தது. உள்ளம் குளிர்ந்தது. திரிவேணி சங்கமத்தில் நீராடியது போல உடம்பும் குளிர்ந்தது. கோபதாப அழுக்கெல்லாம் கரைந்தோடிப் போய்விட்டது.

# நாகரிகம்?

''சே! ஒரே நாத்தம்!'' என்று மூக்கைச் சுளித்தபடி சுற்றுமுற்றும் பார்த்தான் நண்பன் சீனிவாசன. ''ஏ தாத்தா! ஒன்னெதாம்பா? அப்பாலே போய் ஒக்கார்'' என்று ஏதோ மின்வண்டி தனக்கே சொந்தமானதுபோல ஒரு அதட்டுப் போட்டுவிட்டு, ''அன்கல்ச்சர்டு கண்ட்ரீ புருட்'' என்று டையைச் சரிசெய்துகொண்டு, முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டே நளினியை நோக்கினான் அவள் புன்னகை பூத்தாள். அவள் எங்கள் குழுவின் வீனஸ்; அதாவது காதல் தேவதை! அவன் கோபம் அடங்கிற்று.

சாக்குபோல அழுக்கு ஏறிய ஆடையும், பரட்டைத் தலையும், காவிப் பல்லும்கொண்ட ஒரு கிழவன், அந்த அதட்டலைக்கேட்டுத் தன் கையிலிருந்த சின்ன மூட்டையை இடுக்கிக்கொண்டு, வண்டியின் ஒரு மூலையில் போய் அமர்ந்துகொண்டான்.

நளினி, சீனிவாசனை நோக்கிப் புன்னகை பூத்தது பாலச்சந்தருக்கு என்னவோபோல் இருந்தது. ''என்ன மிஸ்டர் சீனு! ஆள் குளிச்சி அரை மாசம் ஆகியிருக்கும் போலிருக்கே'' என்று தானும் அந்த உரையாடலில் கலந்து கொண்டான், நளினியை அரைக்கண்ணால் பார்த்தபடியே.

''அரை மாசமா? வாட் நான்சென்ஸ். ஆறு மாசம்னு சொல் அப்பனே'' என்றான் பீ அழகன் (அதாவது, பரிமேலழகன்). 'கொல்' என்று எல்லோரும் சிரித்தார்கள். நளினியும் அந்தச் சிரிப்புக் கூட்டத்தில் ஒருத்தி. பாலச்சந்தர் இந்தமுறையும் விக்கட் இழந்தான். முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஓடுகின்ற கட்டடங்களைப் பார்த்தபடியே வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

பாலச்சந்தரின் முகத்தைப் பார்த்து இரக்கத்தோடு அவனோடு பேச்சுக் கொடுக்க முன்வந்தாள் 'கம்'; அதாவது திலகம். ''மிஸ்டர் பாலு! குளிச்சு அரைமாசமும் ஆகியிருக்கலாம், ஆறு மாசமும் ஆகியிருக்கலாம். ஆள் தலை சீவி எத்தனை மாசம் ஆகியிருக்கும், சொல்லுங்க பார்ப்போம்!'' என்று இரு கைகளையும் தன் மார்பில் கட்டிக்கொண்டு ஒயிலாக நின்றாள்.

அதற்குள் ''கம் கம்'' என்று கடைசியில் உட்கார்ந்திருந்த கந்தப்பன், எங்கே பாலசந்தர் ரன் எடுத்துடுவானோன்னு ஓடிவந்து' ''தலைக்கும் சீப்புக்கும் டைவர்சு கேசு நடந்துகிட்டிருக்கு'' என்றான். இன்னொரு 'கொல்' சிரிப்பு.

''இப்படிப்பட்ட ஆளையெல்லாம் புடிச்சி வேன்லே போட்டுத் திருப்பதிக்கு அனுப்பனும், பிரதர்'' என்றான் மொட்டை மாஸ்டர் வேலூரு மோகன சுந்தர வேங்கட சுப்பரமணிய சர்மா. (அவன் பெயரைக் குறைத்துச் சொன்னால் அவனுக்குக் கோபம் வந்துவிடும்.)

சிலர் அவன் சொன்ன சொல்லை ரசிப்பதற்குப் பதில் அவனையே பார்த்து ரசித்தார்கள். தலையைக் குனிந்து கொண்டே அவன் அப்பாலேபோய் உட்கார்ந்து கொண்டான்.

''என்ன மிஸ்டர் முருகேஷ்! (முருகேசனுடைய நாகரிக வடிவம்.) என்ன வெயில். வாட் சம்மர். எ நல்ல

சோஷியல் சர்வீசு போங்க'' என்றாள் வள்ளி, தன் இரட்டைச் சடைகளால் விசிறிக்கொண்டே.

பச்சையப்பன் கல்லூரி 'சமூகத் தொண்டர் அணி' தாம்பரம். டி. பி. நிலையம் சென்று தொண்டு செய்து விட்டு மீண்டுகொண்டிருக்கிறது.

'யா' (அதாவது, ஆமாம்) என்றான், தன் தாடியைத் தடவிக்கொடுத்துக்கொண்டே முருகேஷ். அவனுடைய தொள தொளத்த பெல்பாட்டம் பேண்டும் டைட் ஷர்ட்டும் வியர்வையால் நனைந்து போயிருந்தன.

அடுத்த நிலையத்தில் வண்டி நின்றது. காற்றுக்காக வாயில் அருகில் நின்றுகொண்டிருந்த என்னை அப்பாலே இடித்துத் தள்ளியபடியே ''யாரைய்யா அது...'' என்று சீறிக்கொண்டே ஒருவர் உள்ளே நுழைந்தார். அவருடைய வெள்ளைச் சட்டையில் பல இடங்களில் சிவப்புத் துளிகள் இருந்தன. அவர் கண்கள் எல்லோருடைய வாய்களையும் பார்த்துக்கொண்டே வந்து அந்தக் கிழவனருகே நின்றன.

''ஏய் கிழவா! ஒனக்கு மூளே இருக்கா. ஒங்க தாத்தா கொள்ளுத்தாத்தா யாராவது இதுமாதிரி வண்டியெப் பார்த்திருக்காங்களா. ஒங்கேட்டுக்கு மின்சார வண்டி எதுக்குடா?'' என்று கத்தினார்.

எங்கள் எல்லோருடைய கவனங்களும் அங்குத் திரும்பின. அவன் கையிலிருந்த பையைக் காலில் இடுக்கிக் கொண்டு, சாமி, தெரியாமே துப்பிட்டேன். மன்னிப்பு கொடுத்துடுங்கோ'' என்று தன் மேல்துண்டை எடுத்துச் சிவப்புக் கரைகளைத் துடைக்கப்போனான். ''அய்யய்யோ வேண்டாம் வேண்டாம். அந்தத் துண்டிலே இருக்கிற அழுக்கு வேறே ஒட்டிக்கப் போவுது...'' என்று அவர் அப்பால் போனார். உண்மையிலேயே தன் செயலுக்காக அவன் மிகவும் வருந்தினான் என்பதை அழுக்குப் படிந்து ஷேவிங்செய்யாத அந்த முகம்கூட நன்றாகக் காட்டியது.

வண்டி புறப்படுகிற நேரத்தில் தடதடன்னு ஒருவர் வண்டியில் ஏறினார். நெற்றியில் திருநீறு. குடுமித்தலை. பஞ்சகச்சம். மேலே சட்டையில்லை. ஒரு சரிகைத் துண்டால் போர்த்திக்கொண்டிருந்தார். பெரிய ஆசாரம் போல் தோன்றினார்.

வண்டியில் ஒன்றும் நெருக்கடி இல்லை. ஓரிடத்தில் உட்கார்ந்தார் உடனே ஏதோ முள் குத்திக் கொண்டவர் போல் 'ஆ ஊ' என்று கூச்சலிட்டுக்கொண்டே அந்தக் கிழவனைப் பார்த்து, ''ஏ கிழமே! விலகிப்போ. தூர்த்தன், தூர்த்தன். ஒரே கருவாட்டு நாத்தம், சே சே'' என்று ஏதோ சொறி நாயை விரட்டுகிறதுபோல் எழுந்து நின்று கொண்டு, அந்தக் கிழவனை மூலையில்போய் ஒண்டிக் கொள்ளும்வரை விரட்டினார். தம் இடத்தில் மீண்டும் வந்து அமர்ந்துகொண்டு ''கலியுகம் பாருங்கோ. எல்லாம் கெட்டுப் போச்சு. எல்லாப் பயல்களையும் ஒன்னா ஏத்தி வச்சிட்டாங்க. இப்போதுதான் பூசை எல்லாம் முடிச் சிட்டுப் பொறப்பட்டேன். ஹைகோர்ட்டுக்குப் போகணும். அதற்குள் இப்படி ஒரு கண்ட்ராவி'' என்று அங்கலாய்த்துக் கொண்டார். அரை நிமிடத்தில் அந்தப் பக்கத்திலிருந்து 'கொர் கொர்' என்று குறட்டை ஒலி கேட்டது.

ஏதோ செய்யாத பாவம் செய்துவிட்டபோல அந்தக் கிழவன் நடுங்கிக்கொண்டே போய்க் கையிலிருந்த கருவாட்டு மூட்டையைப் பத்திரமாக இடுக்கிக்கொண்டு மூலையில் உட்கார்ந்து கொண்டான் நின்றுகொண்டு இருந்த எனக்கும் கால் வலித்தது. சுற்றுமுற்றும் பார்த்தேன். எங்கேயும் இடம் இல்லை. அந்தக் கிழவன் போன இடத்தில் மட்டும் இரண்டு பலகை காலியாக இருந்தது. மெல்லப் போய் அங்கே உட்கார்ந்தேன். ''டேய்! 'ரீ' கருவாட்டு வாசனை பிடிக்கப் போய் விட்டார்டா'' என்று தங்களுக்குள் என்னைக் குறித்து மெல்லப்பேசிய கேலி வார்த்தைகள் என் காதிலும்

விழுந்தன. 'ரீ' எனக்கு அவர்கள் இட்ட பெயர். என் தந்தை எனக்கு வைத்த பெயரோ பாரி.

அடுத்த நிலையத்தில் ஏறிய ஒரு குடுகுடு கிழவி தன் பெரிய கூடையை இழுத்துக்கொண்டே மெல்லப்போய் அந்தக் கிழவன் பக்கத்தில் கீழே உட்கார்ந்தாள். அதைப் பார்த்ததும் ''ஜூலியத்துக்கு ஒரு ரோமிமோ'' என்ற வார்த்தையும், அதைத் தொடர்ந்து பாட்டும் சிரிப்பொலியும் கைத்தட்டலும் கேட்டன.

''ஏன் அய்யா! எங்கே எறங்கறே?'' என்று அந்தக் கிழவனை. அவள் கேட்டாள். இடம்பிடித்த உடனே அடுத்த ஆளை விரட்டுற வேலைதானோ என்று நினைத்த படி அவர்கள் பேச்சுகளைக் கவனித்தேன்.

தன்னையும் மதித்து ஒருவர் பேசுவதைக் கேட்டவுடன் கிழவன் சுறுசுறுப்படைந்தான். ''சேத்துப்பட்லே, அம்மா, என் பொண்ணு குளிகுளிச்சிருக்கா...பத்தியம் போடணும் அவ...என் பெண்டாட்டி இருந்தா இந்த வேலை எனக்கு எதுக்கு. இந்தப் பொண்ணே பெத்துப் போட்டுட்டு அவ போயிட்டா!'' கிழவன் கண்கள் கலங்குகின்றன. தொண்டை அடைக்கிறது. நா தழுதழுக்கிறது.

''என்ன செய்யறது. அவன் எழுதினதை அழிச்சிட முடியுமா? ஏம் பொண்ணு வருடத்துக்கு முன்னே வயத்து வலின்னா. ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குப் போனே. அப்படியே அள்ளிக்கொடுத்துட்டேன் (முந்தானையால் கண்களைத் துடைந்துக்கொண்டே) நம்ப கொடுத்து வச்சது அவ்வளவுதான்.''

அதற்குள் கிழவன் பரபரப்படைந்து என்னைப் பார்த்தான். ஏதோ கேட்கத் தயங்குகிறான் என்று ஊகித்தேன். நானும் பார்த்தேன். உடனே கொஞ்சம் தைரியம்பெற்று ''அய்யா! சேத்துப்பட்டு இஸ்டேசன்லே என்னை இறக்கிப்புடுங்கோ'' என்றான். அவனுடைய

பேச்சு மொழிப் கேட்டுப் புன்னகை செய்தபடியே, ''சரிப்பா! நாங்களும் அங்கேதான் எறங்குகிறோம்; நீயும் எறங்கலாம்'' என்று சொன்னேன்.

சில நிலையங்கள் கடந்தன. காலதேவனுக்குப் பிறப்பும் இறப்பும் சாதாரண விஷயம். அப்படியே மின்சார வண்டியும், நிலையங்களில் நின்று, போய்க்கொண்டிருந்தது. சேத்துப்பட்டு வந்தது. இறங்கப் போகிறோம் என்பதைக் கிழவனுக்குச் சைகையால் காட்டிவிட்டு இறங்கினோம். அந்தக் கிழவியிடம் விடை பெற்றுக்கொண்டு கிழவனும் இறங்கினான்.

நான் இறங்கிக் கிழவனுக்கு முன்னால் நடந்து போனேன். எனக்குமுன் மாணவர் அனைவரும் இறங்கிப் பேசிக்கொண்டு போயினர். வழியில் தார்ச்சாலை நடுவில் ஒரு சின்னக் குழந்தை, ஒரு காலில் வழியில் கிடந்த முள்ளைக் குத்திக்கொண்டு, இன்னொரு காலில் நின்று கொண்டு கதறிக்கொண்டிருந்தது. கொடிய வெயிலில் உருகியிருக்கின்ற அந்தச் தார்ச்சாலைச் சூட்டை அந்தப் பிஞ்சுக்கால் தாங்கமுடியாது தவித்தது. மற்றொரு காலை ஊன்றி நடக்க முடியாமல் முள் குத்திக்கொண்டிருந்தது. பெற்ற தாய், சாலை ஓரத்தில் பொங்கிக்கொண்டிருந்த சோற்றை அகப்பையால் கிண்டிக்கொண்டே ''சனியன்... சனியன்'' என்று திட்டிக்கொண்டிருந்தாளே ஒழிய ஓடி வந்து தூக்கவில்லை. எனக்கு மனம் தாங்கவில்லை. மெல்ல அருகில் போனேன். அழுது, மூக்குச்சளி வழிந்துகொண்டிருந்த அந்தக் குழந்தையைத் தூக்கி அப்பால் விட்டிருப்பேன். என்னவோ அருகில் நெருங்கி நான் தலையைத் தூக்கிப் பார்த்தேன். முன்னே போய்க்கொண்டே நான் வந்துவிட்டேனா என்று பார்க்கத் திரும்பிய நளினி என்னைப் பார்த்துக் கொஞ்சலாக முகத்தைச் சுளித்தாள். 'சட்டென்று' என். சி. சியில் ஸ்டெப் தவறிய இளைஞனைப்போல் என்னைச் சமாளித்துக்கொண்டு முன்னேறினேன்.

''அய்யய்யோ பாவிங்களா!'' என்ற கூக்குரல் கேட்டு திடீரென்று எல்லோரும் திரும்பிப் பார்த்தோம்; கருவாட்டு மூட்டையைக் கீழே போட்டுவிட்டு, அந்த கிழவன் குழந்தையைத் தன் தோளில் போட்டபடியே அருகிலிருந்த புங்கமர நிழலுக்குத் தூக்கிக்கொண்டு போனான். மெல்ல முள்ளை எடுத்தான். அந்த அநாகரிகக் கிழவன் செய்த அன்புச் செயலைக் கண்டு என்னையும் அறியாமல் என் எண்கள் கசிந்தன. நளினிக்குத் தெரியாமல் அதைத் துடைத்துக்கொண்டே பின்தொடர்ந்தேன்.

# ஐயோ! மகனே!

அங்குமிங்கும் அலைந்து திரிந்துவிட்டு அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். நண்பர்களும் மனிதர்கள்தானே. எவ்வளவு நாள்தான் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். 'ஸ்காலர்ஷிப் வரும்; வரும்' என்று சொல்லிப் பலரிடம் கடன் பட்டுவிட்டான். இனியும் இரக்கப்பட்டுக் கொடுத்து ஏமாறுமளவுக்கு முட்டாள்கள் யாரும் இல்லை. சோர்ந்து சுவரின் மூலையில் சாய்ந்தான்.

''டாக்டர் என்னடா சொன்னார்?'' என்ற மெலிந்த ஒலி உள்ளேயிருந்து வந்தது. தொடர்ந்து 'லொக் லொக்' என்ற இருமல் ஒலியும் கேட்டது. அவனைப் பெற்றெடுத்து ஆளாக்கிய அம்மாவின் குரல். அந்த இருட்டில் சத்தமிடாது அவன் வந்து உட்கார்ந்ததை எப்படியோ கண்டு பிடித்துவிட்டாள் அந்த அம்மா.

டாக்டர் என்ன தேர்தலில் நிற்கிறாரா, மண்ணெண்ணெய் விளக்குக்கூட இல்லாத அந்தக் குடிசைக்கு வர! அவன் போய்க் கூப்பிடவே இல்லை. அந்தத் தாயின் மனத்தைப் புண்படுத்த விரும்பாமல் புளுகினான். ''டாக்டர் ஊரில் இல்லேம்மா, அவரசக் கேஸாய் எங்கேயோ போய்

விட்டார்...உம்...சீக்கிரம் வந்துடுவாராம்!'' என்று சொல்லிக்கொண்டே இருட்டில் நிதானமாக நடந்துபோய் தன் தாயின் பக்கத்தில் அமர்ந்தான்.

'கதகத' என்று அனல் வீசியது. ''ஒரே குளிரா இருக்குடா, போத்திடு'' என்றாள். கொடியில் தொங்கிய ஓரிரண்டு துணிகளை எடுத்துப் போர்த்தினான். ''அய்யோ, அப்பா...குளிர் தாங்கலடா'' என்று வாய்க்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள். துண்டைக் கட்டிக்கொண்டு இடுப்பு வேட்டியை அவிழ்த்து மேலும் போர்த்தினான். ''கொஞ்சம் காப்பி வச்சிக் கொடு'' என்று சொல்லியதாகத் தோன்றியது. அப்புறம் பேச்சு மூச்சு இல்லை. மயக்கம் போலிருக்கிறது என்று எதையோ நினைத்தபடி உட்கார்ந்திருந்தான். எவ்வளவு நேரம் அப்படி உட்கார்ந்திருந்தானோ தெரியாது. படலை மெல்ல நகர்த்தும் சத்தம் கேட்டு விழிப்படைந்தான். 'யாரது?' என்ற அதிகார ஒலி வெருட்டெடன அவன் வாயை விட்டுப் புறப்பட்டது. ''நான்தான், கற்பு'' என்ற பதில் வந்தது. அது அவன் அன்புத் தங்கை கற்புக்கரசி. கோயில் விளக்கில் படித்து விட்டு வந்திருக்க வேண்டும்.

''ஏம்மா! அம்மாவுக்கு உடம்பு சரியில்லே; பக்கத்திலே இல்லாமே படிக்கப் போயிட்டியே'' என்று அன்பாகக் கடிந்துகொண்டான். என்ன செய்வது? அவளுக்குத் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. தேர்ச்சி தரும் ஆசிரியர் அம்மாவுக்குத் துணையிருந்தேன்னு சொன்னா மன்னிச்சிடுவாரா? மார்க்குத்தான் போடுவாரா?

''கற்பு! இந்தா போயி மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு வா'' என்று சட்டைப் பையைத் தடவிப் பத்துக் காசு நாணயம் ஒன்றை எடுத்துக் கொடுத்தான். கொஞ்ச நேரம் ஆகியிருக்கும். ''மண்ணெண்ணெய் விலை ஏறிப்

போச்சாம். பத்து காசுக்கெல்லாம் இனிமே தரமாட்டாங்களாம்'' என்று முனகிக்கொண்டே திரும்பி வந்தாள். 'சரி, மாடி வீட்டுக்காரங்க கிட்டே இன்னைக்கு மட்டும் கொஞ்சம் எண்ணெய் வாங்கிக் கொண்டுவந்து விளக்கேத்து. நான் போய் அம்மாவுக்குப் பால் வாங்கி வறேன்'' என்று குவளையை எடுத்துக்கொண்டு அந்த இருட்டில் புறப்பட்டுப் போனான்.

எருமை மாட்டுச் சாணி, மூத்திரம் ஆகிய மதிலையும் அகழியையும் கடந்துபோய் பால்காரம்மாவின் வீட்டை அடைந்தான். வீட்டருகே போனதும் அவனுக்கு அச்சமாக இருந்தது .எருமை கடாவில் எமன் தான் வருவதாகச் சொல்வார்கள். ஆனால் ஏழெட்டு எருமை மாடுகள் புடைசூழ கையை வீசிக்கொண்டு 'சூ ஊ' என்று கூச்ச லிட்டுக் கொண்டு பத்ரகாளிபோல் வரும் ஆஜானுபாகுவான அந்த அம்மாவை இரவில் நினைத்துக்கொண்டால் யாருக்குமே கொஞ்சம் பயமாகத்தான் இருக்கும். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மெல்லக் கேட்டான்

''அம்மா எல்லாக் காசையும் சேத்துக் குடுத்துடுறேன் இன்னும் டியூஷன் பணம் வரலே. இன்னைக்கு மட்டும் இல்லேன்னாமெ அரை ஆழாக்குப் பால் குடுங்க; அம்மாவுக்கு ஒரே சுரமாயிருக்கு'' என்று கெஞ்சினான். கடுகடுப்பாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, உள்ளே போய் அரை ஆழாக்குக் கொண்டுவந்து என் குவளையில் கொட்டினாள். அது 'பாலென்று பேர் படைத்திருந்தது.' ஏதாவது சொன்னால் இதுவும் கிடைக்காதே என்று கொடுத்ததை வாங்கிக்கொண்டு வாய் பேசாமல் வீட்டுக்கு வந்தான். இருந்த சுள்ளியைப் போட்டு எரித்து ஒருவாறு காப்பி வைத்துக் கொடுத்தான். மத்தியானம் வடித்த சோற்றை எடுத்து இரண்டு தட்டுகளில் வைத்துக்கொண்டு அவனும் அவன் தங்கையும் உட்கார்ந்திருந்தார்கள். சோறு தண்ணிவிட்டுப் போயிருந்தது; சில்லென்று இருந்தது. மடமடவென்று விழுங்கினார்கள்.

அம்மாவின் முகம் வேர்த்துவிட்டிருந்தது. போர்த்தியிருந்த வேட்டியை எடுத்து முகத்தை துடைத்துவிட்டு அதை இடுப்பில் கட்டிக்கொண்டான். துண்டை எடுத்துத் தன் தங்கையிடம் கொடுத்துப் போர்த்திக்கொள்ளச் சொல்லிவிட்டு ''கற்பு! அம்மாவைப் பார்த்துக்கோ'' என்று சொல்லியபடியே, படலை இழுத்துச் சாத்திவிட்டுக் கல்லூரி விடுதியை நோக்கிப் போனான்.

எப்போதும்போல் அவன் நண்பன் காளத்தி விடுதி அறைச் சாவியை நிலையின்மேல் விட்டுப் போயிருந்தான். அதை எடுத்துக் கதவைத் திறந்துகொண்டு போய் படிக்க உட்கார்ந்தான். படிக்க இயலவில்லை. மனத்தில் தொடர்ந்து எழுந்த அலைகள் அவனைப் படிக்கவிடவில்லை. 'படிப்பை விட்டுவிட்டு ஏதாவது வேலைசெய்து பிழைக்கலாமா...? அம்மாவின் மனம் நோகும். அவர்கள் ஆசைதான் நிறைவேறட்டுமே' தங்கைக்கு வேறு வயதாகிக்கொண்டு வருகிறது'... இப்படி எத்தனையோ எண்ணங்கள் முட்டி மோதிக்கொண்டு வந்தன. துயரம் தாங்க இயலவில்லை. தாமஸ் கிரேயின், மயானப் பாடலைப் புரட்டினான். தன்னை மறந்து அந்தக் கையறுநிலைப் பாட்டில் ஈடுபட்டான். காளத்தி வந்து எவ்வளவு நேரம் பின்னாலேயே நின்றானோ தெரியாது. ''என்னப்பா! தாமு, எலிஜியிலே ஆழ்ந்துட்டியே'' என்று சொல்லியபடியே ஆதரவோடு அவன் முதுகில் தட்டினான்.

''உம்...அடுத்தவன் சுமக்கும் சுமை அதிகமாயிருப்பதைப் பார்த்துப் பார்த்து நம் சுமையின் அழுத்தத்தை நாம் மறப்பது இல்லையா!'' தாமு முடிப்பதற்குள்.

''ஆமாம், சிவனின் நஞ்சுண்ட கண்டம், உரலோடு கட்டுண்ட கண்ணன் பிள்ளை விளையாட்டு, இளவரசன் சித்தார்த்தனின் துறவுக்கோலம், அன்பன் இயேசுவின்

சிலுவைக் காட்சி, தொண்டன் காந்தியின் குருதி வழியும் மார்பு—இவற்றைக் கண்டு எத்தனையோபேர் தங்கள் நெஞ்சச் சுமையை இறக்கி வைத்துவிட்டு ஆறுதல் பெற்றிருக்கிறார்கள்...துன்ப இலக்கியங்கள்போல் தொண்டர்கள் வரலாற்றைப்போல் துயரங்களை மறைக்கத் துணை செய்யும் நல்ல கருவி வேறு ஒன்றும் இல்லை'' என்று படபடப்போடு பேசி நிறுத்தினான். காளத்தி கல்லூரிப் பேச்சாளன். தாமு பதில் ஒன்றுங் கூறாது இறையின் மேல்தளத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். காளத்தி தொடர்ந்தான்.

''உன் உம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னியே எப்படி இருக்கு...டாக்டர் வைத்துப் பார்க்க முடியாது. அரசினர் மருத்துவ நிலையத்திற்கு அழைத்துப் போகலாமே.எங்கள் ஊர்க்காரரர் ஒருவர் அங்கு டாக்டராக இருக்கிறார். நான் சொன்னால் கட்டாயம் வேண்டிய உதவி செய்வார்'' என்றான்.

''ஒரு ஆள் தெரிந்தாமட்டும் போதுமா காளத்தி? அரசினர் மருத்துவ நிலையத்தில் ஒவ்வொரு கட்டில் காலுக்கும் காசு கொடுத்தாத்தான் சும்மா இருக்கும்! இல்லாட்டிக் குப்புறத் தள்ளிவிடும்'' என்று தன் பழைய அனுபவத்தை எடுத்து விளக்கமாகச் சொல்லத் துவங்கினான்

''இதோ பார் தாமு!'' இடைமறித்துப் பேசத் துவங்கினான் காளத்தி. ''கதை எழுதியே இரண்டு வருடமா நான் காலந் தள்ளுவது உனக்குத் தெரியும். உனக்கு எவ்வளவோ அனுபவம் இருக்கு. ஆசிரியனா வேறு இருந்திருக்கே. ஏதாவது எழுது, நிச்சயம் நல்லா இருக்கும். கதிரவனுக்கு அனுப்பி வைக்கலாம். மாணவருக்கு ஆதரவு தரும் நல்ல பத்திரிகை அது.ஒவ்வொரு கதைக்கும் ஐம்பது ரூபாய் கிடைக்கும்'' என்று குருடனுக்குக் கண்

வழங்குவதுபோல் சொன்னான். 'ஐம்பது ரூபாய்' என்ற ஒலி தாமுவின் காதில் ரீங்காரம்' செய்துகொண்டிருந்தது'

"அட! எனக்கெங்கப்பா கதை எழுத வரப்போகுது! கதை என்னா கட்டுச் சோற்று மூட்டையா, நினைச்சதும் கட்டி விடுவதுக்கு? அதெல்லாம் வீண் ஆசை" என்று சொல்லும்போதே எதையோ நினைத்துக்கொண்டவன் போல் காணப்பட்டான்.

"அது சரி, நீ பள்ளியில் ஆசிரியனாய் இருந்தபோது ஏதோ ஒரு நிகழ்ச்சி என் மனதை உருக்கிவிட்டது; தூக்கம் வரவில்லை; ஒருநாள் இரவு பன்னிரண்டு மணியிருக்கும்! எழுந்தேன்; மனதில் அந்த நிகழ்ச்சி சுழன்றுகொண்டே இருந்தது. அப்படியே கைக்கு வந்தபடி எழுதிட்டேன். அது கதையோ என்னவோ'ன்னு சொன்னியே அதைக் கொண்டு வா பார்க்கலாம்" என்றான் காளத்தி.

புதையலைத் தோண்ட மண்வெட்டி தேடி ஓடுபவனைப்போலத் தடதட என்று மாடியைவிட்டு இறங்கி ஓடினான். வீட்டின் மூலையில் கிடந்த கள்ளிப் பெட்டியின் உள்ளிருந்த புத்தகம், காகிதம் எல்லாவற்றையும் எடுத்து வெளியே போட்டுத் தேடினான் நல்ல காலமாக அகப்பட்டுவிட்டது. ஓடிப்போய் கொடுத்தான்.

காளத்தி அதைப் படித்துக்கொண்டே வந்தான். இடையிடையே கசிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். "தாமு!" என்று தழுதழுக்க அழைத்துத் தன் நண்பனைத் தழுவிக்கொண்டான். "நான் சொல்கிறேன்... பல கதைகளைப் படித்தவன் பல நாட்டுக் கதைகளைப் படித்தவன் சொல்கிறேன். நீ பெரிய கதாசிரியன் ஆகிவிடுவாய் பார்!" என்று அழுத்தந் திருத்தமாய்க் கூறி அதைத் தாமுவிடம் கொடுத்தான்.

கதாசிரியன் ஆகிவிட்டதாகவே நினைத்து தாமு பூரித்துப்போனான். 'ஆகிறோமோ இல்லையோ, பணம் கிடைக்கும். அம்மா நோய் தீர்க்க உதவும். கடன் தொல்லை தீர்க்க உதவும்; கடன் தொல்லை தீரும்' என்று அவன் மனம் துள்ளியது. சிறிது நேரம் புத்தகத்தைப் புரட்டிவிட்டு வீட்டுக்குப் போனான். மினுக் மினுக் கென்று உயிர் ஊசலாடுவதுபோல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. படலை மெல்லத் திறந்து உள்ளே நுழைந்தான். அம்மாவும் தங்கையும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். தான் கதாசிரியனாகப் போகும் பெருமையை அம்மாவிடம் சொல்ல அவன் மனம் தவித்தது. அயர்ந்து தூங்கும்போது எழுப்பத் தயங் கினான். ஏடுகளை மரப்பெட்டியின்மேல் வைத்துவிட்டு மெல்லப் படுத்தான். வெகு நேரம் தூக்கம் வரவில்லை. என்னென்னவோ கற்பனைகள்.

'கதை உலகச் சிற்பி திரு. தாமு என்னும் தாமோ தரனார் மணிக்கொடி மரபுக்குப் புத்துயிர் ஊட்டிய புகழாளர். அவருடைய சிறுகதைகள் இன்று எண்ணற்ற மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுப் பாராட்டுப் பெற்றுள்ளன. கனவு, நினைவோட்டம், கடிதம், நாட்குறிப்பு, உருவகம், உள்ளுறை இப்படி எத்தனையோ உத்திகளைக் கையாண்டு தமிழ்த் தாயை மகிழ்வுறச் செய்த மாண்பாளர் அவர். ஏழைக் குடும்பத்தில் தோன்றி, வறுமையில் வாடிவதங்கி அவர் பெற்ற அனுபவங்களால் அவர் எழுதும் ஒவ்வொரு எழுத்தும் ஆற்றலோடும் அழகோடும்மிளிர்கின்றன. காந்தி அடிகளின் எளிமையும், இயேசுநாதரின் உருவகங்களும்,தாகூரின் லாவகமும்,கலீல் கிப்ரானின் சிந்தனைகளும், திரு. வி. க. வின் மிடுக்கும் அவர் நடையில், இயைந்து எழிலோடு பொலியும். இப்படி எழுத்துத் துறையில் தாம் இமயம்போல் விளங்குவதோடு அதற்காக ஒரு பள்ளி ஏற்படுத்தித் தமிழ்நாட்டின் ஏற்ற மிக்க இளைஞர்களை அந்தக் கற்பனைக்கலையில் வல்லவ

ராக்கும் நல்லதொரு இலக்கியத் தொண்டராகவும் அவர் விளங்குகிறார். அத்தகைய பெரியாரைச் சென்னை பாராட்டியது; கோவை பாராட்டியது; ஏன் தமிழகமே பாராட்டியது. நம் ஊர்க்காரராகிய அவரை நாம்தான் பாராட்டத் தவறிவிட்டோம். அந்தக்குறை இனி நமக்கு இல்லை. நம் பாராட்டின் நினைவாக இந்தப் பொன் மலரை அவர்க்கு அணிவிக்கிறேன்' என்று தன் ஊர் மக்கள் எல்லாம் பாராட்டுவது போலக் கற்பனை உலகில் சிறிது நேரம் மிதந்தான் அப்புறம் எப்படியோ தூக்கம் வந்துவிட்டது. தூங்கிப்போனான்.

தொடர்ந்து சேவல் கூவுவது கேட்டது. எழுந்து வெளியே வந்து கீழ்வானத்தைப் பார்த்தான். பளிச்சென வெள்ளி முளைத்து இருந்தது. கரிக் குருவிகள் கீசுகீசென அங்கும் இங்கும் பறக்கும் ஒலி கேட்டது. பக்கத்தில் இருந்த வேப்ப மரம் ஒரு காலில் நிற்கும் பரட்டைத் தலை அரக்கன் போல் இருண்டு தோன்றியது. அந்த இருளுக்கு இடையே சில குருவிகள் 'கசுமுசு' என்று இரகசியம் பேசிக் கொண்டன. தென்கிழக்குத் திசையில் திடீரென நட்சத்திரம் ஒன்று எரிந்து விழுவதைப் பார்த்தான். மணி ஐந்து ஆகியிருக்கும்போல் தோன்றியது. தேர்வு நினைவுக்கு வந்தது. உடனே விடுதிக்குப் புறப்பட்டான். வலிப்பு இழுக்கும் குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு ஓர் அம்மா அங்கலாய்த்தபடியே 15 ஆம் எண் பேருந்து நிலையம் நோக்கிப் போனாள். ''ஐயோ பாவம்'' என்று முணுமுணுத்த படியே விடுதியை அடைந்தான் தன்னை மறந்து படித்தான். எட்டரை மணி ஆகிவிட்டது. விரைந்து வீட்டுக்கு வந்தான்; 'அம்மா எப்படி இருக்கிறார்களோ?' என்று அஞ்சியபடியே மெல்ல, படலைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அது பக்கத்தில் அம்மா உட்காந்திருந்தார்கள். 'ஐயோ! நோயோடு எழுந்து வேலை செய்கிறார்களே' என்று கலங்கினான்.

''ஏம்மா! எழுந்தே! இரவெல்லாம் தணலாய்க் காஞ்சுதே. மறுபடியும் சுரம் வந்துடும். நீ போய்ப் படுத்துக்கோ. தங்கை எங்கே?'' என்று கேட்டான்.

''உனக்கு பரீட்செனு சொன்னா, அவளுக்கும் பரீட்சையாம்.அமுதா வீட்டுக்குப்போயிட்டா.பார்த்தேன் பார்த்தேன் இன்னும் காணும். நீ பசியோடு வருவியேன்னு'' என்று சொன்னாள். அம்மாவின் அன்பில் உருகிப்போய்த் தன்னை மறந்திருந்த தாமுவுக்கு தன் கதைபற்றிய நினைவு வந்தது. அம்மாவிடம் அதைக் காட்டித் தனக்கு வரப்போதும் நல்ல எதிர்காலத்தை எடுத்துச் சொல்லி அம்மாவுக்கு மகிழ்ச்சியூட்டவேண்டும் என்ற ஆர்வத்தோடு கள்ளிப் பெட்டியைப் பார்த்தான். ஆனால் அங்கு வைத்திருந்த ஏடுகளைக் காணோம். சிறிய துண்டுக் காகிதத்தில் எழுதிய 'வெறுங்கூடு' என்ற தலைப்பு மட்டும் தனியே விழுந்து கிடந்தது. பயித்தியம் பிடித்தவன்போலக் கள்ளிப் பெட்டியைச் சுற்றிச் சுற்றி மேலும் கீழும் பார்த்தான், மறுபடியும் திறந்து ஆராய்ந்தான்.

''என்னடா பாக்குற...ஏதாவது பழைய காகிதமா? அடுப்பு பத்தலே. எடுத்துப் பத்தவைச்சுட்டேன். பரீட்சைக்கு வேண்டியதாடா...'' என்று மூச்சுத் திணற படபடப்போடு கேட்டாள் அந்த அம்மா.

''ஐயா! மகனே! பொயிட்டேயடா பொயிட்டேயடா'' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு எங்கள் குடிசை வழியே அந்தத் தாய் தனியே அழுது புலம்பிக்கொண்டு போகும் சோகக்குரல் கேட்டது. ஓலமிடும் என் நெஞ்சப் புலம்பலை அழுத்தி அடக்கிக் கொண்டு ''இல்லேம்மா!'' என்றேன்.

★

# ஆசிரியரின் நூல்கள்

**ஆராய்ச்சி**

1. கட்டுரை மணிகள்
2. SAINT TAYUMANAVAR
3. சித்திரச் சிலம்பு
4. வாழ்வும் வழிவும்

**புதினம்**

5. கள்ளி மலர்
6. தூயகம் (தமிழக அரசு பரிசு பெற்றது).

**கதைத் தொகுதி**

7. கதை மலர்கள்
8. பரிசு

**தொகுப்பு**

9. தமிழ் இலக்கியம் ஓர் அறிமுகம்

**குழந்தைப் பாடல்கள்**

10. தங்கக் கோழிக்குஞ்சு
11. மழலை மலர்கள்

**ஒப்பிலக்கியம்**

12. அன்னமய்யா ஓர் அறிமுகம்

**மொழி பெயர்ப்பு**

13. பண்டித பரமேசுவரர் உயிர்
    தெலுங்கு—தமிழ் (சாகித்ய அகடமி)
14. தியாகய்யர்
    ஆங்கிலம்—தமிழ் (சாகித்ய அகடமி)
15. கண்ணன் கருத்துரைகள்
    தி. தி. தேவத்தானம்